# சட்டக்கதிர்

சட்ட மாத இதழ்

SATTAKADIR TAMIL MONTHLY

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அறங்கூறவையங்கள் அறமே செய்யட்டும்"

பிப்ரவரி 2026 | மாசித் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 34 | February - 2026 | Issue - 4 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026


SATTAKADIR



தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சென்னை நகரில் [illegible] ஆசிரியர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் அவர்கள் வழங்கினார்.

## முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்


ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,



www.sattakadir.com    http://epaper.sattakadir.com


VIT
Vellore Institute of Technology
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in

# சட்டக்கதிர்

தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்

பிப்ரவரி 2026 http://epaper.sattakadir.com மாசித் திங்கள் இதழ் 2026

பொருளடக்கம்

1. தேவை சட்டத் தமிழ் ஆராய்ச்சி நூலகம் – தலையங்கம் 5

2. குற்றவியல் வழக்கில் பரோல் வழங்கப்பட்டமை, துறைசார் நடவடிக்கைகளில் தண்டனையை குறைக்க காரணமாக இருக்காது – இந்திய உச்சநீதிமன்றம் 7

3. வழக்கு தொடுத்தலில் காலவரம்பு வழக்குமூலம் முதலாவதாக உருவான தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும். – இந்திய உச்சநீதிமன்றம் 11

4. வாதுரையில் எந்த நிலையிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் – சென்னை உயர்நீதிமன்றம் 17

5. உயில் என்பது சாட்சியம் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். எனவே கீழமை நீதிமன்ற தீர்ப்பு உறுதி செய்யப்பட்டு, மேல்முறையீடு தள்ளுபடியாகிறது – சென்னை உயர்நீதிமன்றம் 22

6. இந்து சமய-அறநிலைய சட்டப் பிரிவு 70ன்படி வழக்கு நிலுவையின் போது ஆணையரின் ஆணைக்கு எதிராக தடையாணை வழங்கிட உரிமையியல் நீதிமன்றம் அதிகாரம் கொண்டிருக்கவில்லை. – சென்னை உயர்நீதிமன்றம் 26

7. சர்ச்சைக்குரிய உண்மைகள் சார்ந்து நிலத்தின் உரிமை அல்லது நில வகைப்பாட்டை மறுவரையறை செய்ய உத்தரவிட, உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை – சென்னை உயர்நீதிமன்றம் 29

8. பொது அதிகார முகமை வழங்கலின் பின்தொடர்ச்சியாக நிறைவேற்றப்படும் பத்திரங்கள் செல்லுவதாகும் – சென்னை உயர்நீதிமன்றம் 38

9. முகவர் மற்றும் விற்பனைப் பத்திரத்தின் நம்பகத்தன்மை மற்றும் செல்லுபடித் தன்மை குறித்த கண்டறியப்பட்ட முடிவுகள் காரணமாக 2ம் மேல்முறையீடு தள்ளுபடியாகிறது – சென்னை உயர்நீதிமன்றம் 43

10. அரசு துறைகளில் தினக்கூலி அல்லது ஒப்பந்த அல்லது தற்காலிகமாக பணியமர்வான பணியாட்களின் பணி வரன்முறைப்படுத்தப்படவியலாது – சென்னை உயர்நீதிமன்றம் 49

11. வணிக நீதிமன்றங்கள் சட்டப்படி அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்) 53

12. பொது நிதியை ‘சலுகை பெற்ற சிலருக்கு’ வழங்க முடியாது: அரசு வழக்குகளுக்கு செலவிடும் ‘அளவுக்கு அதிகமான’ கட்டணங்கள் தணிக்கை செய்யப்பட வேண்டும் – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு) 62

13. உரிமையியல் தொடர்பான சட்டப் பிரிவு 92லிருந்து அதிகார எல்லை – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்) 65

14. குற்றச் செயல்களுக்கான சிறுவர் வயதைக் குறைப்பது ஓர் பின்னடைவு – வந்தனா வெங்கடேஷ் 71

15. 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்டம் – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 74

16. 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையிலான சேர்க்கைச் சட்டம் – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 79

# சட்டக்கதிர்

*ஆசிரியர் வெளியிடுபவர்:*
முனைவர் வே.இரா.சே.சம்பத்

*சிறப்பு ஆலோசனைக் குழு:*
*மூத்த வழக்கறிஞர்கள்:*
திரு.ஆர்.காந்தி
திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்
டாக்டர் எ. தியாகராஜன்

*சட்ட/தமிழ் வல்லுநர்கள்:*
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

*வழக்கறிஞர்கள்:*
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி
திரு. எஸ். பாலமுருகன்

*சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:*
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

*மொழி பெயர்ப்பாளர் குழு:*
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன்
திரு.மா.வெற்றிவேல்

*அலுவலகப் பணிக்குழு:*
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்
திரு.வி.கதிரவன்

*வடிவமைப்பு:* வாசன் அச்சகம், சென்னை


| சந்தா விவரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | ₹ 75 | US $ 3 |
| ஆண்டுச் சந்தா | ₹ 900 | US $ 25 |
| வாழ்நாள் சந்தா | ₹ 10,000 | US $ 250 |
| காப்பாளர் சந்தா | ₹ 25,000 | US $ 500 |

சந்தாத் தொகையைச் ''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை **(Money Order)** மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


# சட்டக்கதிர் வெளியீடுகள்

சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு
(12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு) ரூ.1200/-

நீதிமன்றங்களில் தமிழ் ரூ.500/-

தமிழ்நாட்டில் நீதிமுறைகள் (அச்சில்) ரூ.500/-

சட்டவல்லுனர் பார்வையில் அண்ணா ரூ.500/-

தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி ரூ.500/-

சட்டமும் சமுதாயமும் (அச்சில்) ரூ.150/-

சென்னையிலிருந்து உலகை நோக்கி ரூ.200/-

உன்னுள் என்னைப் பார் ரூ.150/-

உலகெங்கும் கலைஞர் ரூ.300/-

"International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report" (English) Rs.500/-

''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம். சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!**

# சட்டக்கதிர்

"முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு"

மாசித் திங்கள் இதழ்

சட்டம் – 34 பிப்ரவரி 2026 கதிர் – 4

## தேவை சட்டத் தமிழ் ஆராய்ச்சி நூலகம்

தமிழ்நாட்டில் அரசு சட்டக் கல்லூரிகள் மட்டும் இயங்கி வந்த சூழ்நிலையில் அரசின் சார்பிலும் தனியார் பங்களிப்பின் மூலமாகவும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் மூலமாகவும் நாற்பதுக்கும் மேற்பட்ட சட்டப் பள்ளிகள், சட்டக் கல்லூரிகள், சட்டப் பல்கலைக் கழகங்கள் எனப் பலவும் தொடங்கப்பட்டு, தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கில் சட்டம் படிக்கும் மாணவர்களும், வழக்கு நடத்தும் வழக்குரைஞர்களும் உள்ளனர்.

சட்ட விளக்கங்கள் பெறுவதற்கும் நீதிமன்றங்களில் வழக்காடுவதற்கு போதிய தகுதியுடையவர் உள்ளனர். தமிழ்நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழியாகவும் மக்கள் மொழியாகவும் இருந்தாலும் இந்தியாவில் சட்டம் மற்றும் நீதிமன்ற மொழி ஆங்கிலமே. அந்தந்த மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகள் மாநில அளவில் நீதிமன்ற மொழியாக ஆட்சி மொழியாகக் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக உள்ளன.

இப்போது சட்டக் கல்லூரிகள் பல உள்ள நிலையில் அதில் படிக்கின்ற மாணவர்களுக்குச் சட்ட நூல்கள், சட்ட ஆராய்ச்சி நூல்கள், சட்ட மேற்கோள் நூல்கள், வணிகம், அரசியல், பொருளாதாரம், வரலாறு எனப் பல்வேறு துறை நூல்கள் கொண்ட சட்டத் தமிழ் ஆராய்ச்சி நூலகம் ஒன்றினை தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் தொடங்கிட வேண்டும். நூலகம் மூடப்படாமல் 365 நாட்களும் திறந்திருக்கும் வகையில் அந்த நூலகம் அமைந்திட வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் கிரீன்வேஸ் சாலையிலிருந்து புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட நிலையிலும் கிரீன்வேஸ் சாலையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்தில் சில அறைகளிலும் இயங்கிக் கொண்டும் பல அறைகள் மூடியும் உள்ளன. குறிப்பாகப் பழைய கட்டிடத்தில் துணைவேந்தர் அலுவலகம், பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிறது. புதிய கட்டிடத்திலும் துணைவேந்தர் அலுவலகம், பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிறது. இரண்டு இடங்களிலும் மிகப் பெரிய அறைகளை பிடித்து வைத்துள்ளனர். 3 ஏக்கர் பரப்பில் இயங்கி வந்த, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் இன்று 18 ஏக்கர் முழு கட்டிட வசதிகள் செய்த பிறகு அங்கு முழு பல்கலைக்கழகம் மாறிய பிறகும் பழைய கட்டிடத்தையும் விடாமல் உள்ளனர். பல்கலைக்கழக கட்டிடம் குறித்து பொதுப் பணித் துறை மற்றும் சட்டத் துறையிடம் எடுத்துச் சென்ற பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் இல்லாத காரணத்தால் நீதிபதி திரு.பாரதிதாசன் அவர்களை அமைப்பாளராக அரசு நியமித்தது. இரண்டு இடங்களில் துணைவேந்தர், பதிவாளர் அலுவலகம் இயங்குவது அவரது பார்வைக்கு எடுத்துச் சென்ற போது விசாரிப்பதாகக் கூறியுள்ளார். மூடியுள்ள ஒரு கட்டடத்தில் முழுநேர சட்டத் தமிழ் ஆராய்ச்சி நூலகத்தை சட்டக் கதிர் பவுண்டேஷன் உருவாக்கவும் ஒருங்கிணைப்புப் பணியினையும் நூல் சேகரிப்புப் பணியினையும் செய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக 7000 நூல்களை சேகரித்து வைத்துள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1000 நூல்களை வழங்கியுள்ளார். தமிழ் வளர்ச்சித் துறை 1000 நூல்கள் வழங்கியுள்ளது. சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆராய்ச்சியாளர்களும் வழக்குரைஞர்களும் நீதிபதிகளும் எளிதில் பயன்படுத்தக் கூடிய வகையில் கணினி வசதியுடனும் குளிர்சாதன வசதியுடனும் தலைசிறந்த நூலகத்தைச் சட்டத் தமிழ் கல்விக்காகத் திறந்திட வேண்டும். இது காலத்தின் தேவை.

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சராகப் பணியாற்றிய காலங்களில் நீதிமன்றக் கட்டடங்கள் புதிதாகக் கட்டவும் பழுதடைந்த கட்டடங்கள் செப்பனிடவும் தமிழ்நாடு அரசு சார்பில் கோடிக்கணக்கில் பண ஒதுக்கீடு செய்தார். அவருடைய ஆட்சிக் காலத்தில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தினை உருவாக்கினார். அவருக்காக ஒதுக்கப்பட்ட வீட்டினை கூடப் பல்கலைக் கழகம் தொடங்கத் தந்தார்.

தமிழ்நாட்டில் உயர்நீதிமன்றத்தின் கூடுதல் வழக்காடு மொழியாகத் தமிழைக் கொண்டு வர வேண்டும் என அன்றைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் இன்று வரையில் அதற்கான ஆணை வெளியிடப்படவில்லை.

உச்சநீதிமன்ற அதற்காக உட்கட்டமைப்புப் பரிந்துரைப்படி கட்டுமானப் பணிகள் பலவும் நடைபெற்று வருகின்றன. அவை முழுமை பெற்றால் உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகத் தமிழ் வரக்கூடும்.

கட்டுமானப் பணிகள் என்றால் சட்டத் தமிழ் நூல்கள், சட்டத் தமிழ் இதழ்கள், தமிழில் கணினி மென்பொருள்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள் என அனைவரும் தமிழ்மொழியை நீதிமன்றத்தில் பயன்படுத்த பயிற்சி என பலவும் தேவை.

தமிழ்நாடு அரசு சட்ட ஆட்சி மொழி ஆணையத்தை உருவாக்கி, தொடர்ந்து பல்வேறு சட்டங்களை பல தமிழில் மொழிபெயர்த்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகச் சட்டத் தமிழ் ஆராய்ச்சி நூலகம் தேவைப்படுகிறது.

இதன் மூலம் சட்டம் பயிலும் மாணவர்களும் வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் பெரிதும் பயன்பெறுவர். இதனால் உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்கு மொழியாக விரைவில் வரும். எனவே முழுநேர சட்டத் தமிழ் ஆராய்ச்சி நூலகத்தைத் திறந்திட வேண்டும். இதனையே இன்றைய தமிழ் கூறும் நல்லுகம் எதிர்நோக்கிக் காத்திருக்கின்றது.

– ஆசிரியர்

# குற்றவியல் வழக்கில் பரோல் வழங்கப்பட்டமை, துறைசார் நடவடிக்கைகளில் தண்டனையை குறைக்க காரணமாக இருக்காது

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.பிரஷாந்த் குமார் மிஸ்ரா**
**மாண்புமிகு நீதிபதி திரு.என்.வி.அஞ்சரியா**
**SLP (C) 23418/2025**
**நாள் 12-01-2026**
**(2026 Livelaw(SC) 78)**

**கண்காணிப்பு பொறியாளர்,**
**தமிழ்நாடு மின்வாரியம், சென்னை ...மேல்முறையீட்டாளர்**
**-எதிர்-**
**தொழிலாளர் நீதிமன்றம், மதுரை மற்றும் சிலர் ...எதிர்மனுதாரர்கள்**

1. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞரின் வாதம் கேட்கப்பட்டது.

2. அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தபோதும், எதிர்மனுதாரர்கள் சார்பில் யாரும் முன்னிலை யாகவில்லை.

3. அனுமதி வழங்கப்படுகிறது.

4. உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் இரு நீதியர் அமர்வு எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் மேல்முறை யீட்டை தள்ளுபடி செய்ததுடன், கற்றறிந்த தனி நீதிபதி வழங்கிய உத்தரவை உறுதிப்படுத்தி யதுடன், அதன்படி தொழிலாளர் நீதிமன்றம், மதுரை, I.D. எண் 132/2005-ல் 11.05.2009 அன்று எதிர்மனுதாரர் - தொழிலாளிக்கு (தற்போது மறைந்தவர்; அவரின் சட்ட வாரிசுகள் மூலம் பிரதிநிதித்துவம் பெறுகிறார்) ஆதரவாக வழங்கிய விருதை உறுதி செய்தது. மேலும், பணி நீக்கம் என்ற தண்டனையை மூன்று ஆண்டுகள் ஊதிய உயர்வு நிறுத்தம் ஆக மாற்றிய உத்தரவையும் உறுதிப்படுத்தியது.

5. தொழிலாளர் முதலில் ஒப்பந்தத் தொழிலாளராக பணியமர்த்தப்பட்டார். பின்னர், மேல்முறையீட்டாளர்-மின்சார வாரியம் தயாரித்த திட்டத்தின் அடிப்படையில், 06.04.1998 அன்று உதவியாளராக நிரந்தரமாக இணைக்கப்பட்டார். அவரின் கல்விச்சான்றிதழ் போலியானது என்றும், தொழிலாளரின் உண்மைப் பெயர் 'திரு.பி.பழனியப்பன்' என்றும், அவர் தனது சகோதரன் 'திரு.பி.தங்கையன்' என்பவராக ஆள்மாறாட்டம் செய்து, சகோதரனின் கல்விச் சான்றிதழை பயன்படுத்தி வேலை பெற்றார் என்றும் தெரிய வந்ததைத் தொடர்ந்து, அவருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டது. துறைசார் விசாரணை முடிவடைந்த பிறகு, 31.01.2005 அன்று வெளியிடப்பட்ட உத்தரவின் படி, அவர் பணியிலிருந்து நீக்கப்பட்டார். ஆனால், தொழிலாளர் நீதிமன்றம் 11.05.2009 அன்று வழங்கிய உத்தரவின் மூலம், பணி நீக்கம் என்ற தண்டனையை, எதிர்கால ஊதிய உயர்வுகளுக்கு பொருந்துமாறு, மூன்று ஆண்டுகள் ஊதிய குறைப்பு மற்றும் ஊதிய உயர்வு நிறுத்தமாக மாற்றியது.

6. இதற்கு எதிராக மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த நீதிப்பேராணை கோரும் மனுவில், தனி நீதிபதி தொழிலாளர் நீதிமன்றத்தின் விருதை உறுதிப்படுத்தினார். அதனைத்

தொடர்ந்து தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மேல்முறையீட்டில், உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு, தண்டனையை மூன்று ஆண்டுகள் ஊதிய உயர்வு நிறுத்தம் என்பதி லிருந்து கட்டாய ஓய்வு ஆக மாற்றியது.

7. இரு நீதிபதிகள் அமர்வு, முக்கியமாக, குற்றவியல் நடவடிக்கைகளில், எதிர்மனுதாரர் – தொழிலாளிக்கு குற்றவாளிகள் பரோல் சட்டம், 1958–ன் கீழ் பரோல் நன்மை வழங்கப் பட்டதையும், அதனால் கல்விச்சான்றிதழ் போலி செய்த குற்றத்திற்காக அவருக்கு தண்டனை விதிக்கப்படவில்லை என்பதையும் அடிப்படை யாகக் கொண்டது.

8. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்திய அரசு –எ– பக்ஷி ராம் (1990) 2 SCC 426 என்ற வழக்கில் சட்டம் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது அதாவது, குற்றவாளியை பரோலில் விடுவித்தது என்பது, தண்டனைக்கான குற்றத் தீர்ப்பின் களங்கத்தை நீக்குவதில்லை. குற்றத் தீர்ப்பு நிலைநிறுத்தப்பட்டிருக்கும் வரை, பரோலில் விடுவிக்கப்பட்டதையே அடிப்படையாகக் கொண்டு, பணி நீக்கம் என்ற தண்டனையை கட்டாய ஓய்வாக மாற்ற முடியாது. அதே சமயம், எதிர்மனுதாரர் – தொழிலாளி இறந்துவிட்டதால், பிரச்சனைக்குரியதாக எதிர்கொள்ளப்பட்ட உத்தர வினால் அவரது குடும்பத்தாருக்கு கிடைத்த நன்மைகளை குழப்ப முறையீட்டாளர்–வாரியம் விரும்பவில்லை என்றும், ஆனால் உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு தவறாக விளக்கிய சட்டம், எதிர்காலத்தில் இதுபோன்ற வழக்குகளில் முன்னுதாரணமாக அமையாமல் இருக்க திருத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

9. முறையீட்டாளரின் வழக்கறிஞர் முன் வைத்த வாதங்களை கவனித்தபின், பக்ஷி ராம் (மேற்கூறிய) வழக்கில் இந்நீதிமன்றம் கூறியதும், அதையே உயர்நீதிமன்றமும் குறிப்பிட்டதுமான சட்டக் கோட்பாடு என்னவெனில், பரோலில் விடுவித்தல் என்பது குற்றத் தீர்ப்பின் களங்கத்தை நீக்குவதில்லை என்பதே.

10. துல்லியமாகச் சொல்வதானால், பக்ஷி ராம் வழக்கில் உள்ள கீழ்க்கண்ட பத்தி குறிப்பிடத் தக்கது:

''8. இந்த விதிகளிலிருந்து தெளிவாகப் புரிவது என்னவெனில், குற்றவாளியை பரோலில் விடுவிப்பது, குற்றத் தீர்ப்பின் களங்கத்தை நீக்குவதில்லை. குற்றவாளிகள் பரோல் சட்டத்தின் பிரிவுகள் 3, 4 மற்றும் 9 ஆகியவற்றின் வரம்பைப் பற்றி, கோட்ட தனி அலுவலர், தெற்கு ரயில்வே –எ– டி.ஆர்.செல்லப்பன் (SCC p.198) என்கிற வழக்கில் மாண்புமிகு நீதிபதி ஃபாசல் அலி அவர்கள் பின்வருமாறு அவதானித்திருந்தார்:

''பரோலில் விடுவிக்கும் உத்தரவு என்பது, குற்றம் நிரூபிக்கப்பட்டு குற்றவாளி தண்டிக்கப் பட்ட பின்னரே அமலுக்கு வருகிறது. ஆகவே, குற்றவாளி குற்றம் செய்துள்ளார் என்ற நீதிமன்றத்தின் கண்டறிதல் அழிக்கப்பட முடியாது. பரோலில் விடுவிப்பது என்பது நீதிமன்றம் விதிக்க வேண்டிய தண்டனையின் மாற்றாக மட்டுமே. இளம் குற்றவாளிகளை சீர்திருத்தும் மனிதநேயக் கோணத்தில் சட்டம் இதனை அனுமதிக்கிறது. பிரிவு 9(3) தெளிவாகக் காட்டுவது என்னவெனில், பரோலில் விடுவிக்கப் பட்ட நபர் விதிமீறினால், அவரை மீண்டும் முதன்மைக் குற்றத்திற்காக தண்டிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது. ஆகவே, குற்றத் தீர்ப்பு பரோல் உத்தரவால் நீக்கப்படுவ தில்லை; களங்கம் தொடர்கிறது.''

9. பிரிவு 12–ன் வரம்பு குறித்து, நீதிபதி மேலும் கூறியதாவது (SCC P.198, பத்தி 12):

''பிரிவு 12, குற்றத் தீர்ப்பின் விளைவுகளை முற்றிலும் அழிக்கிறது என்ற வாதம் தவறானது. 'குற்றத் தீர்ப்புடன் இணையும் தகுதியின்மை' என்பது, வேறு சட்டத்தின் கீழ் ஏற்படும் தகுதி யின்மையைக் குறிக்கிறது. இந்திய தண்டனைச் சட்டத்தில் அத்தகைய தகுதியின்மை இல்லை.

ஆகவே, பிரிவு 12 குற்றச்செயலை அழிக்கவோ, தானாகவே தகுதியின்மை ஏற்படுவதை நீக்கவோ செய்யாது.''

10. குற்றவியல் விசாரணையில், குற்றத் தீர்ப்பு ஒன்றாகும்; தண்டனை மற்றொன்றாகும். தவறான நடத்தை காரணமாக விதிக்கப்படும் துறைசார் தண்டனை இதைவிட வேறுபட்ட மூன்றாவது ஒன்றாகும். சட்டத்தின் பிரிவுகள் 3 அல்லது 4–ஐ நீதிமன்றம் பயன்படுத்தும் போது, அது குற்றத் தீர்ப்பை குறித்து மட்டும் அல்லாமல்; குற்றவாளி அனுபவிக்க வேண்டிய தண்டனையை மட்டுமே குறித்தாகும். குற்றவாளிக்கு தண்டனை விதிப்பதற்குப் பதிலாக, நல்ல நடத்தை அடிப்படையில் பரோலில் அவரை நீதிமன்றம் விடுவிக்கிறது. இருப்பினும், குற்றத் தீர்ப்பு மாற்றமின்றி தொடர்கிறது; குற்றத் தீர்ப்புடன் இணைந்த களங்கம் நீக்கப்படுவ தில்லை. துறைசார் நடவடிக்கைகளில், குற்றவியல் குற்றச்சாட்டில் குற்றத் தீர்ப்புக்குக் காரணமான நடத்தையின் அடிப்படையில், குற்றம் செய்த பணியாளரை பணிநீக்கம் செய்யலாம். பணி யிலிருந்து அகற்றலாம் அல்லது பதவி தாழ்வு செய்யலாம் [இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 311(2)(b) மற்றும் துளசிராம் பட்டேல் வழக்கை காண்க].

11. சட்டத்தின் பிரிவு 12, குற்றத்திற்கு வழிவகுத்த தவறான நடத்தை அல்லது அதனடிப் படையிலான குற்றத் தீர்ப்பு காரணமாக, சட்டப் படி துறை நடவடிக்கை எடுப்பதைத் துறையைத் தடுக்கவில்லை. இந்தப் பிரிவு, ஒருவரை துறை சார் தண்டனையிலிருந்து விடுவிப்பதற்காக உருவாக்கப்படவில்லை. ஆகவே, குற்றத் தீர்ப்பின் காரணமாக அவர் பணியிலிருந்து நீக்கப்பட்டிருந்தால், அவரை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்ற கேள்வியே எழுவதில்லை. இது பிரிவு 12–ன் சொற்றொடரி லிருந்தே தெளிவாகிறது. இந்த அம்சத்தில், உயர்நீதிமன்றங்கள் அனைத்தும் ஒரே கருத்தை வெளிப்படுத்தியுள்ளன. சென்னை உயர் நீதிமன்றம் (ஆர்.குமாரசாமி அய்யர் –எ– ஆணையாளர், நகராட்சி, திருவண்ணாமலை மற்றும் பி.எம்பரு –எ– தலைவர், சென்னை துறைமுக வாரியம், ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் (ஏ.சத்யநாராயண மூர்த்தி –எ– மண்டல மேலாளர், ஆயுள் காப்பீட்டுக் கழகம்), மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றம் (பிரேம் குமார் –எ– இந்திய அரசு), பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் (ஓம் பிரகாஷ் –எ– இயக்குனர் அஞ்சல் பணிகள் (அஞ்சல் மற்றும் தந்தி துறை), பஞ்சாப் சரகம், அம்பாலா), டெல்லி உயர்நீதிமன்றம் (இயக்குனர், அஞ்சல் சேவைகள் –எ– தயாநந்த்) ஆகிய வழக்குகளில் இதே கருத்தைத் தெரிவித்துள்ளன. மேற்கண்ட உயர் நீதிமன்றங்களின் இந்தக் கருத்து, டிஆர்.செல்லப்பன் வழக்கில் இந்நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

12. டிரிகாராம் –எ– வி.கே.சேத் வழக்கில், பிரிவு 12-I மேற்கோள் காட்டிய பின்னர், இந்நீதிமன்றம், அங்கு மனுதாரருக்கு விதிக்கப் பட்ட பணி நீக்கம் என்ற தண்டனையை ''பணி யிலிருந்து அகற்றல்'' என மாற்றியது; இதனால், அவர் பிற நிறுவனங்களில் எதிர்கால வேலை வாய்ப்பைப் பெற உதவ வேண்டும் என்பதே நோக்கமாகும்.

13. ஆகவே, பிரிவு 12 தெளிவானதாகும்; அது குற்றவாளி ''அத்தகைய சட்டத்தின் கீழ் குற்றத் தீர்ப்புடன் இணைந்துள்ள தகுதியின்மை, ஏதேனும் இருந்தால், அதனால் பாதிக்கப்படக் கூடாது'' என்பதையே மட்டும் கூறுகிறது. இங்கு குறிப்பிடப்படும் 'அத்தகைய சட்டம்' என்பது, குற்றத் தீர்ப்பின் காரணமாக தகுதியின்மையை விதிக்கும் வேறு சட்டமாகும். உதாரணமாக, குற்றத் தீர்ப்பின் காரணமாக, ஒருவரை ஏதேனும் பதவிக்கு நியமிக்க முடியாது அல்லது ஏதேனும் அமைப்பிற்கான தேர்தலில் போட்டியிட முடியாது என்று ஒரு சட்டம் தகுதியின்மையை விதித்தி ருந்தால், அந்தத் தகுதியின்மை, பிரிவு 12–ன் மூலம் நீக்கப்படும். இதுவே பிரிவு 12–ன்

உண்மையான வரம்பும் விளைவும் ஆகும். ஆனால், குற்றத் தீர்ப்பின் காரணமாக பணியி லிருந்து நீக்கப்பட்ட ஒருவர், நல்ல நடத்தைப் பரோல் நன்மை பெற்றதன் அடிப்படையில் மீண்டும் பணியில் அமர்த்தப்பட வேண்டும் என்று கூறுவது வேறு விஷயம்; அத்தகைய கருத்துக்கு பிரிவு 12-ன் சொற்களில் எந்த ஆதாரமும் இல்லை. எனவே, உயர்நீதிமன்றத்தின் உத்தரவு நிலைநிறுத்தப்பட முடியாது.''

11. பக்ஷி ராம் (மேற்கூறிய) வழக்கில் இந்த நீதிமன்றம் வகுத்துள்ள மேற்கண்ட சட்டத்தை கருத்தில் கொண்டபோதும், இவ்வழக்கில் தொழிலாளரின் குற்றத் தீர்ப்பு தகுதியின்மை யாகாது என்றும், அந்தக் குற்றத் தீர்ப்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தொழிலாளரை பணியிலிருந்து நீக்க முடியாது என்றும் உயர் நீதிமன்றம் கூறியது தவறாகும்.

12. எங்களின் பரிசீலனை செய்து தீர்மானித்த கருத்தின்படி, உயர்நீதிமன்றம் செய்த அவதானிப்பு, பக்ஷி ராம் (மேற்கூறிய) வழக்கில் வகுத்த சட்டத்திற்கு முற்றிலும் முரணானதாகும். ஆகவே, பிரச்சனைக்குரியதாக எதிர்கொள்ளப் பட்ட உத்தரவின் பத்தி 14-ல், எதிர்மனுதாரர் – தொழிலாளருக்கு ஆதரவாக உயர்நீதிமன்றம் செய்த அவதானிப்பை ரத்து செய்கிறோம்; மேலும் பக்ஷி ராம் வழக்கில் வகுத்த சட்டத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

13. இருப்பினும், எதிர்மனுதாரர் – தொழிலாளர் இறந்துவிட்டதை கருத்தில் கொண்டு, பிரச்சனைக் குரியதாக எதிர்கொள்ளப்பட்ட தீர்ப்பில் உயர் நீதிமன்றம் செய்த தண்டனை மாற்றத்தில் நாங்கள் தலையிடவில்லை.

14. மேற்கண்ட விதிகளின்படி, சிவில் மேல் முறையீடு முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது.

15. நிலுவையில் உள்ள மனுக்கள் ஏதேனும் இருப்பின், அவையும் முடிவுக்கு வருகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## பொதுப்பிரிவு இடங்களில் சேர இட ஒதுக்கீடு மாணவர்களுக்கும் தகுதி உண்டு

### உச்சநீதிமன்றம் தீர்ப்பு

பொதுப் பிரிவு இடங்களில் சேர இட ஒதுக்கீடு மாணவர்களுக்கும் தகுதி உண்டு என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தில் (ஏ.ஏ.ஐ.) காலியாக இருந்த 245 இளநிலை உதவியாளர் பணியிடங்களை 2013ஆம் ஆண்டு நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில், பொதுப் பிரிவில் இருந்த 122 பணியிடங்களில், இட ஒதுக்கீடு சலுகை வரம்பிற்குள் வரும் ஓபிசி., எஸ்சி., எஸ்டி பிரிவினர் மற்றும் இட ஒதுக்கீடு சலுகை வரம்பிற்குள் வராத பிற பிரிவினர் நியமிக்கட்டனர்.

இதை எதிர்த்து, காத்திருப்போர் பட்டியலில் 10ஆம் இடத்தில் இருந்த இட ஒதுக்கீடு சலுகை வரம்பிற்குள் வராத பிரிவைச் சேர்ந்த சாம் கிருஷ்ணா என்பவர் கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். அதில் பொதுப் பிரிவு இடங்களில் இட ஒதுக்கீடு சலுகை பெற்றவர்களை நியமிப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கில் 2020ஆம் ஆண்டில் தீர்ப்பளித்த கேரள உயர்நீதிமன்றம் பொதுப் பிரிவு இடங்களில் இட ஒதுக்கீடு சலுகை பெற்றவர்களை நியமிக்க முடியாது எனக் கூறி அதை ரத்து செய்தது.

கேரள உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அதை விசாரித்த நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், சதீஷ் சந்திர சர்மா ஆகியோரைக் கொண்ட அமர்வு, பொதுப் பிரிவு என்பது இட ஒதுக்கீடு ஆகாது, முழுவதும் திறந்த இடமாகும். அந்த இடங்களில் தகுதி வாய்ந்த எந்தப் பிரிவினரையும் நியமிக்கலாம். பொதுப் பிரிவு கட் ஆஃப் மதிப்பெண்களை விட அதிக மதிப்பெண் களை இட ஒதுக்கீடு சலுகை பெற்றோர் எடுத்திருந்தால், அவர்களும் அந்த இடங்களுக்குத் தகுதியானவர்கள்தான் என்றனர். அத்துடன் கேரள உயர்நீதிமன்றத்தின் முந்தைய உத்தரவை யும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

**நன்றி: தினமணி 17.01.2026**

# வழக்கு தொடுத்தலில் காலவரம்பு வழக்குமூலம் முதலாவதாக உருவான தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.பங்கஜ் மித்தல்**
**மாண்புமிகு நீதிபதி திரு.எஸ்.வி.என்.பாஷியா**
**உ.எண் 5180/2025 [சிவிம(உ) எண் 13459/2024இல் உருவாகிறது]**
**15.4.2025**
**2025 (2) சிடிசி 857**
**நிகிலா திவ்யாங்க் மேத்தா மற்றொருவர் ...மேல்முறையீட்டாளர்கள்**
**–எதிர்–**
**ஹிதேஷ் பி.சங்கவி மற்றும் பிறர் ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்**

## தீர்ப்புரை

**பங்கஜ் மித்தல், நீதிபதி**

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் முதுநிலை வழக்குரைஞர் திரு.கவரவ் அகர்வாலையும் எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில் வழக்குரைஞர் திரு பத்ரீஷ் எஸ்.ராஜையும் கேட்டறிந்தோம்.

3. உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புச் சட்டம் [சுருக்கமாக உவிதொசசி வகுமுறை 7 விதி 11 கீழ் தாக்கலான எதிர்மனுதாரர்களது விண்ணப்பம் அடிப்படையில் உரிமையியல் வழக்கின் வழக்குரை முதலாவது நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. முன் சொன்ன ஆணையை உயர்நீதிமன்றம் திருப்பியகற்றியிருந்து தகுதி பாடுகள் பேரிலான முடிவுக்காக வழக்குரையை மீட்டளித்துக் கொண்டு எதிர்வாதியின் மேல் முறையீடை ஏற்றுக் கொண்டுள்ளாது.

4. அகமதாபாத் நகர உரிமையியல் நீதிமன்ற அறை நீதிபதியின் 23.10.2018 தேதிய ஆணையை நீக்கறவாக்கிக் கொண்டு உரிமை யியல் வழக்கெண் 1758/2017 தகுதிப்பாடு பேரில் முடிவெடுத்தலுக்காக மீட்டளிப்பாக பணித்துக் கொண்டும் இயற்றப்பட்ட உயர் நீதிமன்றத்தின் 8.2.2024 தேதிய குறையுறு தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் இந்த மேல்முறை யீட்டில் எதிர்க்கப்பட்டுள்ளது.

5. அவரது அமரர் தந்தை பிரமோத் கேசுர் தாஸ் சங்கவியால் நிறைவேற்றப்பட்ட 4.2.2014 தேதிய உயிலையும் 29.09.2014 தேதிய உய்தி அனுபந்தத்தையும் அவற்றின் விளைவுறு பலன்க்ளையும் அறவே இல்லாநிலையதாக அறிவித்தலுக்கும் முன் சொன்ன உயிலினது மற்றும் உயில் அனுபந்தத்தின் தொடர்கையான பரிவர்த்தனை எதனிலும் எதிர்வாதிகள் ஈடுபடலை தடுத்து நிறுத்திடும் நிற்கதர உறுத்துக் கட்டளை வழங்கலுக்கும் நீதிமன்றலிருந்து பணித் தலாணை கோரிக் கொண்டு திருமதி ஹர்சா பென் விஜே மேத்தா, திருமதி நிகிலா திவ்யாங்க் மேத்தா, திருமதி அமி ராஜேஷ் பரீக் மற்றும் திரு.நிலவ் திவ்யாங்க் மேத்தா ஆகியோர் உட்பட்ட நான்கு எதிர்வாதிகளுக்கு எதிரான வழக்கு எண் 1758/2014ஐ அகமதாபாத நகர் உரிமை யியல் நீதிமன்றத்தில் வாதி திரு.பி.ஹிதேஷ் சங்க்வி தாக்கலிட்டார்.

6.அவரது வசிப்பிடத்தில் 21.10.2014 அன்று மரணித்த இறந்த பிரமோத் கேசூர்தாஸ் சங்கவியின் மகன் வாதி ஹிதேஷ் ஆவார் என வாதி ஆணித்தரமாக கூறுகிறார். அவரது மூன்று மகள்கள் 1–3வது எதிர்வாதிகளும் பெயரன்– 4வது எதிர்வாதியும் [2வது எதிர்வாதியினது மகன்] அவருக்கு பின் ஜீவித்தார்கள். இறந்தவர் இறுதி மூச்சை 21.10.2014 அன்று விட்டார் என மேலும் ஆணித்தரமாக சந்தேகமற்ற சொற் களில் வாதி மேலும் கூறுகிறார். அடுத்து 2014 நவம்பர் முதலாவது வாரத்தில் மேல் குறிப்பிடப்

பட்ட உயிலையும் உயில் அனுபநத்தையும் இறந்தவர் நிறைவேற்றியிருந்தார் என்பதை 1–3வது எதிர்வாதிகள் வாதிக்கு தெரியப் படுத்தினார்கள். அவர் ஆச்சர்யத்தில் மூழ்கினார்.

7. வழக்குக்கான வழக்கு மூலம் முதலாவ தாக 4.2.2014 அன்று அவரது தந்தையால் நிறைவேற்றப்பட்ட உயில் பதிவானபோது, மீண்டுமாக 20.10.2014 அன்று உயில் அனுபந்தம் பதிவான போதும் இறுதியாக 21.10.2014 அன்று அவரது தந்தை இறந்த போதும் எனவுள்ள மூன்று தருணங்களில் உருவாகியிருந்தது என வாதி மேலும் கூறினார்.

8.வழக்கிலுள்ள தாவா தன்னிலையில் குடும்ப உள்விவகாரம் ஆகும் அதாவது அவரது உயில் மற்றும் உயில் அனுபந்தம் தொடர்பாக வும் உயிலும் உயில் அனுபந்தமும் அறவே இல்லாநிலையதாகும் என அறிவித்தல் நோக்கங் களுக்கும் இறந்த பிரமோத் கேசுர்தாஸ் சங்கவிக்கும் அவரது மகனுக்கும் மகள் களுக்கும் இடையிலானதாகும். வழக்குக்கான வழக்குமூலம் முதலாவதாக 4.2.2014 அன்றும் இரண்டாவதாக 20.9.2014 அன்றும் இறுதியாக 21.10.2014 அன்றும் உருவானது என வாதி வாதிட்டார்,

9.மேலுள்ள பின்புலத்தில் வழக்கு கால வரம்பிலானது என்பது பற்றி உறுத்துக்கூற்று எதையும் வாதி வைத்திருந்ததில்லை எனவும் விதிக்கப்பட்ட வரம்புகால காலகெடுவுக்குள் வழக்கு தொடரப்பட்டது என்பதை காட்டுதல் வாதியினது முதன்மை பொறுப்பாகும் எனவும் ஆன கூற்று அடிப்படையில் உவிதொச வகுமுறை 7 விதி 11 கீழான நோக்கப்படும் விண்ணபத்தை [Ex.25]வழக்குரை நிராகரிப்புக்காக 2வது எமேமி இயக்கினார். அத்தகைய வாதுரைகள் இல்லாத நிலையில் உவிதொச வகைமுறை 7 விதி 11 கீழ் வழக்குரை நிராகரிப்புக்கு ஏற்றதாகும்.

10. விதிக்கப்பட்ட வரம்புகால அளவுக்குள் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் குறித்த காலக்கெடுவுக்குள் வழக்கு தாக்கலாகி யுள்ளது என உறுத்துக்கட்டளை காட்டி நிலை நாட்ட வாதி தவறியுள்ளார் எனவும் வாதிட்டுக் கொண்டு ஒத்த விண்ணப்பம் [Ex.28], வழக்குரை நிராகரிப்புக்காக உவிதொச வகுமுறை 7 பிரிவு 11 கீழ் 3வது எதிர்வாதியால் மீண்டும் தாக்கலானது. உயிலையும் உயில் அனுபந்தம் பற்றி 2014 நவம்பர் முதலாவது வாரத்தில் வாதி அறிந்திருந்தார். ஆனால் வழக்கு 2014 நவம்பர் முதலாவது வாரத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள் தாக்கலிடப்படவில்லை. அது 21.11.2017 அன்றுதான் தாக்கலானது. அவ்வாறாக அது மேம்போக்கிலேயே கால வரம்பால் தடையாகிறது.

11. அதன் பயன்விளைவுடன் விதிக்கப்பட்ட காலவரம்பு கால அளவுக்குள் வழக்கு தொடுக்கப் படுகிறது என்பதை முதல் தோற்றத்தில் காட்டுதல் வாதியின் முதன்மை பொறுப்பாகும் என வாதிட்டுக் கொண்டு மற்றுமொரு விண்ணப்பம் {Ex.33} 4வது எதிர்வாதியால் தாக்கலானது. வழக்கு 21.11.2017 அன்று தாக்கலிடப்பட்ட தால் உயில் மற்றும் உயில் அனுபந்தம் பற்றி வாதிக்குத் தெரிந்த பின் மூன்றாண்டுகளுக்கு பின்கூட்டியதாகி அவ்வாறே காலவரம்பு சட்ட நெறியால் தடையாகிறது என்பது வழக்குரை யின் எளிய வாசிப்பு காட்டுகிறது.

12. வழக்கு குறித்த கால அளவுக்குள் தாக்கலானது எனவும் அது வரம்புகாலத்துக்கு உட்பட்டதா அல்லது தாண்டியதா என்பதை நிரூபிக்க சாட்சியம் அளித்திட தரப்பினர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் வாதிட்டுக் கொண்டு வாதி மேல்சொன்ன் மூன்று விண்ணப்பங்களுக்கு பதிலிட்டார்.

13. உவிதொச வகுமுறை 7 விதி 11 கீழான மூன்று விண்ணப்பங்களும் {Ex.25,28,33} நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு வந்தன. நீதிமன்றம், வழக்குரையில் வைக்கப்பட்ட வாதுரைகளது எளிய வாசித்தல் அடிப்படையில் வழக்கின் வழக்குமூலம் முதலாவதாக 2014 நவம்பர் மாதத்து முதல் வாரத்தில் எழுந்த போது வழக்கு 21.11.2017 அன்று தாக்கலானது எனவாக தீர்ப்பிட்டது. வாதியாலான வழக்குரைப்

படி உயில் மற்றும் உயில் அனுபந்தம் பற்றி 2014 நவம்பர் முதலாவது வாரத்தில் அவருக்கு தெரிந்தது என்பதாகும். 1983இன் காலவரம்பு சட்ட உறுப்பு 58 காரணமாக, வழக்கிடலுக்கு உரிமை முதலாவதாக உற்றடைந்த போது வழக்கு மூன்றாண்டுகளுக்குள் தாக்கலாகியிருந்திருக்க வேண்டும். 2014 நவம்பர் முதலாவது வாரத்திலிருந்து மூன்றாண்டுகளுக்குள் வழக்கு தாக்கலாகவில்லை என்பதால் அது தெளிவாக காலவரம்பால் தடையாகிறது. அதற்கிணங்க சா.25, 28 மற்றும் 33 விணணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழக்குரை உவிதொச வகுமுறை 7 விதி 11 கீழ் நிராகரிப்பாக உத்தரவானது.

14.எனினும், காலவரம்பு அம்சம் பற்றி சாட்சியம் அளிக்க தரப்பினர்கள் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் உயிலும் உயில் அனுபந்தமும் அறவே இல்லாநிலையதாக அறிவிக்கப்படலுக்கான வேண்டுகை தவிர்த்து, வழக்குரையில் பிற பரிகாரங்களும் கோரப்பட்டன எனவும் வழக்குரை பகுதியில் நிராகரிப்புக்கு ஏற்றதாகவில்லை எனவும் ஆன காரணத்துக்காக மேலுள்ள தீர்ப்பாணையும் தீர்ப்புரையும் குறையுறு 8.2.2024 தேதிய தீர்ப்பாணையாலும் தீர்ப்புரையாலும் உயர்நீதிமன்றத்தால் திருப்பியகற்றப்பட்டது.

15. மேலுள்ள பொருண்மை பின்புலத்தில், 4.2.2014 தேதிய உயிலும் 20.9.2014 தேதிய உயில் அனுபந்தமும் அறவே இல்லாநிலையதாக அறிவிக்கப்படலுக்காக 21.11.2017 அன்று தொடுக்கப்பட்ட வழக்கின், வழக்குரையில் உள்ள உறுத்துக்கூற்றுகளின் பின்னொளியில் காலவரம்பால் தடையாகிறதா என்பது பற்றி எங்களது கருத்தை தெரிவித்தலுக்காக நாங்கள் இந்த மேல்முறையீடில் அழைக்கப்பட்டுள்ளோம்.

16. முன்சொன்ன உயிலும் உயில் அனுபந்தமும் அறவே இல்லாநிலையதாக அறிவிக்கப்படலுக்காக முதன்மையாகவும் பிற பரிகாரங்களுக்காகவும் அதிலுள்ள கோருகைகள் உள்ளன என்பது வழக்குரையிலிருந்து தெளிவாகும். நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான பரிகாரம் முதலாவது பரிகாரத்தின் வெற்றியை சார்ந்ததாகும். ஆகையால் உயிலும் உயில் அனுபந்தமும் அறவே இல்லாநிலையதாகும் என அறிவித்தல் முதன்மை பரிகாரமாக உள்ள நிலையில். நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான பரிகாரம் விளைவுறு பரிகாரமாக உள்ளது.

17. வாதியின் தந்தையால் உயில் நிறைவேற்றப்பட்டு 4.2.2014 அன்று பதியப்பட்டு எனவும் உயில் அனுபந்தம் நிறைவேற்றபட்டு 20.9.2019 அன்று பதிவானது எனவும் ஆன பொருண்மை பற்றி தகராறு ஏதுமில்லை. வழக்குரையில் உள்ள அவரது சொந்த உறுத்துக் கூற்றுகள்படி, 2014 நவம்பர் முதவாவது வாரத்தில் மட்டுமே உயில் மற்றும் உயில் அனுபந்தம் பற்றி வாதிக்கு அவரது சகோதரிகள் மூலமாக்க தெரிய வந்திருந்தது.

18. ஏற்றவாறு சட்டத்தில் உள்ளடங்கும் அட்டவணையின் பகுதி 3ஆல் விளம்புகைக்கான வழக்கு ஆட்பட வேண்டியதாகும். விளம்புகை தொடர்பான வழக்குகளை தாக்கலிடலுக்கான காலவரம்புக்கு பகுதி 3இன் அட்டவணை 3 வகைசெய்கிறது. இயற்றப்பட்ட அல்லது பதியப்பட்ட ஆவணத்தின் ஜோடிப்பு பற்றி விளம்புகை தொடர்பான வழக்குகளை தாக்கலிடலுக்கான காலவரம்பை உறுப்பு 56 கையாள்கிறது. ஏற்றுக்கொள்ளுதல் தொடர்பான விளம்புகைக்கு உறுப்பு 57 தொடர்புடையதாகும்.

19.கையிலுள்ள வழக்கில் கோரப்பட்ட விளம்புகை பரிகாரம் உறுப்புகள் 56 மற்றும் 57 கீழ் அமையவில்லை. ஆகையால் தேவையான குறிப்புணர்த்தலால் உறுப்புகள் 56 மற்றும் 57 கீழ் சொல்லப்பட்டவை விடுத்து வேறு எந்த விளம்புகை பரிகாரம் பெறலுக்கு மூன்றாண்டு காலவரம்புக்கு வகைசெய்யும் உறுப்பு 58 ஆல் அது ஈர்க்கப்படும். அத்தகைய விளம்புகைக்கு, வழக்கிட்லுக்கான உரிமை உற்றடையும் தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்கு காலவரம்பு உள்ளதாகும் எனவாக அது வகைசெய்கிறது.

20. உறுப்பு 58இல் சொல்லப்படும்

வழக்கிடலுக்கு உரிமை முதலாவதாக உற்ற டையும்போது என்ற சொற்களது பிரயோகம் மிகவும் தொடர்புடையதாகவும் முக்கியமாகவும் உள்ளது. வழக்கிடும் உரிமை முதலாவதாக உற்றடையபோகும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலவரம்பு கணக்கிடப்பட வேண்டியதாகும் என அது ஆணித்தரமாக வகைசெய்கிறது.

21.உயில் மற்றும் உயில் அனுபந்தம் குறித்து தெரிந்து கொண்டது பற்றிய உறுத்துக் கூற்றுகளையும் வழக்குமூலத்தையும் கோரப் பட்ட பரிகாரங்களையும் வழக்குரையின் பத்திகள் 3(K)4 மற்றும் 6ஐ தருதல் பலனுடைய தாகும்.

3(K) புற்றுநோயுடானான தைரியமுற்ற போராட்டத்துக்கு பின்பாக இறந்தவர் 21.10.2014 அன்று இரவு 10.35 மணியில் இறுதி மூச்சு விட்டார். அவரது மரணத்துக்கு பின்தொடர்ச்சி யாக. உயிலை மட்டுமின்றி உயில் அனுபந்தத்தை யும் இறந்தவர் நிறைவேற்றியிருந்தார் என்பதை வாதிக்கு 2014 நவம்பர் முதலாவது வாரத்தில் 1–3வது எதிர்வாதிகள் தெரியப்படுத்தினார்கள்.

4. வாதியின் தந்தை பிரமோத் கேசுர்தாஸ் சங்கவியால் நிறைவேற்றப்பட்ட உயில் எண் 707 (மேம் நகர்) 3வது சார்பதிவாளரிடம் 4.2.2014 அன்று பதியப்பட்டபோது வழக்கு மூலம் ஏற்பட்டிருந்தது. சொன்ன உயிலுக்கு பதிவெண் 6213 கொண்டுள்ள உயில் அனுபந்தம் மேம் நகர் 3வது சார்பதிவாளரிடம் 20.9.2014 அன்று பதிவானபோது கூடுதல் வழக்குமூலம் எற்பட்டிருந்தது. வாதியின் தந்தை 21.10.2014 அன்று இறந்து, அதன் பின்னராக வாதிக்கு தந்தையின் உயில் மற்றும் உயில் அனுபந்தம் பற்றி தெரியவந்த போதும் வழக்குமூலம் ஏற்பட்டது. சொன்ன உயிலும் உயில் அனுபந்தமும் முற்றிலும் சட்டவிரோத மானதாகவும் பொய்யானதாகவும் புனையப்பட்ட தாகவும் இல்லாநிலையதாகவும் உள்ளதாகும். ஆகவே அவை அறவே இல்லாநிலையதாக விளம்பப்படுதல் அவசியமாகிறது. மேலும் சொத்துக்களில் எதனையும் உயில் அறிவுறுத்தல் களுக்கு ஏற்ப விற்பனை, உரிமைமாற்றம் அல்லது பாராதீன்ம் செய்யாதிருக்கவும் வழக்கு தீர்வாக்கப்படும் வரையில் ஏற்கன்வே உள்ள நிலையை பராமரிக்கவும் எதிர்வாதிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை உத்தரவாதல் அவசியமாகும். எனவே இப்போதைய வழக்கு உருவாகிறது.

6. வாதி கீழ்வருமாறு வேண்டுகிறார்:

ஏ. மேம்நகர் 3வது சார்பதிவாளரிடம் பதிவாகி 707 என பதிவெண்ணிடப்பட்ட 4.2.2014 தேதிய உயிலையும் மேம்நகர் 3வது சார்பதிவாளரிடம் பதிவாகி 6213 என பதிவெண்ணிடப்பட்ட உயில் அனுபந்தத்தையும் இந்த நீதிமன்றம் அறவே இல்லாநிலையதாக்க தயவு கொள்ளலாம்.

பி. உயிலில் அல்லது உயில் அனுபந்தத்தில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பரிவர்த்தனை எதனிலும் ஈடுபடலிலிருந்து எதிர்வாதிகளை தடுத்து நிறுத்தும் நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கவும் இந்த நீதிமன்றம் தயவு கொள்ளாலாம்.

சி. சொன்ன உயிலினது மற்றும் உயில் அனுபந்தத்தின் பின்தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட பிற்பட்ட நடவடிக்கை அறவே இல்லாநிலைய தாகும் என அறிவிக்க் இந்த நீதிமன்றம் தயவு கொள்ளலாம். முன்னிருந்துள்ள நிலை மீட்டளிக்கப்படலாம்.

டி. தகுதியானதாகவும் பொருத்தமானதாகவும் கருதப்படக்கூடிய இதர மற்றும் கூடுதல் பரிகாரங்கள் வழங்கப்படலாம்.

22. 21.10.2014 அன்று வாதியின் தந்தை இறந்தார் என்பதையும் அவரால் விடுடிச் செல்லப்பட்ட உயில் மற்றும் உயில் அனுபந்தம் பற்றி 2014 நவம்பர் முதலாவது வாரத்தில் முதலாவது வாதி அறியப் பெற்றிருந்தார் என்பதையும் வழக்குரையின் பத்தி 3(K)வை வெறுமனே வாசித்தல் வெளிப்படுத்தும். வழக்கின் வழக்குமூலம் முதலாவது 4.2.2014 அன்றும் அடுத்து 20.9.2014 அன்றும் இறுதி யாக 21.10.2014 அன்றும் ஏற்பட்டது. அதாவது உயில் நிறைவேற்றப்பட்ட போதும்

உயில் அனுபந்தம் நிறைவேற்றப்பட்டபோதும் வாதியின் தந்தை இறந்தபோதும் வழக்கும் மூலம் உருவானது என்பதை வழக்குரையின் பத்தி 4 வெளிப்படுத்துகிறது. ஆகையால், வாதி யின் சொந்த ஏற்புகை படி வழக்கை தாக்க லிடலுக்கான வழக்குமூலம் 4.2.2010 அன்று துவங்கி 21.10.2014 அன்று முடிந்தது.

23.மேலுள்ளதன் காரணமாக, வாதியின் சொந்து உறுத்துக்கூற்றுகள்படி, வழக்கு மூலம் துவங்கிய தேதியான 4.2.2014 அன்றி லிருந்து அல்லது இறுதியாக அவரது தந்தை 21.10.2014 அன்று இறந்த போது அல்லது குறைந்தபட்சம் 2014 நவம்பர் முதலாவது வாரத்தில் உயில் மற்றும் உயில் அனுபந்தம் பற்றி அவர் அறிய வந்திருந்தபோதிலிருந்து மூன்றாண்டு காலவரம்புகளுள் வழக்கு கொணரப்பட வேண்டியதானது.

24. காலவரம்பு மூன்றாண்டாக நிர்ண யிப்பாக்கும் சட்டத்து அட்டவணையின் உறுப்பு 58 கீழ் வழக்கை தாக்கலிடலுக்கான காலவரம்பு அமைகிறது என்ற பொருண்மை பற்றி தகராறு இல்லை. வழக்குமூலம் முதலாவதாக உருவான தேதியிலிருந்து மூன்றாண்டு கால வரம்பாகும் என்பதை கவனிப்பது தொடர்புற்றதாகலாம். எனவே, வாதியின் வழக்குப்படி வழக்குமூலம் முதலில் 4.2.2014 அன்று ஏற்பட்டது. ஆகையால் அது 4.2.2017 அன்று முடியும் என்பதாகும். எனினும் உயில் மற்றும்/அல்லது உயில் அனுபந்தம் பற்றி அறியப் பெற்ற தேதியி லிருந்து காலவரம்பு கணிக்கிடப்பட்டாலும் கூட அது 2014 நவம்பர் முதலாவது வாரத்தில் துவங்கி 2017 நவம்பர் முதலாவது வாரத்தில் நிறைவடையும். வழக்கு, ஏற்றவாறு 21.11.2017 அன்று தொடுக்கப்பட்டது 2017 நவம்பர் முதலாவது வாரம் தாண்டி வெகுகாலம் பின்பாக அவ்வாறே அது வெளிப்படையாக கால வரம்பால் தடையாகும். அதற்காக மறுப்புரை ஏதும் ஆராயப்படல் தேவையற்றாதாகும் அல்லது அதற்கு ஆதரவாக சாட்சியமும் தேவையில்லை.

25. சட்டம் கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவுக்கு பின்பாக தொடுக்கப்பட்ட ஒவ்வொரும் வழக்கும் தள்ளுபடியாக வேண்டும் என சட்ட பிரிவு 3 சிந்திக்கிறது. காலவரம்பு மறுப்புரையாக விவரிக்கப்பட்டிருந்தாலும் கூட. முன் சொன்ன வகையம் வலியுறுத்து இயல்பிலானது. எதிர்தரப்பால் அது வாதுரைக்கபடாது அல்லது வாதிடப்படாது இருந்தாலும் கூட அது நீதிமன்றங்களால் புறக்கணிக்கப்படவியலாது. தோற்றத்தில் அது காலவரம்பால் தடையாகுமானால் வழக்கை தள்ளுபடியாக்கலுக்கான கடப்பாடு நீதிமன்றத்துக்கு உண்டு. சில நேர்வுகளில் உரிமையை அழிக்கா திருந்தாலும். பொதுக் கொள்கை விஷயமாக பொது நன்மைக்காகவும் குறிப்பிட்ட காலக்கெடு கால அளவுக்குப் பின்பாக விசுஅத்துக்கு முடிவளிக்கவும் மேல்சொன்ன வகையம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆகையால் வழக்கு மூலத்தை வைத்தலுக்கு விதிக்கப்பட்ட கால வரம்பு முடிகையிலும் காலவரம்பு மறுப்புரை யாக வைக்கப்படாதிருந்தாலும், வழக்கை கால வரம்பால் தடையானதாக தள்ளுபடியாக்கலுக் கான கடப்பாடு நீதிமன்றங்களுக்கு உண்டு.

26. இப்போதைய வழக்கில் உயில் மற்றும் உயில் அனுபந்தம் பற்றி அவருக்கு 2014 நவம்பர் முதலாவது வாரத்தில் தெரிந்தது என்பது மட்டுமின்றி 4.2.2014 அன்று முதலாவதாகவும் இறுதியாக 21.10.2014 அன்று வழக்குமூலம் உருவானது எனவும் வாதி ஆணித்தரமாக கூறுகிறார். வழக்கு 21.11.2017 அன்று தாக்கலானது. அவ்வாறே வாதியின் சொந்த உறுத்துக்கூற்றுகள் அடிப்படையில் உவிதொச வகுமுறை 7 விதி 11 (டி) ஐ ஈர்த்துக் கொண்டு காலவரம்பு க்கு அப்பால் வழக்கு தொடுக்கப்பட்டது.

27. காலவரம்பு பொருண்மையும் சட்டநெறி யும் கலவையான கேள்வியாகும் எனவும் சாட்சியம் அளிக்க தரப்பினர்களை அனுமதிக்காமல் அது தீர்மானிக்கப்பட முடியாது எனவும் ஆன பணிந்துரை சாரமற்றதாகும். இப்போதுள்ள வழக்கில் ஏற்றவாறு வழக்கு 21.11.2017 அன்று தொடுக்கப்பட்டது என்பதையும் அப்படி யிருக்கையில் வழக்குரை உறுத்துக்கூற்றுகள் படி வழக்குமூலம் 4.2.2014 அன்று முதலாவ

தாக உருவானது என்பதையும் நாங்கள் முன்னராக கவனித்துள்ளோம். வழக்குமூலம் 2014 நவம்பர் முதலாவது வாரரத்தில் உருவானது என அனுமானித்தாலும்கூட வழக்கு 7.11.2017 வாக்கில் தாக்கலிடப்பட்டிருக்க வேண்டும். வழக்கு 21.11.2017 அன்று தாக்கலானது. அது தோற்றத்தில் காலவரம்பால் தடையாகிறது. அதற்காக தரப்பினர்கள் சாட்சியம் ஏதும் முன்னிடப்பட தேவையில்லை. மேலுள்ள கேள்வி முற்றிலும் பொருண்மை கேள்வியாகும். வழக்குரைப்படி ஏற்கப்பட்ட பொருண்மைகளில் முடிடைடைந்த கூற்றுகளுக்கு சாட்சியம் ஏதுவும் தேவையாகவில்லை.

28.மற்றொரு வாதம் வாதிக்கு உயில் மற்றும் உயில் அனுபந்தம் பற்றி 2014 நவம்பர் முதலாவது வாரத்தில் தெரிய வந்தது என்பதாகும் ஆனால் அதை பின்ன்ராக அவரால் வாசிக்க இயலாததால் அது பி அனேகமாக முழுமையான அறிதலாக இருந்த தில்லை. பணிந்துரையை கையாளுதலில் முழுமையாக அறிக்கை தேதியிலிருந்து கால வரம்பு கணக்கிடப்படுவதால் வழக்கு கால வரம்பால் தடையாகவில்லை என தீர்ப்பிடலுக்கு அறிந்திருத்திலிருந்து முழுமையாக அறிதலை மேல்முறையீடு நீதிமன்றம் வேறுபடுத்தியது. அறிதலுக்கும் முழுமையாக அறிதலுக்கும் இடையில் வேறுபாடு வைப்பது முழுமையான பிழையாகும். அனைத்துக்கும் முதலாவதாக, காலவரம்பு முதலாவதாக வழக்குமூலம் ஏற்பட்டதான தேதியிலிருந்து இயங்க வேண்டிய தாகும். பிறபட்ட காலவரம்பு தேதியிலிருந்து அல்ல. வாதியின் கூற்றுப்படியே, இன்னும் முன்னராக வழக்குமூலம் உருவாகியிருந்தது. இரண்டாவதாக எந்த தேதிய்ன்று முழுமையான அறிகை அவருக்கு கிடைத்தது என்பது பற்றி வாதி வாதுரைத்திருக்கவில்லை. அத்தகைய வாதம் பின்சிந்தனையாகவும் முதலாவது மேல்முறையீடு நீதிமன்றத்தின் படைப்பாக உள்ளது மட்டுமே தென்படுகிறது.

29. இறுதியாக வேறான பரிகாரங்களை வாதி வழக்கில் கோரியுள்ளார் எனவும் பரிகாரங்கள் பொறுத்து வழக்கு காலவரம்பால் தடையானாலும் கூட அது மொத்தமாக நிராகரிக்கப்பட முடியாது என் வழக்கில் முதலாவது மேல்முறையீடு நீதிமன்றம் தீர்ப்பிட்டுள்ளது. முன்சொன்ன பணிந்துரையும் சாரமின்றி உள்ளது வழக்குரையில் வைக்கப் பட்ட உறுத்துக்கூற்றுகளை எளிதாக வாசித்தல் அடிப்படையில் உயிலையும் உயில் அனுபந்தத்தையும் அதன் பின்தொடர்ச்சி செயல்பாடுகளும் அறவே இல்லாநிலையான தாக அறிவித்தல் அதனுள் கோரப்படும் முதன்மை பரிகாரமாகும். என்பது வெளிப்படை யாக உள்ளது என்பதால். அதன் சேர்மானமாக வாதி நிரந்த உறுத்துக்கட்டளையை கோரி யிருக்கிறார். இதர பரிகாராம் முதலாவது பரிகாரததை சார்ந்தமைந்ததாகும். முதலாவது பரிகாத்தில் வாதி வென்றாலொழியவும் வெல்லும் வரையிலும் அது வழங்கப்பட வியலாது. ஆகையால் பிரதான பரிகாரம் தொடர்பான வழக்கு அல்லது வழக்குரை காலவரம்பால் தடையாகுமானால் அதனுள் கோரப்படும் இதர துணை பரிகாரம் வழங்கப் படவியலாது.

30.முன்சொன்ன பொருண்மைகள், சந்தர்ப்பங்கள் மற்றும் கலந்தாய்வு பரிசீலனை யில், உவிதொச வகுமுறை 7 விதி 11 கீழ் அதிகாரம், செலுத்தலாக முதலாவது நீதிமன்றத்தின் 23.10.2018 தேதிய தீர்ப்புரையையும் ஆணை யையும் திருப்பியகற்றிக் கொண்டு உயர் நீதிமன்றம் 8.2.2024 தேதிய தீர்ப்புரையையும் ஆணையையும் இயற்றலில் சட்டப்படியாகவும் அப்பட்டமாகவும் பிழையிழைத்தது என் நாங்கள் கருதுகிறோம்.

31.அதற்கிணங்க உயர்நீதிமன்றத்தின் 8.2.2024 தேதிய தீர்ப்புரையும் ஆணையும் நீக்கறவாக்கப்பட்டு விசாரணை நீதிமன்றத்தின் மீட்டளிக்கப்படுகிறது.

வழக்குரை உவிதொச வகுமுறை 7 விதி 11 ஆல் தடையானதாக நிராகரிக்கப்படுகிறது.

32.மேல்முறையீடு அதற்கிணங்க ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**மொழியாக்கம்: பா.ஞானசேகரன்**

# வாதுரையில் எந்த நிலையிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம்

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.என்.சதீஷ்குமார்
உ.சீ.ம. எண் 2802/2022
உ.ப.ம.எண் 1505/2022
தீர்ப்பு நாள் 3.6.2025
2025 (3) சிடிசி 817

சுமித்ராபாய் ...மனுதாரர்

–எதிர்–

கே.வேணுகோபால்ராவ் ...எதிர்வழக்கீட்டாளர்

கே.வெங்கடசுப்பன்
மனுதாரரின் வழக்கறிஞர்
ஆர்.பூர்ணிமா
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

உ.சீ.ம.அனுமதிக்கப்பட்டது.

செலவுத் தொகையின்றி. ப.ம. முடிக்கப் பட்டது.

**கோரிக்கை:** மே.வ.எண் 4/2021 கிருஷ்ணகிரி யில் கூடுதல் கீழ்நிலை நீதிபதியின் கோப்பில் உள்ளதின் மு.மே.எண்1/2022இல் பிறப்பிக்கப் பட்ட குறைகூறப்பட்ட ஆணையை தள்ளுபடி செய்யக் கோரி இந்திய அரசமைப்பின் 227ஆம் உறுப்பின்படி முன்னிடப்பட்ட உரிமையியல் சீராய்வு மனு.

## தீர்ப்பு

1. உ.வி.தொ.ச.இன் கட்டளை 6, விதி 17இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பத்தினை நிராகரித்த மேல்முறையீட்டு ஆணையை எதிர்த்து விளம்புகையை சீராய்வு செய்யக் கோரி இந்த சீராய்வு முன்னிடப்படுகிறது.

2. வழக்கானது முதலில் முன்னிடப்பட்டது. சீராய்வு மனுதாரரால் காலி செய்வதற்காக, கோரப்பட்டதாவது எதிர்வாதி/எதிர்வழக்கீட்டாள ராக கடையின் இடத்தின் வாடகைதாரர். 10.4.2015 அன்று எழுத்துமூல விவர உரை வாடகைதாரரால் முன்னிடப்பட்டது. அதில் உரிமை மூல பாத்தியதை மறுக்கப்பட்டது. அதன் பின்னர், இதில் காணப்பட்டதாவது இந்த வழக்கானது 14.10.2020 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கு தள்ளுபடி செய்யப் பட்டபோது, விசாரணை நீதிமன்றம், கண்டறிந்த தாவது வாதி நன்கொடை ஆவணத்தின் அடிப்படையில், உரிமை மூல பாத்தியதை கோருகிறார் என்பது. இது விட்டல்ராவ் என்பவரால் நிறைவேற்றப்பட்டது இதில் அவர் விளம்புகை பரிகாரம் கோர தவறியிருந்தார். அதன் பின்னர், மனுதாரர், மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்பு, திருத்தம் செய்ய உரிமை யியல் தொடர்பான சட்டத்தின் கட்டளை 6, விதி 17இன்படி விண்ணப்பம் முன்னிட்டு இருந்தார். அதாவது அதில் விளம்புகை உய்தியை சேர்ப்ப தற்காக மட்டும். இது எதிர்வழக்கீட்டாளரால் எதிர்க்கப்பட்டது. அது மனுதாரரின் உரிமை மூல ஆவணம் தொடர்பானது. இது பற்றி 2015ஆம் ஆண்டே பூசலிலிருந்து அதில் விளம்புகை மூன்று ஆண்டுக் காலத்திற்குள் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் விண்ணப்பம் 2022இல் மட்டுமே முன்னிடப்பட்டது. அதுவும் மேல்முறையீடு நடப்பில் உள்ளபோது மேல்முறையீட்டு நீதிமன்றம் எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட விரிவான ஆணை மூலம் விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்தது இதனை எதிர்த்து, தற்போதைய சீராய்வு முன்னிடப்பட்டுள்ளது.

3. மனுதாரரின் வழக்கறிஞர் பணிந்தளித்த தாவது மேல்முறையீட்டு நிலையில் கோரப்பட்ட திருத்தம் வழக்கின் நிலையை மாற்றாது என்பது. வழக்கானது உடைமையைக் கைக் கொள்வ தற்காக முன்னிடப்பட்ட ஒன்று. இது கொடை ஆவணம் நிறைவேற்றப்பட்டது தொடர்பாக

அதுவும் சீராய்வு மனுதாரர் சார்பாக. எனவே இதில் விளம்புகை பரிகாரம் கோருவது தொடர்பாக. கால வரம்பு பொருந்துவது என்பது. இதில் எழவில்லை என்பது. இதில் முக்கிய உய்தியே உடைமையை மீளப் பெறுவது, இது 1963 கால வரம்புகள் சட்டத்தின் இணைப்பின் 65ஆம் உறுப்பின்படி காணப்படுவது வழக்கானது விளம்புகைக்காக மட்டுமே ஆனதல்ல. இதில் முக்கிய பரிகாரத்தை உடைமையை மீளப் பெறுவது இத்தகைய வழக்கில் 1963 கால வரம்பும் சட்டத்தின் இணைப்பின் 65ஆம் உறுப்பு மட்டுமே பொருந்தும். எனவே எதிர்வழக்கீட்டாளரின் வாதமாவது விளம்புகை பரிகாரம் மூன்று ஆண்டுகளுக்குள் கோரப்பட்டிருக்க வேண்டும் என்பது. இங்கு பொருந்தாது. எனவே, சீராய்வு மனுவை அனுமதிக்கக் கோரப்படுகிறது.

4.எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பது. 2015ஆம் ஆண்டிலேயே சீராய்வு மனுதாரரின் உரிமை மூல பாத்தியதை யில் பூசல் ஏற்பட்ட காரணத்தால் இந்த வழக்கில் கால வரம்பு செயற்பாட்டிற்கு வருகிறது. விளம்புகையானது, மூன்று ஆண்டுகளுக்குள் கோரப்பட்டிருத்தல் வேண்டும். இதில் திருத்த விண்ணப்பமே 2022ஆம் ஆண்டு மட்டுமே முன்னிடப்படுகிறது. எனவே, இந்த விளம்புகை பற்றிய கோரிக்கை கால வரம்பினால் தடை செய்யப்படுகிறது மற்றும் இது ஏற்கப்பட முடியாது. அவளது மேலுமான வாதமாவது, நீதிமன்றக் கட்டணமானது 1955 தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 25(அ)இன்படி செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இத்தகைய வழக்கில் அந்த விசாரணை நீதிமன்றத்தின் அதிகார வரம்பு மாறுபடும். எனவே, இந்த நிலையில் திருத்தம் அனுமதிக்கப்படுமானால் அது எதிர்வழக்கீட்டாளரின் உரித்தத்தினை எடுத்துவிடும்போதும். இதற்காக உரிய காரணம் உறுதியுரையில் அளிக்கப்படவில்லை. அதாவது சீராய்வு மனுதாரரால் எனவே இந்த சீராய்வு மனு எதிர்க்கப்படுகிறது.

5. மேற்சொல்லப்பட்ட வாதுரைகளின் கருத்தில், இந்தச் சீராய்வில் பின்வரும் குறிப்புகள் கருதுகைக்காக எழுந்துள்ளது.

மேல்முறையீட்டு நிலையில் கோரப்பட்ட திருத்தம் அதுவும் குறிப்பாக விளம்புகை பரிகாரம் கோருதல் இந்த வழக்கின் குணாதிசையங்களை மாற்றுமா?

**குறிப்பு (1)**:

6. எதிர்வழக்கீட்டாளரிடமிருந்து உடைமையைப் பெறுவதற்காக இந்த வழக்கு முன்னிடப் பட்டுள்ளது என்பதில் எந்தப் பூசலும் இல்லை. வாதி தனது கோரிக்கையை பதிவு செய்யப்பட்ட கொடை ஆவணத்தின் அடிப்படையில் அமைந்துள்ளார். இது விட்டல் ராவ் என்பவரால் நிறைவேற்றப்பட்டது. இவரே எதிர்வழக்கீட்டாளர் ஒரு சிறிய இடத்திலான கடையின் வாடகைதாரர் என்று வழக்கு உள்ளது. எதிர்வழக்கீட்டாளரின் வாதமாவது, விட்டல்ராவ் நிறைவேற்றியுள்ள பதிவு செய்யப்படாத உயிலின் மூலம் இவர் அதன் சொந்தக்காரர் ஆவார் என்பது என்றும் இதில் உள்ள பொருண்மையாவது, இந்த பதிவு செய்யப்படாத உயில் சட்டம் அறியப்பட்ட முறை யில் நிரூபிக்கப்படவில்லை. மேலும் இந்த உயிலில் இரண்டு சாட்சிகளின் கையொப்பம் காணப்படவில்லை. எனவே, செல்லத்தக்க உயில் எதிர்வழக்கீட்டாளர் சார்பாக உள்ளதாக சொல்லப்பட முடியாது. இது இவ்வாறு உள்ள போது, வழக்கானது உடைமை கோரி முன்னிடப் பட்டுள்ளது. அத்தகைய வழக்கில், கால வரம்பு 12 ஆண்டுகளாகும். கால வரம்பு சட்டத்தின் இணைப்பு பட்டியலில் 65ஆம் உறுப்பின்படி சாதாரண சூழ்நிலைகளில் எந்த உரிமையும் மறுக்கப்படுமானால், இது பற்றி விளம்புகை கோருவதற்கான கால வரம்பு 3 ஆண்டுகள் இது கால வரம்பு நிலைகளில் எந்த உரிமையும் மறுக்கப்படுமானால் இது பற்றி விளம்புகை கோருவதற்கான கால வரம்பு 3 ஆண்டுகள் இது கால வரம்புகள் சட்டத்தின் இணைப்பின் 56 முதல் 58 வரையிலான உறுப்புகளால் காணப் படுகிறது. ஆனால் பொருண்மையாவது, வாதி தனது உரிமையினை உறுதி செய்யவில்லை. அதுவும் 2015ஆம் ஆண்டில் எழுந்து மூல விவர உரையில் எதிர்வாதியினால் மறுப்பு அறிவிக்கப்பட்டவை. உரிமை உறுதி செய்யப் படவில்லை. பொருண்மையின்படி, வழக்கானது முன்னிடப்பட்டதே. உடைமையினை மீளப்

பெறுவதற்கான உரிமையினை உறுதி செய்வதற்கானது. இத்தகைய பொருட்பாட்டின் கருத்தில் விளம்புகை செய்வதற்கான காலம் 3 ஆண்டுகள் என்று வகை செய்யப்பட்டிருந்தாலும் இதில் முக்கிய பரிகாரம் உடைமையை மீளப்பெறும் என்பது. இதன் வழியில் விளம்புகைக்கான கால வரம்பு என்பது எழாது.

7. இது தொடர்பாக உச்சநீதிமன்றம் என். தாசுதீன் –எதிர்– தமிழ்நாடு காதி மற்றும் கிராம தொழிற்சாலைகள் வாரியம், 2024 உச்.நீ.வ. வலைதளம் உச்.நீ. 3037 பின்வருமாறு கூறியுள்ளது.

“21. 1963 காலவரம்பு சட்டத்தின் இணைப்பின் பகுதி IIIஇன்படி வகை செய்யப்பட்டுள்ளது. விளம்புகை வழக்கிற்கான கால வரம்பு சட்டத்தின், இது கால வரம்பு சட்டத்தின் இணைப்பில் உறுப்புகள் 56–58 வரையிலானவற்றால் ஆளப்படுகிறது. மேற்சொல்லப்பட்ட அனைத்து உறுப்புகளின்படி விளம்புகைக்கான வழக்கின் கால வரம்பு 3 ஆண்டுகள் கால வரம்பு சட்டத்தின் இணைப்பின் உறுப்பு 56, 57இன்படி வகை செய்யப்பட்ட கால வரம்பு அதுவும் ஒரு முறையாவணம் போலி என்பது தொடர்பான விளம்புகை அல்லது பதிவு செய்யப்பட்டது மற்றும் அதன் செல்லுந்தன்மை தொடர்பான ஏற்பது ஆவணம் பற்றியது. கால வரம்பு சட்டத்தின் உறுப்பு 58 தீர்ப்பாணை தொடர்பான விளம்புகை பொறுத்து வகுத்துரைக்கப்பட்ட கால அளவு மற்றும் பிற வகைகள் பற்றியன. எனவே உரிமை மூல பாத்தியதை பற்றிய வழக்கின் விளம்புகை கட்டாயமாக கால வரம்பு சட்டத்தின் இணைப்பின் 58ஆம் உறுப்பின்படியானது மற்றும் கால வரம்பு என்பது வழக்கிடுவதற்காக உரிமை முதலில் தொடங்கப்பட்டதிலிருந்து 3 ஆண்டு கால அளவு.

22. கையில் உள்ள வழக்கில், இது உரிமை மூல பாத்தியதையை விளம்புதலுக்காக மட்டுமல்ல. இது மேலுமாக உடைமையைக் கைப்பற்றுவதற்கான பரிகாரம் பற்றியது. இதில் குறிப்பிடப்பட வேண்டியதாவது. உரிமை மூல பாத்தியதைக்கான வழக்கில் மேலுமான உய்தி என்பது. விளம்புகையுடன் கூட விளம்புகை பரிகாரம் ஒரு துணையானதாக அமையும். அதாவது கால வரம்பின் நோக்கங்களுக்காக, இது அந்த பரிகாரத்தில் ஆளப்படுவது இது கூடுதலாகக் கோரப்படுவது மேலுமான உய்தி வழக்கில் உடைமைக் கோரி அதன் உரிமை மூல பாத்தியத்தின் அடிப்படையில் அமைவது மற்றும் அதன் கால வரம்பு என்பது கால வரம்புச் சட்டத்தின் 65 ஆம் உறுப்பின் வரையுரைகளின்படி 12 ஆண்டுகளாகும்.

23. சி. முகமது யூனான் –எதிர்– சையது உன்னிசா. இதில் கூறப்பட்டதாவது விளம்புகைக்கான வழக்கில் மேலுமான பரிகாரமாவது, கால வரம்பானது, அந்த வழக்கினை ஆளுகை செய்கிற உறுப்பின்படி அமையும். அதாவது மேலுமான பரிகாரம் தொடர்பாக. பொருண்மையின்படி ஒரு விளம்புகைக்கான ஒரு வழக்கு அதுவும் அசையாச் சொத்து தொடர்பாக என்பது. இது தடை ஏற்படாது. அதாவது சொத்தில் உரிமை தொடர்ந்து இருந்து வரும் நேர்வில். அத்தகைய உரிமை தொடர்ந்து இருந்து வரும்போது, விளம்புதலுக்கான பரிகாரம் ஒரு தொடர் உரிமை மற்றும் இதில் கால வரம்பு என்பது அந்த வழக்கில் இல்லை. இதில் நெறிமுறையாவது விளம்புகைக்கான வழக்கு ஓர் உரிமைக்கானது. அந்தச் சொத்தில் அவரது உரிமை உள்ளவரை கால வரம்பு தடையாகாது.

8. வாதுரை திருத்தப்படுவது தொடர்பாக அதுவும் முதல் மேல்முறையீட்டு நிலையில் என்பது. உச்சநீதிமன்றமானது மாலவா மற்றும் பிறர் –எதிர்– கவசமானரா காலம்மா (இறப்பு) அவளது சட்ட வாரிசுகள் மற்றும் பிறர் 2024 உச்.நீ.வ. வலைதளம் உச்.நீ.3846 பின்வருமாறு கூறியுள்ளது.

“23. இதில் நன்கு ஏற்கப்பட்ட நடைமுறை விதிகளாவன நிதி நிர்வாகத்திற்காக செய்யப்பட்டவை. ஒரு தரப்பினருக்கு பரிகாரம் மறுக்கப்படுதலாகாது. அதாவது அவரால் இழைக்கப்பட்ட சில தவறுகள், அசட்டை, எதிர்பாராத நிகழ்வு அல்லது நடைமுறை விதிகளை பின்பற்றாதது தொடர்பாக. நீதிமன்றம், எப்போதும் தரப்பினர்களில் வாதுரையை திருத்தம் பரிகாரத்தை அளிக்கிறது. அதில் செயற்படும் தரப்பினர் விண்ணப்பிப்பவர் தவறாக செயற்படுகிறார் என்றாவன்றி அல்லது அவரது தவறு காரண

மாக அவர் எதிராளிக்கு கேடு விளைவித்துள்ளார் என்றாலும் செலவு என்னும் வகைக்கு ஈடு செய்யப்படி முடியாது என்ற அன்றி. (மகிளா – ராம்காளிதேவி –எதிர்– நன்றாம் (இறப்பு) அவரது சட்ட சார்பாளர்கள் மூலமாக, 2015 (13) உச்.நீ.வ. 132).

24. ஜெய் ஜெய் ராம் மனோகர்லால் –எதிர்– தேசிய கட்டிட பொருள் வழங்கிடு, குர்கோன் 1969 (1) உச்.நீ.வ. 869. இந்த நீதிமன்றம் கூறியதாவது திருத்தம் வாதுரைகளில் செய்வ தற்கான அதிகாரம் நீதியின் தேவைகளுக்கான தாகக் கருதப்பட்டால் மற்றும் இது குறுகிய அல்லது தொழில்நுட்ப வரம்புரைகள் எதனாலும் ஆள்படாது.

25. பண்டிட் ஈஸ்வர்தான் –எதிர்– மத்திய பிரதேச மாநிலம் 1979 (4) உச்.நீ.வ. 163,

“4. எந்தப் பணிந்தனுப்புதல்களிலும் எந்த பொருட்பாடுகளையும் நாங்கள் பார்க்க முடிய வில்லை. முன்னிலையாகிற வழக்கறிஞர் வாத மாவது மேல்முறையீட்டு நிலையில் புதிய கோரிக்கை எதுவும் அனுமதிக்கப்பட முடியாது என்பது, இதில் இந்த கோரிக்கையை தீர்மானிக்கத் தேவையான அனைத்தும் இயற்கெனவே நீதிமன்றத்தின் முன்பு அளிக்கப்பட்டிருந்தா லன்றி. இந்த துணிவுக்கு, எந்த அடிப்படையும் இல்லை.

5. ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு எதிராக இடர்பாடு அல்லது தடை உதவும் இல்லை. அதாவது ஒரு புதிய கோரிக்கையினை தரப்பினர் வைக்க இயல்விக்கும் பொருட்டு, வாதுரையில் திருத்தங்களை மேற்கொள்வதை ஏற்பது தொடர்பாக. இதில் தேவைப்படும் அனைத்தும், மேல்முறையீட்டு நீதிமன்றம், கண்டறிய வேண்டியதாவது, நன்கு அறியப்பட்ட நெறிமுறைகள், எவற்றிற்கு உட்பட்டு, வாதுரை களில் திருத்தங்கள் சாதாரணமாக வழங்கப்படு கின்றன என்பது பற்றி சாதாரணமாக, கருதுகைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய, ஒரு சூழ்நிலை அதாவது திருத்ததிற்கு முன்பு, என்பது அந்த விண்ணப்பம் செய்யப்படுவதில் எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தாழ்வு, அதாவது அந்தத் திருத்தம் கோருவதில் மற்றும் அது மேல்முறை யீட்டு நிலையில் செய்யப்படுமானால், இது ஒன்று விசாரணை நீதிமன்றத்தில் செய்யப்பட வில்லை என்பதற்காக காரணம் அந்த திருத்தத்தி லிருந்து எழுகிற பொருட்பாடு, தொடர்பான தேவையான பொருட்பாடு ஏற்கனவே அங்கு இருந்திருக்குமானால், திருத்தமானது எளிதாக வழங்கப்படும் வேறு வகையில் இல்லாமல். ஆனால், இது பற்றிய தடை எதுவும் இல்லை. அதாவது ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒன்றிற்கு எதிராக. அதாவது மேல்முறையீட்டு நிலையில் ஒரு திருத்தத்தினை அனுமதிப்பது தொடர்பாக. ஏனெனில் தேவையான பொருட் பாடானது நீதிமன்றத்தின் முன்பு ஏற்கனவே இல்லை என்பதால்.

9.வழக்கின் திருத்தம் தொடர்பாக, கோரிக்கை களுக்காக, அதாவது அவை காலத்தால் தடை செய்யப்படும்போது நீதியின் நலனுக்காக அவை அனுமதிக்கப்படலாம் மற்றும் கால வரம்பு பற்றிய பிரச்சினை தனியாக வனையப் படலாம். அதாவது தொடர்புடையதை தீர்மானிப்ப தற்காக உச்சநீதிமன்றம் இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் –எதிர்– சஞ்சீவ் கட்டுமானம் தனியார் வரம்பிடப்பட்டது மற்றும் பிறர் 2022 (6) த.த.வ. 485 (உச்.நீ.); 2023 (1) (M.W.N.) (உரிமையியல்) 87; (உச்.நீ.); 2022 (6) உச்.நீ.வ.1; பின்வருமாறு கூறியுள்ளது.

“26. ஆனால், ஐயமின்றி, திருத்தத்திற்கான ஒவ்வொரு வழக்கும் ஒவ்வொரு விண்ணப்பமும் தொடர்பாக வழக்கின் பொருந்தத்தக்க பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் சோதிக்கப்பட வேண்டும். வாதுரைகளில் செய்யக் கருதப்பட்ட திருத்தம் என்பது அதே பொருண்மைகள் பற்றிய மாறுப் பட்ட அல்லது கூடுதல் அணுகுமுறையாக மட்டுமே உள்ளபோது, இந்த நீதிமன்றம் திரும்பத்திரும்ப கூறியுள்ளதாவது அத்தகைய திருத்தம் அனுமதிக்கப்படும் என்றும் நெறிமுறை, அதுவும் கால வரம்பின் காலம் சட்டப்படி முடிவுற்ற பின்னரும் கூட”

10. அதாவது கால வரம்பு திருத்தத்தினால் உய்திக்கு தடை விதிக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கிலும், என்பது தொடர்பாக. அது அனுமதிக்கப்படக் கூடாது என்பது விதியல்ல உச்ச நீதிமன்றம் தெற்கு கொங்கன் டிஸ்ட்டலிரிஸ் மற்றும் பிறர் –எதிர்– பிரபாகர் கஜானன் நாயக் மற்றுங்ம

பிறர், 2008 (14) உச்.நீ.வ. 632. பின் வருமாறு கூறப்பட்டுள்ளது.

“11. கீழமை நீதிமன்றங்கள் ஆணைகளுடன் வகை செய்வதற்கு முன்பு, அதன் எழுத்து மூல விவர உரையின் திருத்தம் தொடர்பான விண்ணப்பம் மற்றும் அதன் எதிர்கோரிக்கை வாதத்தில் எடுக்கப்படும்போது வாதுரைகளில் திருத்தத்தினை அனுமதிப்பது அல்லது நிராகரிப்பது பற்றிய கேள்வி தொடர்பான சட்டங்களை நாம் கருதுகை செய்வோம். இதில் நன்கு தீர்மானிக்கப் பட்டதாவது, திருத்தத் திற்கான கோரிக்கையை வழங்குவதில் இது மிகவும் நீக்குபோக்குடன் செயற்பட வேண்டியது என்பது. இதில் அத்தகைய திருத்தத்தினை நீதிமன்றம் அனுமதிக்காதிருக்கு மானால், ஒரு தரப்பானது எத்தகைய திருத்தத்தை கோரியவர் ஈடு செய்ய இயலாத இழப்பையும் துன்பத்தை யும் அடைவார் என்பது மற்றும் இது போலவே இணையாக தீர்மானிக்கப்பட்டதாவது இதில் ஒரு முழுமையான விதி எதுவும் இல்லை. அதாவது கால வரம்பினால் தடை செய்யப் பட்டுள்ள பரிகாரம் தொடர்பாக ஒவ்வொரு வழக்கிலும், திருத்தம் அனுமதிக்கப்படக் கூடாது என்பதில்லை. இதில் நீதிமன்றம் எப்போதும், அந்த திருத்தத்தினை அனுமதிப்பதன் மூலம் நீதி செய்யவும், மேலு மான வழக்குகளை தடுக்கவும் அது உதவும் என்னும் கருத்துக் கொள்ளு மானால் அந்த திருத்தத்தினை அனுமதிக்கும்.

13. மேற்கூறப்பட்டவற்றை கருதுகை செய்ததில், இதன் பொருண்மை பற்றியதாவது, இரு தரப்பினராலும் வாதிட்டவாறு வாதுரையிலும் எழுத்து மூல விவர உரையிலும் குறிப்பிட்டவாறு இந்த பிரச்சினை பற்றி சுருக்கமாகவே உள்ளது. வாதுரை அவளது உரிமைகளை அசையாச் சொத்துக்கள் தொடர்பாக கோரியுள்ளார். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட பரிகாரம் அதாவது விளம்புகை என்பது தொடக்க நிலையில் கோரப் படாததால், அத்தகைய வழக்கில் எந்த நிலையிலும் அந்த பரிகாரம் கோரப்படாததால், அத்தகைய வழக்கில் எந்த நிலையிலும் அந்த பரிகாரம் கோரப்பட முடியாது என்று கூற முடியாது. இந்த நீதிமன்றம் கருதுவது உடைமை மீளப் பெறுதல் என்னும் விரிவான பரிகாரம் கோரப்படும்போது அது செல்லத்தக்கதே மற்றும் கால வரம்பு கோரிக்கை தொடர்புற்றதாகாது. எனவே மேல் முறையீட்டு நீதிமன்ற ஆணை 21.4.2022 தேதியிடப்பட்டது. இதன் மூலம் தள்ளுபடி செய்யப்படுகிறது மற்றும் திருத்தத்திற்கான விண்ணப்பம் அனுமதிக்கப்படுகிறது. மேல் முறையீட்டு நீதிமன்றம் வாதியைத் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள அனுமதிக்க பணிக்கப்பட்டது மற்றும் அதன் பின்னர், மேல்முறையீடு வகை செய்யப்பட வேண்டும் என்பது. அதாவது இந்த ஆணையின்படி பெறப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாத கால அளவிற்குள்.

12. அவ்வாறே, இந்த சீராய்வு அனுமதிக்கப் படுகிறது. செலவுத் தொகையின்றி. இதன் விளைவாக தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## செய்தியாளர்களுக்கு போலீஸார் பேட்டியளிக்க பிரத்யேக கொள்கை உச்சநீதிமன்றம் உத்தரவு

செய்தியாளர்களுக்கு போலீசார் பேட்டி அளிப்பது தொடர்பான பிரத்யேக கொள்கையை வகுக்கும்படி, மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான மனுக்கள் நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ் என்.கோடீஸ்வரர் சிங் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு வந்தன. அப்போது வழக்கில் உதவி செய்ய உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மூத்த வழக்குரைஞர் கோபால் சங்கர நாராயணன், போலீஸார் பேட்டி யளிப்பது தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச அளவில் கடைப்பிடிக்கும் வழக்கங்கள் அடிப்படையில் தயாரிக்கப் பட்ட அறிக்கையை தாக்கல் செய்தார்.

அதை பரிசீலித்த நீதிபதிகள், கோபால் சங்க நாராயணன் தாக்கல் செய்த அறிக்கையை ஆய்வு செய்து, போலீஸார் பேட்டியளிப்பது தொடர்பான கொள்கையை மாநில அரசுகள் வகுக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

உச்சநீதிமன்ற உத்தரவை இணையதளத்தில் 2 வாரத்திற்குள் பதிவேற்ற பதிவாளருக்கு உத்தரவிட்டு, அதன் நகல் கிடைத்த 3 மாதங்களுக்குள் மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் அறிவுறுத்தினர்

**நன்றி: தினமணி 22.01.2026**

# உயில் என்பது சாட்சியம் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். எனவே கீழமை நீதிமன்ற தீர்ப்பு உறுதி செய்யப்பட்டு, மேல்முறையீடு தள்ளுபடியாகிறது

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.ஆர்.சுப்பிரமணியன்**
**மாண்புமிகு நீதிபதி திரு.சி.குமரப்பன்**
**A.S.No. 1070/2012,**
**M.P.Nos.1/2012 & 2/2014**
**(2025 (6) CTC 32)**

1. **எஸ்.அம்ச கல்யாணி (இறந்தவர்)**
2. **கே.இளங்கோ**
3. **ஹரிகிருஷ்ணா**
4. **ராஜ் (CMP 29593 & 29596/2023 உத்திரவிற்கிணங்க இறந்தவரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர் என்ற முறையில் சேர்க்கப்பட்டவர்) ...மேல்முறையீட்டாளர்கள்**

**-எதிர்-**

1. **ரவி கணேசன்**
2. **எஸ்.பால முருகன் ...எதிர்மனுதாரர்கள்**

வேண்டுகை: பூந்தமல்லியில் உள்ள திருவள்ளூர் இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தின் பதிவேட்டில் உள்ள ஓ.எஸ். எண் 38/2011 வழக்கில் 02.11.2012 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணையை ரத்து செய்யக் கோரி, சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 96(1)-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு, மற்றும் அதன் விளைவாக இந்த முதல் மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டுகை செய்யப்பட்டது.

மேல்முறையீட்டாளர்களுக்கு:

**திரு எம்.மணிமாறன் என்பவருக்காக**
**திரு என்.பாஸ்கரன், மூத்த வழக்கறிஞர்**

முதல் எதிர்மனுதாரருக்கு:

**திரு டி.வி.கிருஷ்ணகுமார், வழக்கறிஞர்**

2வது எதிர்மனுதாரருக்கு:

**திரு.சுசித் அனந்த் பலன்டே, வழக்கறிஞர்**

## தீர்ப்பு

**(நீதிபதி திரு. ஆர். சுப்பிரமணியன்)**

முதல் பிரதிவாதி மேல்முறையீட்டாளர் ஆவார். முதல் மற்றும் இரண்டாவது எதிர்மனுதாரர்கள் முறையே வாதி மற்றும் இரண்டாவது பிரதிவாதி ஆவர்.

2. வழக்கிற்குரிய சொத்தில் வாதிக்கு 1/3 பங்கு வழங்கி, பாகப்பிரிவினை மற்றும் தனித் தீர்வு கோரி வழங்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்து இந்த மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்குரிய சொத்து தரப்பினர்களின் தாயாரான நவநீதம் என்பவருக்குச் சொந்தமானது என்றும், அவர் 14.12.2002 அன்று காலமானார் என்றும் கூறி வாதி பாகப்பிரிவினை கோரினார். அந்தச் சொத்து 14.06.2000 தேதியிட்ட விற்பனைப் பத்திரம் மூலம் வாங்கப்பட்டது. மகன் என்ற முறையில், அந்தச் சொத்தில் தனக்கு 1/3 பங்கு உரிமை உள்ளதாக வாதி வாதிட்டார். 1 மற்றும் 2-வது பிரதிவாதிகள் வாதியின் உடன் பிறந்தவர்கள் ஆவர். இரண்டாவது பிரதிவாதி வாதியின் வாதத்தை ஏற்றுக்கொண்டார். முதல் பிரதிவாதி தாக்கல் செய்த பதில் வாக்குமூலத்தில் தனது சொந்த வருமானத்தைக் கொண்டு தாயின் பெயரில் அந்தச் சொத்தை வாங்கியதாகக் குறிப்பிட்டார். மேலும், அவரது தாயார் 10.10.2002 அன்று ஒரு உயில் எழுதி வைத்து, அதன் மூலம்

அந்தச் சொத்தை முதல் பிரதிவாதிக்கே வழங்கியிருப்பதாகவும் வாதிட்டார். எனவே, வாதிக்கோ அல்லது இரண்டாவது பிரதிவாதிக்கோ அந்தச் சொத்தில் பங்கு கோர உரிமை இல்லை என்பது முதல் பிரதிவாதியின் வாதம். மேற்கூறிய வாதங்களின் அடிப்படையில், விசாரணை நீதிமன்ற நீதிபதி பின்வரும் வினாக்களை எழுப்பினார்:

1) 10.10.2002 தேதியிட்ட உயில் உண்மையானதா மற்றும் செல்லத்தக்கதா?

2) வழக்கிற்குரிய சொத்தில் உள்ள வீடு வாதி வாங்கிய கடனைக் கொண்டு கட்டப்பட்டதா?

3) முதல் பிரதிவாதி தனது பதில் வாக்குமூலத்தில் கூறியது போல, வாதியின் பெயரில் கடன் பெறப்பட்டதா?

4) மறைந்த நவநீதம் அந்தச் சொத்தின் முழு உரிமையாளரா மற்றும் அவர் உயில் ஏதும் எழுதாமல் காலமானாரா?

5) வாதிக்கு 1/3 பங்கு பெற உரிமை உண்டா?

6) வாதிக்குக் கிடைக்க வேண்டிய தீர்வு என்ன? கூடுதல் வினாக்கள்:

7) வாதிக்கு இடைக்கால லாபமாக ரூ.72,000 பெற உரிமை உண்டா?

8) வாதிக்கு வருங்கால இடைக்கால லாபத்தைப் பெற உரிமை உண்டா?

3. விசாரணையின் போது, வாதி (P.W.1) தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டு, ஆவணங்கள் அ1 முதல் அ6 வரை குறியீடு செய்யப்பட்டன. முதல் பிரதிவாதி (D.W.1) சாட்சியம் அளித்தார். உயிலின் சாட்சி D.W.2 ஆக விசாரிக்கப்பட்டார். இரண்டாவது பிரதிவாதி (D.W.3) விசாரிக்கப்பட்டு, ஆவணங்கள் ஆ1 முதல் ஆ14 வரை குறியீடு செய்யப்பட்டன.

4. விசாரணை நீதிபதி, ஆவணங்களை ஆய்வு செய்த பிறகு, முதல் பிரதிவாதி தனது வருமானத்தில் தாயின் பெயரில் சொத்தை வாங்கினார் என்ற வாதத்தை நிராகரித்தார். மேலும், உயிலில் உள்ள சில சந்தேகத்திற்குரிய அம்சங்களைக் கொண்டு, நவநீதம் அந்த உயிலை எழுதினார் என்பதை நம்ப முடியாது என நீதிபதி முடிவு செய்தார். இதன் அடிப்படையில், வாதி மற்றும் பிரதிவாதிகள் ஒவ்வொருவருக்கும் 1/3 பங்கு உரிமை உண்டு எனத் தீர்ப்பளித்து, முதற்கட்டத் தீர்ப்பாணை வழங்கப்பட்டது. இதை எதிர்த்து முதல் பிரதிவாதி இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

5. இந்த மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது, இரண்டாவது பிரதிவாதி திருமணமாகாத நிலையில் காலமானார். வாதி மற்றும் முதல் பிரதிவாதி ஆகிய இருவரும் அவரது உடன் பிறந்தவர்கள் என்பதால், சட்டப்பூர்வ வாரிசுகள் என்ற முறையில் அவரது பங்கினை இருவரும் சமமாகப் பெறுகின்றனர்.

6. மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் திரு. பாஸ்கரன், விசாரணை நீதிமன்றம் உயிலை நம்ப மறுத்தது தவறு என வாதிட்டார். உயிலின் சாட்சி அதன் உருவாக்கத்தைப் பற்றித் தெளிவாகக் கூறியிருக்கும்போது, புறம்பான காரணங்களுக்காக அதை நிராகரிக்கக் கூடாது என்றார். மேலும், முதல் பிரதிவாதியின் வருமானம், பாட்டியின் ஓய்வூதியம் மற்றும் பாட்டியின் நகைகளை விற்ற பணம் ஆகியவற்றைக் கொண்டே சொத்து வாங்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டினார். சொத்து வாங்கும் போதோ அல்லது வீடு கட்டும் போதோ வெளிநாட்டில் இருந்த வாதி எந்தப் பணமும் வழங்கவில்லை என்றும் வாதிட்டார்.

7. இதற்கு மாறாக, முதல் எதிர்மனுதாரர் (வாதி) தரப்பு வழக்கறிஞர் திரு. டி.வி.கிருஷ்ணகுமார் வாதிடுகையில், ஆவணம் ஆ1 என்பது ஒரு உயிலே அல்ல என்றார். அது 'பினாமி' உரிமையை விட்டுக்கொடுக்கும் ஒரு ஆவணம் என்றும், 1988-ம் ஆண்டின் பினாமி பரிவர்த்தனை (தடை) சட்டத்தின்படி அது செல்லாது என்றும் கூறினார். உயில் உருவாக்கம் குறித்து ஈ.ஙி.2 அளித்த சாட்சியம் இயற்கைக்கு மாறாக இருப்பதாகவும், உயிலில் மூன்று கையெழுத்துக்கள் இருப்பதையும், அதில் மூன்றாவது கையெழுத்து வேறு மையினால்

இடப்பட்டிருப்பதை D.W.2 ஒப்புக் கொண்டதையும் சுட்டிக்காட்டினார். மேலும், சாட்சிகள் கையெழுத்திட்ட பிறகு அந்த மூன்றாவது கையெழுத்து இடப்பட்டிருப்பது மிகவும் சந்தேகத்திற்குரியது என்றும் வாதிட்டார்.

8. கையெழுத்துக்களை ஒப்பிட்டுப் பார்த்ததற்காகவும், மூன்றாவது கையெழுத்து வேறு மையினால் இடப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வந்ததற்காகவும், மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் விசாரணை நீதிமன்றத்தின் மீது குற்றம் சாட்டினார். அத்தகைய ஆய்வை மேற்கொள்ள விசாரணை நீதிமன்றத்திற்குத் தகுதியில்லை என்பது அவர் வாதம். மேலும், ஆவணம் ஆ1-ல் (உயில்) வரிகளுக்கு இடையே உள்ள இடைவெளியைக் கொண்டு நீதிமன்றம் முடிவெடுத்ததையும் அவர் தவறெனச் சுட்டிக்காட்டினார்.

9. இரு தரப்பு வாதங்களையும் நாங்கள் பரிசீலித்தோம்.

10. தரப்பினர்களின் வாதங்களின் அடிப்படையில், பரிசீலனைக்குரிய பின்வரும் கேள்வி எழுகிறது:

1. ஆவணம் B1 (உயில்) உண்மையானது அல்ல என்று விசாரணை நீதிமன்றம் முடிவு செய்தது சரியானதா?

11. ஆய்வு: தரப்பினர்களுக்கு இடையிலான உறவுமுறை ஒப்புக்கொள்ளப்பட்டது. சொத்து தாயின் பெயரில் உள்ளது என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டது. சொத்து வாங்குவதற்குத் தான் பணம் கொடுத்ததாக வாதி கூறினாலும், சொத்தின் உரிமையாளராகத் தாயையே அவர் கருதுகிறார், அதன் அடிப்படையில் 1/3 பங்கு கேட்கிறார். இரண்டாவது பிரதிவாதி வாதியின் வாதத்தை ஆதரிக்கிறார். ஆனால், முதல் பிரதிவாதிதான் இந்த உயிலை (உது.ஆ1) முன்னிறுத்தி மற்ற இருவரின் பங்கையும் மறுக்கிறார். மேலும், அந்தச் சொத்து தனது வருமானத்தில் வாங்கப்பட்டது என்றும் கூறுகிறார். எங்களைப் பொறுத்தவரை, பினாமி பரிவர்த்தனை (தடை) சட்டம், 1988 ஏற்கனவே நடைமுறைக்கு வந்துவிட்டதால், 2000-ம் ஆண்டில் வாங்கப்பட்ட இந்தச் சொத்தில் அத்தகைய வாதத்தை அவர் முன்வைக்க முடியாது. எனவே, அந்தத் தாயே அந்தச் சொத்தின் முழு உரிமையாளராகக் கருதப்பட வேண்டும்.

12. இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925, பிரிவு 2(h)-ன் படி 'உயில்' என்பது: ''ஒரு நபர் தனது மரணத்திற்குப் பிறகு தனது சொத்து எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பது குறித்து சட்டப்பூர்வமாகத் தெரிவிக்கும் விருப்பம் ஆகும்.''

13. இதன்படி, ஒரு உயில் என்பது ஒரு நபர் தனது சொந்தச் சொத்தைப் பற்றியதாக மட்டுமே இருக்க வேண்டும். மற்றொருவரின் சொத்தைப் பற்றி அது இருக்க முடியாது. சா.ஆ.ஆ1 ல் பின்வருமாறு உள்ளது:

'மேற்படி சொத்து என் பெயரில் இருந்தாலும் அது எனது மகள் அம்சகல்யாணிக்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்தாகும். அதில் எனக்கோ எனது இரு மகன்களுக்கோ எவ்வித உரிமையோ பாத்தியதையோ கிடையாது'.

14. இந்த உயிலில், சொத்தின் உரிமை முதல் பிரதிவாதிக்கே (மகளுக்கே) சொந்தமானது என அந்தத் தாய் (உயில் எழுதியவர்) ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின்படி இதை ஒரு செல்லத்தக்க உயிலாகக் கருத முடியாது.

15. இது தவிர, உயிலின் சாட்சியான ஈ.ஙி.2, தனது சாட்சியத்தில் அவரும் மற்றொரு சாட்சியான பொன்னேஸ்வரியும் உயிலில் கையெழுத்திட்டதாகக் கூறினாலும், குறுக்கு விசாரணையின்போது தனக்கு பொன்னேஸ்வரியைத் தெரியாது எனத் தெளிவாக ஒப்புக் கொண்டுள்ளார். மேலும், முதல் இரண்டு கையெழுத்துக்களுக்கும் மூன்றாவது கையெழுத்திற்கும் மையளவில் வித்தியாசம் இருப்பதை ஒப்புக் கொண்ட அவர், ஆனால் அனைத்தும் ஒரே பேனாவால் இடப்பட்டது என்கிறார். உயிலின் இரண்டாவது பக்கத்தில் உள்ள கடைசி இரண்டு வரிகளுக்கு இடையே இடைவெளி குறைவாக இருப்பதையும் அவர் ஒப்புக்கொண்டார். இத்தகைய அம்சங்களைக் கருத்தில் கொண்டே விசாரணை நீதிமன்றம் இந்த உயிலை நம்புவது

பாதுகாப்பானது அல்ல என்ற முடிவுக்கு வந்தது. உயிலை முன்னிறுத்துபவர் அதன் உருவாக்கத்தை நிரூபிப்பதுடன், அதைச் சுற்றியுள்ள சந்தேகங் களையும் களைய வேண்டும்.

16. இந்த வழக்கில், D.W.2–ன் சாட்சியமே உயில் எழுதப்பட்ட விதம் குறித்து நீதிமன்றத்திற்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. உயிலை எழுதியவர் மற்றும் மற்றொரு சாட்சியைப் பற்றி அவருக்குத் தெரியாமல் இருப்பதும், மையில் உள்ள வேறுபாடு குறித்த அவரது ஒப்புதலும் அவரது சாட்சியத்தின் நம்பகத்தன்மையைக் குறைக்கிறது. மேலும், முன்பே குறிப்பிட்டது போல, இது ஒருவரின் சொந்தச் சொத்தைப் பற்றிய உயிலாக இல்லாமல், மற்றவரின் உரிமையை ஒப்புக்கொள்ளும் ஆவணமாக இருப்பதால், இதை உயில் என்று கருத முடியாது. இது ஒரு ‘பெனாமி’ உரிமையை விட்டுக்கொடுக்கும் ஆவணமாகவே கருதப்பட முடியும். அத்தகைய ஆவணம், 1988–ம் ஆண்டு சட்டத்திற்குப் பிறகு செல்லாதது ஆகும். அப்படி ஒரு ஆவணம் இருந்தாலும், அது பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்; பதிவு செய்யப் படாத ஆவணம் மூலம் பெனாமி உரிமையை விட்டுக்கொடுக்க முடியாது.

17. மேல்முறையீட்டாளர் வழக்கறிஞர் கூறியது போல, வெறும் கண்ணால் பார்த்து நீதிமன்றம் மை வேறுபாட்டைத் தீர்மானிக்கக் கூடாது என்ற வாதத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டாலும், இந்த வழக்கில் சாட்சி ஈ.ஙி.2–ன் வாக்குமூலமே அந்த வேறுபாட்டை உறுதிப் படுத்துகிறது. நாங்கள் அசல் உயிலை ஆய்வு செய்தபோது, வரிகளுக்கு இடையிலான இடைவெளி குறித்த விசாரணை நீதிமன்றத்தின் கண்டுபிடிப்பு சரியானது என்றே கருதுகிறோம்.

18. எனவே, உயில் குறித்த விசாரணை நீதிமன்றத்தின் முடிவை உறுதிப்படுத்துவதில் எங்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. உயில் நிராகரிக்கப்பட்ட நிலையில், நவனீதமே சொத்தின் உரிமையாளர் என்பதும், வாதி மற்றும் பிரதிவாதிகள் அவரது பிள்ளைகள் என்பதும் உறுதியாகிறது.

19. இரண்டாவது பிரதிவாதி திருமண மாகாமல் காலமானதால், இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8–ன்படி, அவரது சகோதரனும் சகோதரியும் (வாதி மற்றும் முதல் பிரதிவாதி) அவரது பங்கினைச் சமமாகப் பெற தகுதி யுடையவர்கள்.

20. இதற்கிணங்க, இந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. 02.11.2012 தேதியிட்ட முதற்கட்டத் தீர்ப்பாணை மாற்றிய மைக்கப்படுகிறது. அதன்படி, வழக்கிற்குரிய சொத்தில் மேல்முறையீட்டாளர் (முதல் பிரதி வாதி) மற்றும் முதல் எதிர்மனுதாரர் (வாதி) ஆகிய இருவருக்கும் தலா பாதி (1/2) பங்கு உண்டு எனத் தீர்ப்பளிக்கப்படுகிறது. இதனுடன் தொடர்புடைய இதர மனுக்கள் தள்ளுபடி செய்யப் படுகின்றன. செலவுத் தொகை ஏதுமில்லை.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

---

**அனுமதியின்றி அறைக்குள் நுழைந்த ஊழியர் இளம்பெண் வழக்குரைஞருக்கு நட்சத்திர ஓட்டல் ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். நுகர்வோர் நீதிமன்றம் தீர்ப்பு**

சென்னையைச் சேர்ந்த இளம்பெண் வழக்குரைஞர் ஒருவர் தனது கணவருடன் டெல்லி உதய்பூரில் பிரபல நட்சத்திர ஓட்டலில் கடந்த ஜனவரி மாதம் அறை எடுத்து தங்கியிருந்தார். கர்ப்பிணி யாக இருந்த அவர், தனது கணவரின் 27வது பிறந்த நாள் விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாட சென்றிருந்தார். அங்கு நள்ளிரவில் குளியலறை யில் தனது கணவருடன் இருந்தார். அப்போது ஓட்டல் ஊழியர் ஒருவர், தங்களது அனுமதியின்றி கதவை திறந்து உள்ளே வந்ததாகவும் கதவை திறக்க பெல் அடிக்கவில்லை எனவும், சரியான நடைமுறைகளை கடைப்பிடிக்கவில்லை எனக் கூறி அந்த ஓட்டல் நிர்வாகம் மீது உரிய நடவடிக்கை எடுக்க சென்னை நுகர்வோர் நீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடர்ந்தார். இதில் அந்த ஓட்டல் நிர்வாக சேவை குறைபாடு காரணமாக அறையின் வாடகை தொகை ரூ.55 ஆயிரத்து 500 ஐயும், இழப்பீடாக ரூ.10 லட்சமும் பெண் வழக்குரைஞருக்கு வழங்க நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

**நன்றி: தினந்தந்தி 27.12.2025**

# இந்து சமய-அறநிலைய சட்டப் பிரிவு 70ன்படி வழக்கு நிலுவையின் போது ஆணையரின் ஆணைக்கு எதிராக தடையாணை வழங்கிட உரிமையியல் நீதிமன்றம் அதிகாரம் கொண்டிருக்கவில்லை

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.ஆர்.விஜயகுமார்**
**உசீம (MD) (பிடி) எண் 2745/2024 மற்றும்**
**உபம (MD) எண் 15596/2024**
**2025 (3) சிடிசி 472**

**கார்த்திக் என்ற கார்த்திகேயன் ...மனுதாரர்**
**–எதிர்–**
**எஸ்.பொன்னுபாண்டியன் மற்றும் 32 பிறர் ...எதிர்மனுதாரர்கள்**

திரு.ஆர்.ஜி.சங்கர் கணேஷ், மனுதாரரது வழக்குரைஞர்; திரு வி.சண்முகநாதன், 1,8,10 30 மற்றும் 31வது எதிர்மனுதாரர்களுக்காக; திரு.எஸ்.பி.மகாராஜன், சிறப்பு அரசு வழக்குரைஞர், 2–3வது எதிர்மனுதாரர் களுக்காக; திருவாளர்கள் ஆனந்தவள்ளி, 4,6,7,29 மற்றும் 33வது எதிர்மனுதாரர்கள் சார்பில்

**கோருகை:** மேலூர் சார்பு நீதிமன்றத்து கோப்பிலான முவ எண் 196/2023இல் வவி எண் 2/23 இல் உண்டான 28.7.2023 தேதிய ஆணையை நீக்கறவாக்கிக் கொண்டு இந்த உரிமையியல் பல்வகை மனுவை ஏற்றுக் கொள்ளலுக்காக இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 227 கீழ் உரிமையியல் சீராய்வு மனு தாக்கலானது

18.2.2025 அன்று தள்ளிவைப்பான தீர்ப்புரை 20.2.2025 அன்று பகரப்பட்டது.

## ஆணை

உரிமையியல் சீராய்வு மனுதாரர் மேலூர் சார்பு நீதிமன்ற கோப்பிலான முவ எண் 196/ 2023இல் வழக்கின் 19வது எதிர்வாதி ஆவார்.

**ஏ.பொருண்மை வார்ப்பு:**

2. இணை ஆணையரால் உருவாக்கப்பட்ட திட்டத்தை உறுதியாக்கிக் கொண்டு இச–அநி துறை ஆணையரால் இயற்றப்பட்ட ஆணைக்கு சவாலிட்டுக் கொண்டு மேலுள்ள வழக்கு தாக்கலாகியுள்ளது. இணை ஆணையரின் திட்ட உத்தரவை எவ்விதத்திலும் நிறைவேற்றலிருந்து அறநிலையத்துறை அலுவலர்களை தடுத்து நிறுத்தலுக்கான நிரந்தர உறுத்துக் கட்டளை தீர்ப்பாணைக்காகவும் மனுதாரர் இறைஞ்சி யுள்ளார். மரபுவழி பொறுப்பாட்சியர்கள் –பூசாரிகள் நிருவாகம் மற்றும் மேலாண்மை செய்தலில் எவ்வகையிலும் தலையிலிடலிருந்து அறநிலைய துறை அதிகாரிகளை தடுத்து நிறுத்தலுக்கான நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பாணைக்காகவும் வாதி இறைஞ்சியுள்ளார்.

3. வழக்குடன் சேர்ந்து கோயிலுக்குத் திட்டம் வனைந்து கொண்டு மேம எண்கள் 81,82, மற்றும் 83/2018இல் இயற்றப்பட்ட 23.2.2018 தேதிய உத்தாவுகளையும் முவ எண் 22/2011 இலும் தன்னிச்சை மு.வி.எண் 21/2016இலும் உண்டான 11.2.2018 தேதிய உத்தரவுகளை யும் எவ்வகையிலும் வழக்கு தீர்வாக்கும் வரை யில் எமேமுகள் எதிர்வாதிகள் நிறைவேற்றலை யும் மரபுவழி பொறுப்புரிமையாக்களால் கோயில் மேலாண்மை செய்யப்படுதலில் தலை யிடலிலும் தடுத்து நிறுத்திடும் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரிக் கொண்டு வவி எண் 2/2023ஐ வாதி தாக்கலிட்டிருந்தார்.

4.இச–அநி துறை ஆணையரது ஆணை செயலாற்றப்படுமானால் கோயிலை மேலாண் செய்தலையும் கோயிலில் வழிபாடையும்

வருமானத்தையும் அது பாதிக்கும் என்ற முகாந்திரத்தில் ஒருதலையான இடைக்கால உறுத்துக் கட்டளையை 28.7.2023 அன்று விசாரணை நீதிமன்றம் வழங்கியிருந்தது, இடைக் கால உறுத்துக் கட்டளை வழங்கப்படவில்லை யானால் அது எதிர்வாதிகளுக்குள்ளதை விட வாதிக்கு பழுது செய்யவியலாத இழப்பையும் இடர்பாடையும் ஏற்படுத்தும்.

5. மேல்சொன்ன கருத்துரைகள்பேரில் கோயிலுக்காக திட்டத்தை வனைந்திடும் இணை ஆணையரது ஆணையை உறுதியாக்கிக் கொண்டு இச-அநி துறை ஆணையரால் இயற்றப்பட்ட ஆணையை செயல்படுத்தலி லிருந்து தனி நபர் மற்றும் அலுவலக எமேமு களை தடுத்து நிறுத்தும் இடைக்கால உறுத்துக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. இந்த இடைக்கால உறுத்துக்கட்டளைக்கு எதிரான சவால் இந்த உரிமையியல் சீராய்வு மனுவில் வைக்கப் படுகிறது.

**பி.வழக்குரைஞர்களது பணிந்துரைகள்:**

6.சீராய்வு மனுதாரது வழக்குரைஞரது கூற்றுப்படி தற்போதைய வழக்கு இச-அ நி சட்டப் பிரிவு 70 கீழான சட்டமுறையான வழக்காகும். சட்ட பிரிவு 70/படி வழக்கு நிலுவையின்போது ஆணையரின் ஆணைக்கு எதிரான தடை யாணை வழங்கிட உரிமையியியல் நீதிமன்றம் அதிகாரம் கொண்டிருக்கவில்லை. எனினும் கோருகையை இடைக்கால விண்ணப்பமாக் தரித்துக் கொண்டு இப்போதைய ஒருதலை யான இடைக்கால உறுத்துக்கட்டளை அளிக்கப் பட்டுள்ளது. திட்ட நிறைவேற்றம் தொடர்பாக இடைக்கால தடையாணை எதனையும் இயற்றலுக்கு உரிமையியல் நீதிமன்றம் அதிகாரம் கொண்டி ருக்காதபோது திட்டத்தை அலுவலர்கள் நிறை வேற்றுவதை தடுத்து நிறுத்தும் இடைக்கால உறுத்துக்கட்டளை இயற்றப்பட முடியாது. இடைக் கால உறுத்துக்கட்டளை ஆள்வையின்றி பிறப்பிக்கப்பட்டிருக்கும் நிலையில், உறுத்துக் கட்டளை நீக்கல் விண்ணப்பத்தை அல்லது மேல்முறையீட்டை தாக்கலிடாமல் அரசமைப்பு சட்ட உறுப்பு 227கீழ் இப்போதைய உரிமை யியல் சீராய்வு மனு தாக்கலாகியுள்ளது.

7. எதிர்மாறாக, ஒருதலையான இடைக்கால உறுத்துக்கட்டளை மட்டும் பிறப்பிக்கப்பட்டுள்ளது எனும் பொருண்மை பரிசீலிப்பில் அரசமைப்பு சட்ட உறுப்பு 227 கீழ் தாக்கலான இப்போதுள்ள சீராய்வு மனு செல்லாது எனச181030 மற்றும் 31வது எமேமுகள் சார்பில் வழக்குரைஞர் திரு.வி.ஆர்.சண்புகனாதனும் 46729 மற்றும் 33வது எமேமுகள் சார்பில் குமாரி ஜே.ஆனந்த வல்லியும் வாதிட்டிருந்தார்கள். தகுதியுறு மேல் முறையீடு நீதிமன்றத்தில் இடைக்கால உத்தரவை நீக்கிடலுக்கான விண்ணபத்தை அல்லது மேல்முறையீடை சீராய்வு மனுதாரர் தாக்கலிட முடியும். திறனுறு மாற்றுமுறை தீர்வழி ஏற்கனவே கிட்டியதால் அரசமைப்பு சட்ட உறுப்பு 227 கீழான இப்போதய சீராய்வு மனு நிலை யுறுத்ததக்கதல்ல.

8. அனைத்து மரபுவழி பொறுப்பாட்சியர் களையும் அகற்றிக் கொண்டு 1.7.2024 தேதிய சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் அறநிலையத் துறை(ஏ.என்13-1) அரசாணை ப.வ.எண் 217 ஐ அரசு செயலர் இயற்றியிருந்தார் என மேலும் வாதிடப்படுகிறது. சொன்ன அரசாணைக்கு மூன்று பொறுப்பாட்சியர்களால் உபமே (ஏம்) எண்கள் 124-1241/2024 மூலமாக சவாலிடப்பட்டது. அவற்றில் இந்த நீதிமன்றம் 23.9.2024 அன்று இடைக்கால தடையாணை இயற்றியது. சொன்ன அரசாணைக்கு சவாலிட்டுக் கொண்டு மற்ற நான்கு பொறுப்பாட்சியர்களும் உபமே (எம்டி) எண்கள் 1938, 1039, 1040 -1041/2024ஐ தாக்கலிட்டுள்ளார்கள். 25/ 10.2024 தேதிய உத்தரவால் இடைக்கால ஆணை வழங்கிட மறுத்துக் கொண்டு இந்த நீதிமன்றம்,உமேஎண்8-3/2023இல்29.1.2020 தேதிய உத்தரவில் உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட குழு, மேலுள்ள மேல்முறையீடு நிலுவையாகும் வரையில் கோயிலையும் பொறுப்பு கழகத்தையும் தொடர்ந்து மேலாண்மை செய்யும் என கருத்துரைத்திருந்தது..

இந்த நீதிமன்றத்தின் ஆணை உச்ச நீதிமன்றத்தில் சிவி.ம. எண் 28715-28716 /2024 இல் எதிர்க்கப்பட்டது என எமேமு வழக்குரைஞர் மேலும் வாதிட்டிருந்தார். சிவிகள் மனுதாரர்கள் பொறுத்தளவில் இந்த நீதிமன்றத்தின் 25.10.2024 தேதிய ஆணையை உச்சநீதிமன்றம் நீக்கறவாக்கியது. உச்ச

நீதிமன்றத்து ஆணை பின்னொளியில் மட்டுமே விசாரணை நீதிமன்றத்தால் இயற்றலான இடைக்கால உறுத்துக்கட்டளை ஆணை பரிசீலிக்கப்பட வேண்டியதாகும்.

11.இந்து சமயம் மற்றும் அறநிலைய சட்ட பிரிவு 70இல் நம்புகை அந்தத் திட்ட செயலாக்களுக்கு இடைக்கால தடை யாணை விதித்தலுக்கு உரிமையியல் நீதிமன்றம் அதிகாரம் எதனையும் கொண்டிருக்கவில்லை என அலுவலக எமேமு சார்பு அரசு வழக்குரைஞர் வாதிட்டிருந்தார், ஆகையால் திட்ட உத்தரவை செயற்படுத்தலிலிருந்து அலுவக எமேமுகளை தடுத்து நிறுத்திடும் இடைக்கால உறுத்துக் கட்டளை ஆணையை விசாரணை நீதிமன்றம் வழங்கியது சரியானதல்ல.

12. ஒவ்வொரு தரப்பிலும் வைக்கப்ப பணிந்துரைகளை நான் பரிசீலித்து பதிவா வணத்திலுள்ள பொருட்கூறுகளை ஆழ்ந்து வாசித்துள்ளேன்.

**(சி) கலந்தாய்வு**

13.மேற்சொன்ன வழக்கு மதுரை இச–அநி துறை [நிருவாக] இணை ஆணையரது திட்ட உத்தரவை உறுதியாக்கிக் கொண்டு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் சட்டப் பிரிவு 70 கீழ் தாக்கலாகி யுள்ளது என்பதை மேலூர் சார்பு நீதிமன்ற கோப்பிலான முவ எண் 196/ 2023இன் வழக்குரை கோருகையை ஆழ்ந்து வாசித்தல் காட்டுகிறது.

14.மேற்சொன்ன சட்டப் பிரிவு 70(1)(ii) கீழ், ஆணையரால் உத்தரவை செயலாக்கலுக்கு எதிராக இடைக்கால தடையாணை விதித்திட உரிமையியல் நீதிமன்றம் ஆள்வை ஏதும் கொண்டிருக்கவில்லை. இப்போதைய வழக்கில் திட்ட உத்தரவை எமேமுகள் செயல்படுத்தலை தடுத்துநிறுத்தும் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவுக்காக வாதி இறைஞ்சியிருந்தார். ஆகையால் இந்து சமயம் மற்றும் அறநிலைய சட்டப்பிரிவு 70 கீழான தடையை மடக்கிட உறுத்துக்கட்டளைக்காக கோருகை வைக்கப் பட்டுள்ளது என்பது தெளிவாகும். உறுத்துக் கட்டளை உத்தரவை இயற்றிட விசாரணை நீதிமன்றம் முனைந்துள்ளது. அதன் விளைவாக, எவ்வகையிலும் ஆள்வரை கொண்டிருக்காத நீதிமன்றம் திறனாக திட்ட செயலாற்றலைக்கு தடையாணையிட்டுக் கொண்டு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கியுள்ளது. ஒருதலை யான உறுத்துக்கட்டளைக்கான உத்தரவு ஆள்வையின்றியும் சட்டமுறை வகைய மீறலிலும் வழங்கப்பட்டுள்ளதால் அரசமைப்பு சட்ட உறுப்பு 227 கீழ் தாக்கலான இப்போதைய சீராய்வு மனு நிலையுறுத்ததக்கதாகும் என்பது இந்த நீதிமன்றத்தின் பரிசீலிப்பான கருத்தாகும்.

15. சட்டமுறை வகையத்தை மீறி உறுத்துக் கட்டளை உத்தரவை வியாரணை நீதிமன்றம் பிறப்பித்திருக்கிறது. ஆகையால் மு.வ.எண் 196/2023இல் வவி எண்2/2023இல் ஏற்பட்ட 28.7.2023 தேதிய உத்தரவு இதன் மூலம் நீக்கறவாக்கப்படுகிறது. தகுதிப்பாடுகள் அடிப்படையிலும் சட்டநெறிக்கு இசைவாகவும் வழக்கை தீர்வாக்குமாறு விசாரணை நீதிமன்றம் பணிக்கப்படுகிறது.

16. கோயிலை நிருவாகம் செய்தல் பொறுத்த மட்டில் சிவிம(உ) எண்கள் 28715–28716/ 2024இல் உச்ச நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட 10.2.2024 தேதிய ஆணை காரணமாக உபமே(எண்கள்)1240–1241/2024இல் உபம(ஏம்டி) எணகள் 13016–13017/2024 இல் உண்டான இந்த நீதிமன்றத்தின் 23.9.2024 தேதிய தடையாணைக்கு புத்துயிரூட்டப்படுகிறது. உபமே(எண்கள்)1038,1039, 1040–1041 /2024இல் உபம(ஏம்டி) எண்கள் 10895, 10899, 10900–11903/2024இல் உண்டான இந்த நீதிமன்றத்தின் 14.8.2024 தேதிய ஆணைக்கும் புத்துயிரூட்டப்படுகிறது. விளைவாக உமே எண்803/2020இல் உச்சநீதிமன்றத்தால் நியமிக்கக்கப்பட்ட ஐந்து நபர்கள் உபமே (எம்டி) எண்கள்1240–1241/2024இலிலுள்ள மூன்று பொறுப்பாட்சியர்கள்–மேமுகளுடன் சேர்ந்து கோயிலையும் பொறுப்பு கழகத்தையும் மேலாண்மை செய்வதை தொடருவார்கள்.

17. இந்த உரிமையியல் சீராய்வு மனு மேல்சொன்ன கருத்துரைகளுடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. செலவு தொகையில்லை. விளைவாக தொடர்புறு பல்வகை மனு முடித்து வைக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: பா.ஞானசேகரன்**

# சர்ச்சைக்குரிய உண்மைகள் சார்ந்து நிலத்தின் உரிமை அல்லது நில வகைப்பாட்டை மறுவரையறை செய்ய உத்தரவிட, உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.எஸ்.எம்.சுப்பிரமணியம், மாண்புமிகு நீதிபதி திரு.முகமது ஷபீக்**
**நீ.பே.மேமு எண் 2874/2025 மற்றும் உஇவ மனு எண் 23233/2025**
**நாள் 15/10/2025**
**(2025 (6) CTC 37)**

1. மாவட்ட ஆட்சியர்,
   மயிலாடுதுறை மாவட்டம்
   தமிழ்நாடு 609 001
2. வருவாய் கோட்ட அலுவலர்,
   மயிலாடுதுறை மாவட்டம்
3. வட்டாட்சியர், சீர்காழி கிராமம் ...மேல்முறையீட்டாளர்கள்

–எதிர்–

1. தனராஜ் ஜெயின்
2. இச்ராஜ் ஜெயின்
3. அரிஹன்ட் ஜெயின்
4. ஸ்வீட்டி ஜெயின் ...எதிர்மனுதாரர்கள்

வேண்டுகை: நீ.பே. மனு எண் 23909/2024-ல் 13.11.2024 அன்று பிறப்பிக்கப் பட்ட உத்தரவை ரத்து செய்யக் கோரி, உரிமைப் பட்டையப் பிரிவு 15-இன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மேல்முறையீட்டு மனு.

மனுதாரர் தரப்பில்: திரு. ஆர். ராமன்லால், கூடுதல் அரசு வழக்கறிஞர், இவருக்கு உதவி யாக திரு.டி.அருண்குமார், அரசு வழக்கறிஞர்

எதிர்மனுதாரர் தரப்பில்: திரு. ஸ்ரீநாத் ஸ்ரீதேவன், மூத்த வழக்கறிஞர், திகள். கவிதா தீனதயாளன் சார்பாக

## தீர்ப்பு

**(நீதிபதி திரு. எஸ்.எம். சுப்பிரமணியம் அவர்கள் வழங்கியது)**

வழக்கு எண் W.P.No.23909 of 2024-ல் 13.11.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட நீதிப் பேராணை உத்தரவை எதிர்த்து இந்த மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இந்த நீதிமன்றத்தில் மேல் முறையீட்டாளராக உள்ளார்.

### I. வழக்கின் சுருக்கம்:

2. மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகரம், பழைய நில அளவை எண் 425/1A, நகர நில அளவை எண்கள் (T.S.Nos.) 57/2, 57/4, 57/5 மற்றும் 57/6 ஆகிய நிலங்களுக்கு தங்கள் பெயரில் பட்டா வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தனர்.

3. முதல் எதிர்மனுதாரர் 23.04.2024 அன்று சீர்காழி வட்டாட்சியரிடம் ஒரு கோரிக்கை மனுவை அளித்தார். அதில், 2024-ம் ஆண்டின் 1529-ம் எண் கொண்ட விற்பனைப் பத்திரத்தின்படி, சீர்காழி தாலுகா, சீர்காழி கிராமம், வார்டு-அ, பிளாக் 24, நகர நில அளவை எண்

54 (பழைய எண் 425/1A)–ல் உள்ள சுமார் 0.13.0 ஏர்ஸ் நிலத்திற்குத் தனி நபர் பட்டா வழங்கக் கோரியிருந்தார். சீர்காழி வட்டாட்சியர் (3–வது எதிர்மனுதாரர்), வருவாய்த்துறை ஆவணங்களைச் சரிபார்த்து 10.05.2024 அன்று சீர்காழி வருவாய் கோட்டாட்சியருக்கு கடிதம் எழுதினார். அதில், சம்பந்தப்பட்ட நிலம் 'முதலியார் குளம்' என்று வகைப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதன் பிறகு, வருவாய் கோட்டாட்சியர், மயிலாடுதுறை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட உதவி இயக்குநருக்குக் கடிதம் எழுதினார். அதற்குப் பதிலளித்த உதவி இயக்குநர், 20.06.2024 தேதியிட்ட கடிதத்தில், எதிர்மனுதாரர்கள் 1 முதல் 4 வரை உள்ளவர்கள் 0.38.50 ஏர்ஸ் நிலத்திற்கு இலவச வீட்டுமனைப் பட்டா கோருவதாகவும், தற்போது இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை என்றும் கூறி, பட்டா பெறத் தகுதியுள்ள நீதிமன்றத்தை அணுகுமாறு அறிவுறுத்தினார்.

4. இத்தகைய சூழ்நிலையில், நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றத் தனி நீதிபதி, அந்த நிலங்களை மறுவகைப்படுத்தி, எட்டு வாரங்களுக்குள் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களின் பெயரில் பட்டா வழங்க உத்தரவிட்டு மனுவை அனுமதித்தார். இந்த உத்தரவினால் பாதிக்கப் பட்ட மாவட்ட ஆட்சியர், தற்போது இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

**II. தரப்பினரின் வாதங்கள்:**

5. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர், சம்பந்தப்பட்ட நிலங்கள் 'அரசு புறம்போக்கு' என்று வகைப் படுத்தப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக அது 'முதலியார் குளம்' எனப்படும் நீர்நிலை என்றும் வாதிட்டார். எனவே, அதற்குப் பட்டா வழங்க முடியாது என்று அவர் கூறினார். இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நகர நில அளவைப் பதிவேடு, அந்த நிலம் 'அரசு புறம்போக்கு' மற்றும் 'முதலியார் குளம்' என்று வகைப்படுத்தப்பட்டுள்ளதைக் காட்டுகிறது. எதிர் மனுதாரர்கள் தாக்கல் செய்த விற்பனைப் பத்திரத்திலும் அது 'முதலியார் குளம்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஒரு நீர்நிலைக்கு வெறும் விற்பனைப் பத்திரத்தின் அடிப்படையில் பட்டா வழங்க முடியாது என்று அவர் வாதிட்டார்.

5. கூடுதல் தலைமை வழக்கறிஞர், இந்த நீதிமன்றத்தின் இரு நீதியர் அமர்வு வழங்கிய ராமநாதபுரம் பெரிய மொஹல்லம் முஸ்லிம் ஜமாத் நிர்வாக மன்றம் –எதிர்– தமிழ்நாடு அரசு என்ற (நீ.பே.மேமு எண் 3531/2019, நாள் 06–01–2022) வழக்கின் தீர்ப்பைச் சுட்டிக் காட்டினார். அதன் முக்கியப் பகுதி இதோ:

''8. 1963–ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 30/1963) பிரிவு 10–ஐக் குறிப்பிட்டு (இது 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 2–ன் மூலம் சேர்க்கப்பட்டது), தனியார் குளங்கள் மற்றும் ஊரணிகளுக்கும் கூட பட்டா வழங்க முடியாது என்று அவர் (வழக்கறிஞர்) தெரிவித்துள்ளார். இதே போன்ற ஒரு பிரச்சனை தாமோதர்தாஸ் சத்ரா –எதிர்– தமிழ்நாடு அரசு [1997 (3) CTC 631] என்ற வழக்கில் மாண்புமிகு இருநீதியர் அமர்வு முன்னிலையில் பரிசீலனைக்கு வந்தபோது, தற்போதைய சட்டத்தின் பிரிவு 3(b)-க்கு இணையான ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 3(b)–ஐ ஆய்வு செய்து நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது. அந்தத் தீர்ப்பின்படி, அனைத்துப் பாசனக் கட்டுமானங்களும் அரசாங்கத்திடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், ரயத்துவாரி பட்டா என்பது தனியார் நிலங்களுக்கு மட்டுமே உரித்தானது என்றும், அதுவும் அந்த நிலங்கள் அரசிடம் ஒப்படைக்கப்பட்ட தேதியில் அத்தகைய தன்மையில் இருந்தனவா என்று ஆய்வு செய்த பிறகே வழங்கப்பட வேண்டும் என்றும் உறுதி செய்யப்பட்டது. 1963–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 30–ன் பிரிவு 3(b), சிறு இனாம் நிலங்கள் அரசாங்கத்திடம் சேருவது குறித்துக் கூறுகிறது. அதன்படி, அனைத்துப் பொது நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், தரிசு நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், காடுகள், சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள், குவாரிகள், ஆறுகள் மற்றும் ஓடைகள், குளங்கள் மற்றும் ஊரணிகள் (தனியார் குளங்கள் மற்றும் ஊரணிகள் உட்பட) மற்றும் பாசனக் கட்டுமானங்கள் உள்ளிட்ட அனைத்து சிறு இனாம்களும், எவ்வித

வில்லங்கமுமின்றி அரசாங்கத்திற்கு மாற்றப் பட்டு, அரசாங்கத்திடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அது அறிவிக்கிறது. எனவே, தாமோதர்தாஸ் சத்ரம் வழக்கில் இந்தச் சட்டம் ஏற்கனவே இந்த நீதிமன்றத்தால் உறுதி செய்யப் பட்டுத் தெளிவாக உள்ள நிலையில், சம்பந்தப் பட்ட நிலங்களைப் புறம்போக்கு என வகைப் படுத்திய ஐந்தாவது எதிர்மனுதாரரின் நடவடிக்கை தவறானது என்று மேல்முறையீட்டாளர் கூறுவது, 1963-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(b)-ன்படி தவறான புரிதலாகும் என்று அவர் வாதிட்டார்.''

''9.அரசு வழக்கறிஞரின் மேற்கூறிய வாதங் களில் உண்மை இருப்பதை நாங்கள் காண்கிறோம். தொடக்கத்தில், இந்தப் சட்டம் அமல்படுத்தப்பட்டு பட்டினம்காத்தான் கிராமம் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டபோது, நிலஅளவை எண் 287/932-ல் உள்ள 3.72 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலங்கள் 'புறம் போக்கு' என்று பதிவு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், நிலவரித் திட்ட நடவடிக்கைகளின் போது சம்பந்தப்பட்ட நிலங்கள் புறம்போக்கு எனப் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் கவனித்த மேல்முறையீட்டாளர், அந்தப் பதிவை மாற்றித் தன் பெயரில் மீண்டும் பதிவு செய்யக் கோரி, சென்னை சேப்பாக்கத்தில் உள்ள நில நிர்வாக சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரை (இரண்டாவது எதிர்மனுதாரர்) அணுகினார். ஆனால், இரண்டாவது எதிர்மனுதாரர் 10.11.1987 தேதியிட்ட தனது உத்தரவின் மூலம், இதற்கான தீர்வைப் பெற உரிமையியல் சட்ட விதிகளின்படி தகுந்த அதிகார அமைப்பை அணுகுமாறு மேல் முறையீட்டாளருக்கு அறிவுறுத்தினார். மேலும், சென்னை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் (மூன்றாவது எதிர்மனுதாரர்), 14.11.1994 தேதியிட்ட தனது உத்தரவில், இந்தச் சட்டத்தின் பிரிவு 11(a)-ன் கீழ் மேல் முறையீட்டாளர் கோரும் உரிமையை ஏற்க முடியாது என்று தீர்ப்பளித்துள்ளார் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மூன்றாவது எதிர்மனுதாரரின் இத்தகைய அணுகுமுறை, 1963-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 30-ன் பிரிவு 10(b) மற்றும் 10-A ஆகியவற்றின்படி முற்றிலும் சரியானது என்பது எங்களது கருத்தாகும். அந்தப் பிரிவுகள் பின்வருமாறு:

''ரயத்துவாரி பட்டா வழங்கக் கூடாத நிலங்கள்:

பிரிவு 8 மற்றும் 9-ல் என்ன கூறப்பட்டி ருந்தாலும், சிறு இனம் எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்க்கண்ட வகைப்பாட்டில் வரும் நிலங்களுக்கு ரயத்துவாரி பட்டா வழங்கப்படக் கூடாது.

அ) காடுகள்:

ஆ) குளங்களின் படுகைகள் மற்றும் கரைகள், வரத்துக் கால்வாய்கள், வடிகால்கள், உபரி நீர் அல்லது பாசனக் கால்வாய்கள்.

10-அ. தனியார் குளம் அல்லது ஊரணிக்கு ரயத்துவாரி பட்டா வழங்கக் கூடாது:

(1) இந்தச் சட்டத்தில் என்ன கூறப்பட்டி ருந்தாலும், எந்தவொரு தனியார் குளம் அல்லது ஊரணிக்கும் ரயத்துவாரி பட்டா வழங்கப்படக் கூடாது. (2) தமிழ்நாடு இனாம் எஸ்டேட்கள் மற்றும் சிறு இனாம்கள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்டம் 1975, அரசிதழில் வெளியிடப்படுவதற்கு முன்னதாக, ஏதேனும் தனியார் குளம் அல்லது ஊரணிக்கு ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டி ருந்தால், அது ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

மேற்கூறிய சட்டப் பிரிவுகளை மேலோட்ட மாகப் பார்த்தாலே, எந்தவொரு தனியார் குளம் அல்லது ஊரணிக்கும் பட்டா வழங்கப்படக் கூடாது என்பது தெளிவாகிறது. எனவே, மதுரை உதவி செட்டில்மெண்ட் அதிகாரி (5-வது எதிர் மனுதாரர்) 05.06.1995 அன்று பட்டா வழங்கப் பரிந்துரை செய்ததும், அதன் தொடர்ச்சியாகச் சென்னை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் (3-வது எதிர்மனுதாரர்) ராமநாதபுரம் வட்டாட்சியருக்குப் பட்டா வழங்க உத்தரவிட்டதும் சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல. ஏனெனில், 1963-ம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 30, பிரிவு 3(b)-ன்படி, பொது நிலங்கள், புறம்போக்குகள், தரிசு நிலங்கள், காடுகள், ஆறுகள், ஓடைகள், குளங்கள் மற்றும் ஊரணிகள் (தனியார் குளங்கள் உட்பட) அனைத்தும் எவ்வித வில்லங்கமு மின்றி அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். எனவே, மேல்முறையீட்டாளர் ஒரு

மத நிறுவனம் என்ற அடிப்படையில் இந்த நிலங்களின் மீது உரிமை கோருவதை சட்டப்படி ஏற்க முடியாது.

10..........

11மை..

12. இந்த முடிவின் அடிப்படையில், உயர் நீதிமன்றம் ஆணையரின் உத்தரவை உறுதி செய்திருக்க வேண்டும். இருப்பினும், ஒரு குறிப்பிட்ட பகுதி குளத்தின் தன்மையைக் கொண்டிருப்பதால் அதை ஒதுக்கீடு செய்ய முடியாது என்று உயர்நீதிமன்றம் கூறியது. எங்கள் பார்வையில், உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவைத் தக்கவைப்பது கடினம். ஒரு குளம் இருக்கிறது என்றும், மழைக்காலங்களில் அதன் பரப்பளவு மாறுபடுகிறது என்றும் ஒருமித்த கருத்து இருக்கும்போது, அந்த இடத்தின் எந்த வொரு பகுதியையும் வீடு கட்டுவதற்காகவோ அல்லது வேறு நோக்கங்களுக்காகவோ யாருக்கும் ஒதுக்கீடு செய்ய முடியாது.

7. 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட சொத்தின் மீது அவர்களுக்குச் சரியான உரிமை உள்ளது என்றும், எனவே வருவாய் நிலை ஆணை எண் 27-ன் கீழ் அவர்களுக்குப் பட்டா பெற உரிமை உண்டு என்றும் வாதிட்டார். அதிகாரிகள் அவர்களை நீதிமன்ற உத்தரவு பெற்று வருமாறு கூறியதால்தான் அவர்கள் நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்ததாகவும், விற்பனைப் பத்திரங்களைப் பரிசீலித்தே தனி நீதிபதி அவர்களுக்குத் தீர்வு வழங்கினார் என்றும் அவர் கூறினார்.

8. குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே நடந்த பாகப்பிரிவினைப் பத்திரங்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், உதவி இயக்குநர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோருக்கு இடை யிலான துறைசார்ந்த கடிதத் தொடர்புகளை மூத்த வழக்கறிஞர் சுட்டிக் காட்டினார். மேலும் 1940-ம் ஆண்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணையும் முன்வைக்கப்பட்டது. உரிமை உறுதி செய்யப் பட்ட பிறகு, நிலத்தை மறுவகைப்படுத்த தனி நீதிபதி உத்தரவிட்டது சரியே என்று வாதிடப் பட்டது.

III. **சட்ட நிலை:**

9. இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 226-ன் கீழ் உயர்நீதிமன்றத்திற்கு வழங்கப் பட்டுள்ள நீதித்துறை மறுஆய்வு அதிகாரம் என்பது, ஒரு முடிவு எடுக்கப்பட்ட விதம் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு இருக்கிறதா என்பதை உறுதி செய்வதற்கே அன்றி, அந்த முடிவையே ஆராய்வதற்கு அல்ல. எனவே, சர்ச்சைக்குரிய உண்மைகளை நீதிப்பேராணை விசாரணையில் தீர்மானிக்க முடியாது.

**அ. சர்ச்சைக்குரிய உண்மைகளும் நீதிப் பேராணை அதிகார வரம்பும்:**

10. ஒரு வழக்கின் தீர்வு சர்ச்சைக்குரிய உண்மைகளை ஆராய்வதை உள்ளடக்கியதாக இருக்கும்போது, உயர்நீதிமன்றம் அரசிய லமைப்புச் சட்டம் பிரிவு 226-ன் கீழ் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது என்பது நிலைநாட்டப்பட்ட சட்டக் கொள்கையாகும். நீதிப்பேராணை அதிகார வரம்பு என்பது முதன்மையாகச் சட்டபூர்வ மற்றும் அடிப்படை உரிமைகளை நிலைநாட்டவே உருவாக்கப் பட்டது; இது உரிமையியல் நீதிமன்றங்கள் செய்ய வேண்டிய விரிவான உண்மை கண்டறியும் விசாரணைக்கு மாற்றாக அமையாது.

11. தலைவர், கிரிட் கார்ப்பரேஷன் ஆப் ஒரிஸ்ஸா லிட் (கிரிட்கோ) -எதிர்- சுகமணி தாஸ் (1999 (7) SCC 298) என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் இதே சிக்கலைக் கையாண்டது. மின்சார வாரியத்தின் கவனக்குறைவால் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததற்குக் இழப்பீடு கோரி நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப் பட்டது. உயர்நீதிமன்றம் அதற்கு நிவாரணம் வழங்கியது. ஆனால், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அந்த அணுகுமுறையை ரத்து செய்து பின்வருமாறு கூறியது:

"6. எமது கருத்தின்படி, அரசியலமைப்பின் 226-வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குத் தகுதியற்ற வழக்குகளாக இருந்தபோதிலும், இந்த நீதிப் பேராணை மனுக்களை விசாரணைக்கு ஏற்றதன் மூலம் உயர்நீதிமன்றம் தவறிழைத்துள்ளது. மேல்முறையீடு செய்தவர்களின் மின் விநியோகக் கம்பிகள் அறுந்து விழுந்ததன் விளைவாக,

இறந்தவர்கள் அந்த மின்சாரக் கம்பிகளுடன் தொடர்பு கொண்டதால் மரணம் ஏற்பட்டது என்ற அடிப்படையிலேயே, அது "வெளிப்படையாக/முதற்கண் மேல்முறையீடு செய்தவர்களின் கவனக்குறைவைக் காட்டுகிறது" என்று உயர் நீதிமன்றம் கருதியது தவறானது. இவை அனைத்தும் துன்புறுத்தல் என்பதையும், கவனக் குறைவு என்பது முதலில் மனுதாரர்களால் நிரூபிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதையும் உயர்நீதிமன்றம் உணரத் தவறிவிட்டது. முதலாம் மேல்முறையீட்டாளருக்குச் சொந்தமான மின் விநியோகக் கம்பி அறுந்து விழுந்தது மற்றும் இறந்தவர் அதனுடன் தொடர்பு கொண்டு மரணமடைந்தார் என்ற உண்மை மட்டுமே இழப்பீடு வழங்குவதற்குப் போதுமானதல்ல. மேல்முறையீடு செய்தவர்களின் ஏதேனும் கவனக்குறைவினால் கம்பி அறுந்ததா என்பதையும், எந்தச் சூழ்நிலையில் இறந்தவர் அந்தக் கம்பியுடன் தொடர்பு கொண்டார் என்பதையும் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும். மேல்முறையீடு செய்தவர்கள் ஒவ்வொரு வழக்கிலும் முன்வைத்துள்ள குறிப்பிட்ட தற்காப்பு வாதங்களின் அடிப்படையில், மின் விநியோகக் கம்பிகளைப் பராமரிப்பதில் முறையான கவனமும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன என்பதையும், மீறியும் அவர்களது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளாலோ அல்லது மூன்றாம் தரப்பினரின் அத்துமீறிய தலையீட்டாலோதான் கம்பி அறுந்தது என்பதையோ அல்லது மனுதாரர்கள் கூறியுள்ளபடி மரணம் நிகழவில்லை என்பதையோ நிரூபிக்க அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இந்தக் கேள்விகளை உறுதிமொழிப் பத்திரங்களின் அடிப்படையில் மட்டுமே சரியாகத் தீர்மானிக்க முடியாது. சர்ச்சைக்குரிய உண்மைத் தகவல்கள் சம்பந்தப்பட்டிருக்கும்போது, அரசியலமைப்பின் 226-வது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படும் மனு முறையான தீர்வல்ல என்பது நிலைநாட்டப்பட்ட சட்ட நிலைப்பாடாகும். இந்த வழக்குகளில் உள்ள சர்ச்சைகள் வெறும் காரணத்திற்காகவே எழுப்பப்பட்டுள்ளன என்றும், அவற்றில் எந்த முகாந்திரமும் இல்லை என்றும் உயர்நீதிமன்றம் கூறவில்லை. கூறவும் முடியாது. OJC எண் 5229/1995-இல் செய்யப்பட்டது போல, நீதிப்பேராணை மனுதாரர்களை சிவில் நீதிமன்றத்தை அணுகுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்க வேண்டும்.

12. "மேற்கூறிய தீர்ப்பைத் தொடர்ந்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் எஸ்.பி.எஸ்.ரத்தோர் –எதிர்– ஹரியானா அரசு என்ற வழக்கிலும் இக்கொள்கையை மீண்டும் வலியுறுத்தியது:

"16. 'ஒரிசா கிரிட் கார்ப்பரேஷன் தலைவர் (Gridco) –எதிர்– சுகாமணி தாஸ் [(1999) 7 SCC 298]' என்ற வழக்கில், பின்வரும் கேள்வி பரிசீலனைக்கு வந்தது: கவனக்குறைவினால் ஏற்பட்ட மின் விபத்து மரணத்திற்கு, அரசியலமைப்பின் 226-வது பிரிவின் கீழ் உயர் நீதிமன்றம் இழப்பீடு வழங்க முடியுமா? குறிப்பாக, அந்த மரணம் கவனக்குறைவினால் ஏற்படவில்லை என்றும், அது இயற்கையின் சீற்றம் அல்லது வேறு நபர்களின் செயல்களால் ஏற்பட்டது என்றும் பொறுப்புறுதி திட்டவட்டமாக மறுக்கப்படும்போது இது சாத்தியமா? சர்ச்சைக்குரிய உண்மைத் தகவல்கள் சம்பந்தப்பட்டிருக்கும்போது, அரசியலமைப்பின் 226-வது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படும் மனு முறையான தீர்வல்ல என்பது நிலைநாட்டப்பட்ட சட்ட நிலைப்பாடாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே, மரணம் கவனக்குறைவினால் ஏற்பட்டதா அல்லது இயற்கையின் சீற்றத்தினாலா அல்லது வேறு மூன்றாம் நபராலா என்ற கேள்விகளை உறுதிமொழிப் பத்திரங்களின் அடிப்படையில் மட்டுமே சரியாகத் தீர்மானிக்க முடியாது; மாறாக, தரப்பினரால் சமர்ப்பிக்கப்படும் சாட்சியங்களை ஆய்வு செய்த பிறகு சிவில் நீதிமன்றமே இதனைத் தீர்மானிக்க வேண்டும். 'தமிழ்நாடு மின்சார வாரியம் –எதிர்– சுமதி [(2000) 4 SCC 543]' என்ற வழக்கில், ஒரு சர்ச்சைக்குரிய உண்மைத் தகவல் எழும்போதும் மற்றும் தீங்கினைப் பொறுத்த பொறுப்புறுதி தெளிவாக மறுக்கப்படும்போதும், அரசியலமைப்பின் 226-வது பிரிவின் கீழான தீர்வு சரியானதாக இருக்காது என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இருப்பினும், இந்த பொதுவான விதிக்கு ஒரு விதிவிலக்கை நீதிமன்றம் பின்வருமாறு குறிப்பிட்டது: தீங்கினைப் பொறுத்த பொறுப்புறுதி தொடர்பான ஒவ்வொரு வழக்கிலும் கட்டாயம் சிவில் வழக்குதான் தொடர வேண்டும் என்று

பொருள் கொள்ளக்கூடாது. ஒரு வழக்கில் கவனக்குறைவு என்பது மேலோட்டமாகப் பார்க்கும்போதே தெளிவாகத் தெரியும்போதும், அரசியலமைப்பின் 21-வது பிரிவு (வாழும் உரிமை) மீறப்படும்போதும், 226-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு எந்தத் தடையுமில்லை என்று கூற முடியாது.

13. சமீப காலங்களில், உச்சநீதிமன்றம் இந்தக் கொள்கையைத் தொடர்ந்து உறுதிப் படுத்தி வருகிறது. சுபாஷ் ஜெயின் -எதிர்- ராஜேஸ்வரி சிவம் என்ற வழக்கில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"26. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 226-ன் கீழ் உயர்நீதிமன்றம் தனது அசாதாரண நீதிப்பேராணை அதிகார வரம்பைப் பயன்படுத்தும் போது, கடுமையான சர்ச்சைக்குரிய உண்மை களை ஆராய்ந்து தீர்ப்பளிக்காது. முரண்பட்ட தொழில்நுட்ப அறிக்கைகளை ஒப்பிட்டுப் பார்த்து, அதில் எது சரியானது என்று தீர்மானிப்பது உயர்நீதிமன்றத்தின் வேலை அல்ல.'

14. இந்த முன்மாதிரிகள் ஒரு விஷயத்தைத் தெள்ளத்தெளிவாக உணர்த்துகின்றன: பிரிவு 226-ன் கீழ் உள்ள அசாதாரண அதிகார வரம்பு என்பது உரிமையியல் அல்லது சமரச தீர்வு களுக்கு மாற்றானது அல்ல. சர்ச்சைக்குரிய உண்மைகள், கவனக்குறைவு, சொத்துரிமை அல்லது ஒப்பந்தக் கடப்பாடுகள் குறித்த மோதல்கள் எழும்போது, உயர்நீதிமன்றங்கள் அவற்றைத் தீர்மானிக்காமல், சம்பந்தப்பட்ட தரப்பினரை உரிய அதிகார அமைப்பிற்கு வழிநடத்துகின்றன. இதற்கு இரண்டு முக்கியக் காரணங்கள் உள்ளன:

1. வாய்மொழி மற்றும் ஆவண ஆதாரங் களின் அடிப்படையில் விரிவான உண்மை கண்டறியும் விசாரணைக்கு நீதிப்பேராணை அதிகார வரம்பு உகந்தது அல்ல.

2. நீதித்துறை மறுஆய்வு என்பது சட்டப் பூர்வத் தன்மை, நியாயம் மற்றும் அரசிய லமைப்பு நெறிமுறைகளைப் பாதுகாப்பதற்கே அன்றி, ஒரு உரிமையியல் நீதிமன்றத்தைப் போலத் தனிநபர் உரிமைகளைத் தீர்மானிப்ப தற்கல்ல.

15. எனவே, பிரிவு 226 பரந்த அதிகாரங் களை வழங்கினாலும், நீதிப்பேராணை நீதிமன்றங்களின் வரம்புகளைக் கருத்தில் கொண்டு, இந்த அதிகாரங்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது சட்டப்படி நிலைநாட்டப்பட்ட கருத்தாகும். இந்தச் சுயமாக விதிக்கப்படும் கட்டுப்பாடு, நீதிப்பேராணை அதிகார வரம்பு அதன் உண்மை யான நோக்கமான 'அரசின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிரான உரிமைகளைப் பாதுகாத்தல்' என்பதில் கவனம் செலுத்துவதை உறுதி செய்கிறது; அதே நேரத்தில், ஆதாரங்கள் அதிகம் தேவைப்படும் உரிமையியல் மற்றும் ஒப்பந்தச் சிக்கல்களை அவற்றைச் சிறந்த முறையில் தீர்க்கக்கூடிய அமைப்புகளிடம் விட்டுவிடுகிறது.

**ஆ. உரிமையியல் தன்மை/உரிமைகள்/ சொத்துரிமை தொடர்பான சர்ச்சைகள்:**

16. முங்கீர் -எதிர்- மகாராஜா பிரதாப் சிங் பகதூர் (1956 SCC Online Pat 63) என்ற வழக்கில் பாட்னா உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு பின்வருமாறு தீர்ப்பளித்தது:

"5...அரசியலமைப்பு உறுப்பு 226-இன் கீழ் உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்பு என்பது, வழக்காடிகளின் சிவில் உரிமைகளை அறிவிப்ப தற்காக அல்லாமல், நாட்டின் சட்டம் முழுமை யாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும், பல்வேறு தீர்ப்பாயங்களும் பொது அதிகார அமைப்புகளும் தங்களின் அதிகார வரம்புகளுக்குள் செயல்படுவதை உறுதி செய்வதற்காகவும் உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட ஒரு அசாதாரண அதிகார வரம்பாகும். வேறுவிதமாகக் கூறினால், சரத்து 226-இன் கீழ் உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு என்பது ஒரு மேற்பார்வை அதிகார வரம்பாகும்; இது தீர்ப்பாயங்கள் மற்றும் பொது அதிகார அமைப்புகளின் பணிகளை மேற் பார்வையிடுவதற்கும், அவை தத்தமது அதிகார வரம்புகளுக்குள் செயல்படுவதை உறுதி செய்வதற்கும் நோக்கமாகக் கொண்ட ஒரு அதிகார வரம்பாகும்.

6. அரசியலமைப்பு உறுப்பு 226–இன் கீழ் நடைபெறும் ஒரு நடவடிக்கையில், உயர் நீதிமன்றம் தரப்பினரின் சிவில் உரிமைகளைத் தீர்மானிப்பதில் அக்கறை காட்டுவதில்லை; ஷரத்து 226–இன் கீழ் நடைபெறும் அத்தகைய நடவடிக்கையின் ஒரே நோக்கம், நாட்டின் சட்டம் முழுமையாகப் பின்பற்றப்படுவதையும், பல்வேறு அதிகார அமைப்புகளும் தீர்ப்பாயங்களும் தத்தம் அதிகார வரம்புகளுக்குள் செயல்படுவதையும் உறுதி செய்வதே ஆகும். சரத்து 226 கூறுவதாவது, 'உயர் நீதிமன்றம், எந்தவொரு நபர் அல்லது அதிகார அமைப்புக்கும், பொருத்தமான நேர்வுகளில் எந்தவொரு அரசாங்கத்திற்கும் உட்பட, வழிகாட்டுதல்கள், உத்தரவுகள் அல்லது நீதிப்பேராணைகளை, அதாவது ஆட்கொணர்வு, கட்டளை, தடையாணை, தகுதி வினவு மற்றும் நெறிமுறைச் சீராய்வு ஆகிய இயல்பிலான நீதிப் பேராணைகளை வழங்குவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

''**இ. நீதித்துறை மறுஆய்வு என்பது எடுக்கப் பட்ட முடிவின் சட்டப்பூர்வத் தன்மையை ஆராய்வதே அன்றி, அந்த முடிவையே ஆராய்வது அல்ல**'':

17. அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 226–ன் கீழான நீதித்துறை மறுஆய்வு என்பது ஒரு மேற்பார்வை அதிகாரம் மட்டுமே. ஒரு சர்ச்சையின் குணாதிசயங்களை மீண்டும் மதிப்பீடு செய்வது அதன் நோக்கமல்ல; மாறாக, அந்த முடிவு எடுக்கப்பட்ட விதம் சட்ட விதிகளுக்கும், இயற்கை நீதிப் பண்புகளுக்கும், அரசியலமைப்பு நெறிமுறைகளுக்கும் உட்பட்டு இருக்கிறதா என்பதை உறுதி செய்வதே ஆகும். ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியின் கருத்திற்கு மாற்றாகத் தனது கருத்தைத் திணிக்க நீதிப் பேராணை நீதிமன்றம் ஒன்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் அல்ல.

**ஈ. 'முடிவு' மற்றும் 'முடிவெடுக்கும் நடைமுறை' இடையேயான வேறுபாடு:**

18. 'முடிவு' என்பது தகுதிவாய்ந்த அதிகாரியால் எட்டப்பட்ட இறுதிப் பலனைக் குறிக்கிறது. 'முடிவெடுக்கும் நடைமுறை' என்பது அந்தப் பலனை அடையப் பின்பற்றப்பட்ட முறையைக் குறிக்கிறது – அதாவது நோட்டீஸ் அனுப்பப் பட்டதா, தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப் பட்டதா, தேவையற்ற காரணிகள் தவிர்க்கப் பட்டதா மற்றும் சட்டபூர்வ உரிமைகள் மதிக்கப் பட்டதா என்பவை இதில் அடங்கும். நீதித்துறை மறுஆய்வு என்பது இந்த நடைமுறையின் சட்டபூர்வத் தன்மை, நியாயம் மற்றும் ஒழுங்குமுறையை மட்டுமே சோதிக்கும். இது ஆதாரங்களின் போதாமையை எடைபோடாது அல்லது சிவில் உரிமைகளை மீண்டும் ஆராயாது; அவை விசாரணை நீதிமன்றங்களின் வேலை.

**உ. நீதித்துறை மறுஆய்வின் வரம்பு:**

19. நிர்வாக அல்லது நீதி போல்வு முறை நடவடிக்கைகளின் சட்டப்பூர்வத் தன்மையுடன் மட்டுமே நீதித்துறை மறுஆய்வு தொடர்புடையது. அதிகாரிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குள் செயல்படுகிறார்களா மற்றும் இயற்கை நீதித் தத்துவங்களைப் பின்பற்றுகிறார்களா என்பதை இது உறுதி செய்கிறது. அந்த முடிவு சரியா அல்லது தவறா என்பது நீதித்துறை மறுஆய்வுக்கு அப்பாற்பட்டது. அத்தகைய ஆய்வு மேல்முறையீட்டு மன்றங்களுக்கு உரியது.

**ஊ. நீதித்துறை மறுஆய்வின் எல்லைகள்:**

20. இந்த அதிகாரம் மேல்முறையீட்டு அதிகாரமோ அல்லது மறுஆய்வு அதிகாரமோ அல்ல. நீதிமன்றங்கள் ஆதாரங்களை மறுமதிப்பீடு செய்வதில்லை அல்லது முடிவெடுப்பவரின் தீர்ப்பிற்குப் பதிலாகத் தனது சொந்தத் தீர்ப்பை வழங்குவதில்லை. நீதித்துறை மறுஆய்வு கீழ்க்கண்டவற்றை மட்டுமே ஆராயும்:

1) அந்த அதிகாரிக்கு அந்தப் பிரச்சனையை விசாரிக்க அதிகாரம் இருந்ததா?

2) தொடர்புடைய அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட்டனவா?

3) தேவையற்ற அம்சங்கள் தவிர்க்கப் பட்டனவா?

4) அந்த நடவடிக்கை தன்னிச்சையானதா, உள்நோக்கம் கொண்டதா அல்லது இயற்கை நீதிக்கு எதிரானதா?

**எ. நடைமுறையின் சரித்தன்மை**
**திண் முடிவின் சரித்தன்மை**

21. உச்சநீதிமன்றம் சையத் டி.ஏ. நக்ஷ்பந்தி –எதிர்– ஜம்மு காஷ்மீர் அரசு (2003 SCC Online 655) என்ற வழக்கில் இந்தக் கொள்கையைச் சுருக்கமாக இவ்வாறு விளக்கியது:

'...நீதித்துறை மறுஆய்வு என்பது ஒரு முடிவை அடைவதற்கான நடைமுறை சரியாகப் பின்பற்றப்பட்டதா என்பதை ஆராய்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது; அந்த முடிவையே ஆராய்வதற்கு அல்ல. ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றத்தைப் போல ஆதாரங்களை நுணுக்க மாக அல்லது சுதந்திரமாக ஆய்வு செய்வது நீதித்துறை மறுஆய்வு அதிகாரத்தைப் பயன் படுத்தும் நீதிமன்றங்களுக்கு அனுமதிக்கப் படாது...'

இதிலிருந்து நீதித்துறை மறுஆய்வு என்பது நடைமுறை நேர்மை மற்றும் சட்டப்பூர்வத் தன்மையை நோக்கியதே அன்றி, வழக்கின் தகுதியை (Merits) மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு அல்ல என்பது தெளிவாகிறது.

**IV. விவாதங்கள்:**

23. எதிர்மனுதாரர்கள் (1 முதல் 4 வரை) முன்வைத்த வருவாய் நிலை ஆணை (RSO) 27 இந்த வழக்கிற்குப் பொருந்தாது. RSO 27 என்பது பட்டா படிவங்களைப் பற்றியது. அதன் பிரிவு 1, கிராமக் கணக்கு கையேட்டில் உள்ள பட்டா படிவத்தைப் பற்றிக் கூறுகிறது. பிரிவு 2, 'பட்டா புதுப்பித்தல்' பற்றிக் கூறுகிறது. அதன்படி, விவசாயி விரும்பினால் மட்டுமே புதிய பட்டா வழங்கப்பட வேண்டும்; நிலத்தின் அளவில் மாற்றம் இல்லாதபோது புதிய பட்டா தேவை யில்லை.

24. எனவே, ஒரு சொத்தின் உரிமையாளர் பட்டா கோருவதற்கு மேற்கூறிய RSO பொருந்தாது. ஒரு சொத்தின் உரிமையாளர் தமிழ்நாடு பட்டா பாஸ் புக் சட்டம், 1983–ன் கீழ் தான் பட்டா கோர முடியும். இச்சட்டத்தின் பிரிவு 3(1), 'தகுந்த விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு உரிமையாளருக்கும் வட்டாட்சியர் பட்டா வழங்க வேண்டும்' என்று கூறுகிறது.

25. தமிழ்நாடு பட்டா பாஸ் புக் விதிகள், 1987–ன் விதி 4(4) பின்வருமாறு கூறுகிறது:

'விண்ணப்பம் அல்லது தகவல் பெறப்பட்ட வுடன் பின்பற்ற வேண்டிய நடைமுறை: (4) பட்டா உரிமையாளர் தொடர்பாக ஏதேனும் தகராறு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தாலோ, அல்லது தனிநபர் சட்டம் அல்லது வாரிசுரிமைச் சட்டம் தொடர்பான சிக்கல்கள் வட்டாட்சியர் முன் எழுந்தாலோ மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிமையாளர் குறித்து எழுத்துப்பூர்வமாக உடன்படவில்லை என்றாலோ, வட்டாட்சியர் அந்தத் தரப்பினரை உரிய உரிமையியல் நீதிமன்றத்தை அணுகித் தங்களின் உரிமையை நிலைநாட்டி வருமாறு அறிவுறுத்த வேண்டும்.'

26. மேற்கூறிய சட்டவிதிகளின்படி, உரிமை தொடர்பாக ஏதேனும் சர்ச்சை எழுந்தால், வருவாய்த்துறை அதிகாரிகள் தரப்பினரை உரிய உரிமையியல் நீதிமன்றத்திற்குத் தான் அனுப்ப வேண்டும்.

27. இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர்கள் (அரசு) பல ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளனர். வருவாய் ஆவணங்களின்படி, இந்த நிலம் 'அரசு புறம்போக்கு' மற்றும் 'முதலியார் குளம்' என வகைப்படுத்தப் பட்டுள்ளது. இது ஒரு நீர்நிலை. எனவே, இங்கு ஒரு உரிமைச் சர்ச்சை நிலவுகிறது. அரசாங்க ஆவணங்கள் ஒரு இடத்தை நீர்நிலை என்று காட்டும்போது, வருவாய்த்துறை அதிகாரிகள் அதற்குப் பட்டா வழங்க முடியாது.

28. நில வகைப்பாடு தவறாகச் செய்யப் பட்டுள்ளதாக எதிர்மனுதாரர்கள் கருதினால், அதற்கான மறுவகைப்பாட்டு விசாரணையை நில நிர்வாக ஆணையர் அல்லது அரசாங்கமே மேற்கொள்ள முடியும். சாதாரண வருவாய்த் துறை அதிகாரிகள் நில வகைப்பாட்டை மாற்றவோ அல்லது வருவாய் ஆவணங்களில் உள்ள பதிவுகளைத் திருத்தவோ முடியாது.

29. எனவே, நிலத்தை மறுவகைப்படுத்த தனி நீதிபதி வழங்கிய உத்தரவு, அரசிய லமைப்புச் சட்டம் பிரிவு 226–ன் கீழ் வழங்கப் பட்டுள்ள நீதித்துறை மறுஆய்வு அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது. பட்டா வழங்க

உத்தரவிடுவதையே பொதுவாக இத்தகைய வழக்குகளில் தவிர்க்க வேண்டும்.

30. ஒருபுறம் இது 'குளம்' என்று அரசு கூறுகிறது; மறுபுறம் வகைப்பாடு தவறு என்று எதிர்மனுதாரர்கள் கூறுகிறார்கள். வருவாய் ஆவணங்கள் திருத்தப்பட்டுள்ளனவா அல்லது வேறு ஏதேனும் முறைகேடுகள் நடந்துள்ளனவா என்பதை வருவாய்த்துறையின் உயர் அதிகாரிகளும், நில நிர்வாக ஆணையருமே ஆராய வேண்டும்.

31. மாநிலம் முழுவதும் நிலத்தின் மதிப்பு விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்துள்ளது. பேராசை பிடித்தவர்கள் பொதுச் சொத்துக்களை ஆக்கிரமிக்க முயல்கிறார்கள். எனவே, பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதிலும், அவற்றை பொது நலனுக்காகப் பயன்படுத்துவதிலும் வருவாய்த்துறை அதிகாரிகள் மிகுந்த எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்க வேண்டும். பட்டா கோரும் விண்ணப்பங்களைச் சாதாரணமாகக் கையாளாமல், உரிய முறையில் விசாரணை நடத்த வேண்டும்.

32. இந்த வழக்கில், எதிர்மனுதாரர்கள் உரிமையியல் உரிமை கோருகிறார்கள். எனவே, இது ஒரு சிவில் தகராறு. இதில் விசாரணை நடத்த வருவாய்த்துறை அதிகாரிகளுக்கோ அல்லது நீதிப்பேராணை நீதிமன்றத்திற்கோ அதிகாரம் இல்லை. இந்த உரிமைச் சர்ச்சை தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தில் தான் தீர்க்கப்பட வேண்டும். உரிமை குறித்து சர்ச்சை எழும்போது, உரிமை கோருபவர் நீதிமன்றத்தை அணுகித் தனது ஆதாரங்கள் மூலம் அதை நிலைநாட்ட வேண்டும்.

33. மேற்கூறிய உண்மைகள் மற்றும் சட்டச் சூழ்நிலைகளின் அடிப்படையில், தனி நீதிபதியின் உத்தரவு சட்ட நிலைப்பாட்டிற்கு முரணாக உள்ளது. எனவே, 13.11.2024 தேதியிட்ட நீ.பே.எண் 23909/2024-ன் தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது. இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. இதனுடன் தொடர்புடைய இதர மனுக்கள் முடிக்கப்படுகின்றன. செலவுத் தொகை ஏதுமில்லை.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## கோயிலை தனிப்பட்ட சொத்தாக அரசு கருத முடியாது: உயர்நீதிமன்றம் அதிரடி

கள்ளழகர் கோயிலில் ரூ.40 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்வது தொடர்பான அரசாணையை ரத்து செய்து உத்தரவிட்டுள்ள உயர்நீதிமன்ற நீதிபதிகள், கோயிலை அரசு தனிப்பட்ட சொத்தாக கருதி முடிவெடுக்க முடியாது என்று தெரிவித்து உள்ளனர். மதுரை அழகர்கோயிலில் வணிக நோக்கில் கட்டிடங்கள் கட்டுவது தொடர்பான அரசாணையை ரத்து செய்யக் கோரி மேலூர் வெள்ளரிப்பட்டி பிரபு, நாகை திருக்கணாபுரம் வெங்கடேஷ் சவுரிராஜன் ஆகியோர் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை நீதிபதிகள் அனிதா சுமந்த், குமரப்பன் அமர்வு விசாரித்து தீர்ப்பை தள்ளி வைத்தது.

இந்த வழக்கில் நீதிபதிகள் நேற்று பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: கள்ளழகர் கோயிலில் அறங்காவலர் குழு இல்லாமல் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாறு கோயிலை அரசு தனிப்பட்ட சொத்தாக கருதி முடிவெடுக்க முடியாது. எனவே, அழகர்கோயில் நிதி ரூ.40 கோடியில் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கி அரசு பிறப்பித்த அரசாணை ரத்து செய்யப்படுகிறது. கோயில் நிதி ரூ.107 கோடியில் இருந்து ரூ.62 கோடியாக குறைந்து உள்ளது. கோயில் தணிக்கை விவரங்களை 2 வாரங்களில் தாக்கல் செய்ய வேண்டும்.

அழகர் கோயிலுக்கு புதிய அறங்காவலர் குழுவை அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். செயல் அலுவலர் நியமிக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகியிருந்தால், அவரை நீக்கி விட்டு, நிர்வாகம் தெரிந்த மேலாளரை நியமிக்க வேண்டும். கோயிலின் தற்போதைய நிலப் பரப்பிலும், 1925-ம் ஆண்டு தலபுராணத்தில் உள்ள வரைபடத்திலும் பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. வளர்ச்சி என்ற பெயரில் செய்யப்படும் அனைத்து நடவடிக்கைகளும், கோயிலின் நெறிமுறைகளுடன் ஒத்துப் போக வேண்டும். கள்ளழகர் கோயிலில் மறு சீரமைப்பு பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும். பழைய நினைவுச் சின்னங்களை மறைக்கும் வகையில் கட்டுமானங்கள் மேற்கொள்வதை நிறுத்த வேண்டும். அழகர் கோயிலில் பிராணிகளை பலியிடும் வழக்கத்தில் நீதிமன்றம் தலையிட விரும்பவில்லை. கோயிலின் அக்னி புஷ்கரணிக்கு அருகில் பணியாளர் குடியிருப்பு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக் கூடாது. அந்த திட்டங்களுக்கு செலவிடப்பட்ட தொகையை, அரசு கோயில் நிர்வாகத்துக்கு திரும்ப வழங்க வேண்டும். புனித தீர்த்தத்துக்கு அருகில் கட்டுமானங்களை மேற்கொள்ள அதிகாரிகள் முடிவெடுத்தது வேதனையானது. கோயில்களில் நடைபெறும் வளர்ச்சி நடவடிக்கைகளை விதிமுறைகளைப் பின்பற்றி, பழமை மாறாலும், தெய்வீக அழகைப் பாதுகாக்கும் வகையிலும் மேற்கொள்ள வேண்டும். இந்த உத்தரவு நிறைவேற்றப்பட்டது தொடர்பாக 3 மாதங்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

– இந்து தமிழ் திசை 28.1.2026

# பொது அதிகார முகமை வழங்கலின் பின்தொடர்ச்சியாக நிறைவேற்றப்படும் பத்திரங்கள் செல்லுவதாகும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை : மாண்புமிகு நீதிபதி திரு.என்.சதீஷ்குமார்**
**மேவ எண்கள்38-40/2022 மற்றும் உபம எண்கள் 1751-1758/2022**
**7.2.2025**
**2025 (3) சிடிசி 476**

**ஜெயமணி ...மேல்முறையீட்டாளர்**

**-எதிர்-**

**உமாமகேஷ்வரி, பிரபாகரன் ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்**

**வழக்குரைஞர் திரு.எஸ்.பார்த்தசாரதி**
மேல்முறையீட்டாளர் சார்பில்

**வழக்குரைஞர் திரு. வி.அனந்தமூர்த்தி**
எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில்

கோருகை: கோபிசெட்டிபாளையத்திலிலுள்ள 3வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியின் கோப்பிலான முவ எண்கள் 72/2019 மற்றும் 42/2017இல் உண்டான 6.7.2021 தேதிய தீர்ப்புரையும் தீர்ப்பாணையையும் நீக்கறவாக்க மேல்முறையீடுகள் உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புசட்ட வகுமுறை 4 விதி 1 உடன் வாசிப்பாகும் பிரிவு 96 கீழ் தாக்கலாகின.

## பொது ஆணை

கோபிசெட்டிபாளையத்திலிலுள்ள 3வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியின் கோப்பிலான முவ எண் 72/2019இல் உண்டான 6.7.2021 தேதிய விசாரணை நீதிமன்றத்து உத்தரவுக்கு சவாலிட்டுக் கொண்டு மேவ எண் 39/2022 தாக்கலாகியுள்ளது

கோபிசெட்டிபாளையத்திலிலுள்ள 3வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியின் கோப்பிலான முவ எண்கள் 42/2017 இல் உண்டான 6.7.2021 தேதிய விசாரணை நீதிமன்றத்து உத்தரவுக்கு சவாலிட்டுக் கொண்டு மேவ எண் 39/2022 தாக்கலாகியுள்ளது

2.9.7.2012 தேதிய பொது அதிகாரத்தையும் 27.4.2017 தேதிய கிரய பத்திரத்தையும் ரத்தாக்கக் கோரிக் கொண்டும் நிரந்தர உறுத்துகட்டளைக்காகவும் வழக்கு முவ எண் 42/2017 மேமுஆல் தாக்கலாகியுள்ளது.

3. வழக்கு முவ எண் 72/2019 நிரந்தர உறுத்துக்கட்டளைக்காக முவ எண் 42/2017 இலிலுள்ள இரண்டாவது எதிர்வாதியால் தாக்கலாகியுள்ளது.

4.முவ எண் 42/2017 வழக்கின் சுருக்க பின்னணி வருமாறு:

4. ஏ.வாதியினது கூற்றுப்படி, தாவா சொத்து காலி மனையாக உள்ளது. காலி மனையிடத்தை வாதி வாங்கியிருந்து அதன் உரிமையாளராக அவள் உள்ளார். அவளது கணவரது வியபாரி செலவினங்களை எதிர்கொள்ளலுக்காக வாதியும் அவளது கணவரும் ரூ.3 லட்ச கடனுக்காக கோவிந்தராஜ் என்பவரை அணுகினார்கள். நிதிசார் தொழில் செய்துகொண்டிருக்கும் முதலாவது எதிர்வாதியை கோவிந்தராஜ் அறிமுகப்படுத்தினார். கடன் வழங்கிட முதலாவது எதிர்வாதி சம்மதித்திருக்கிறார். முதலாவது எதிர்வாதிக்கு 8.7.2012 தேதிய பொது அதிகார ஆவணத்தை வாதி நிறைவேற்றினாள். வெற்று கடனொப்பு சீட்டுகள் முதலாவது எதிர்வாதியால் பெறப்பட்டன. 2017இன் அக்டோபர் மாதத்தில் தான் அமைதியான உடைமைக்கு தொந்தரவிட எதிர்வாதிகள் முயன்றபோது பொது அதிகார அடிப்படையிலும் பொது அதிகார வலிமை பேரிலும் ரூ.9 லட்ச கிரய மறுபயனுக்காக கிரய பத்திரத்தை இரண்டாவது எதிர்வாதிக்கு முதலாவது எதிர்வாதி நிறைவேற்றியிருந்து அது 27.4.2017 அன்று பதிவானது என்பது

வாதிக்கு தெரிய வந்தது. வாதியினது கூற்றுப்படி பொது அதிகாரத்தின் விதிமுறைகள்படி சொத்தை விற்பதற்கு முதலாவது எதிர்வாதி அதிகாரம் கொண்டிருக்கவில்லை. சொத்தின் உடைமை வாதி வசம் தொடர்ந்திருந்து கொண்டிருக்கிறது. கிரயப் பத்திரத்தின் இணைக்கப்பட்ட உயிர் சான்று மோசடியான ஏற்பாடாகவும் ஜோடித்த லாகவும் உள்ளது. எனவே வழக்கு உருவாகிறது.

4. பி.வாதிக்கும் எதிர்வாதிகளுக்கும் இடையில் கடன் பரிவர்த்தனை ஏதும் இருந்ததில்லை என்பதும் மெய்மையில் 9.7.2017 அன்று வாதி முதலாவது எதிர்வாதியை அணுகியிருந்து சொத்தை விற்பதில் அவரது உதவியை கோரிக் கொண்டு முதலாவது எதிர்வாதி பொது அதிகார முகவராக நியமிக்கப்பட்டார் என்பது எதிர்வாதி களது வழக்காகும். பொது அதிகாரத்தின் பின் தொடர்கையாக மட்டுமே கிரய ஆவணம் இரண்டாவது எதிர்வாதிக்கு நிறைவேற்றப்பட்டது. அவள் நல்லெண்ண வாங்குனர் ஆவாள். உடைமை அவள் வசம் உள்ளதாகும்.

4.சி.மேலுள்ள வாதுரைகள் அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் கீழ்வரும் எழு வினாக்களை வனைந்தது

1.சொத்தின் உடைமை வாதியின் வசம் உள்ளதா?

2.9.7.2012 தேதிய பொது அதிகார முகமை அறவே இல்லாநிலையதாகவும் செயல்படுத்தப் படவியலாததாகவும் உள்ளது என்ற பரிகாரத்துக்கு வாதி பாத்தியதையுண்டா?

3. 27.4.2017 தேதிய கிரய ஆவண ரத்துக்கு வாதி பாத்தியதையானவர் ஆவாரா?

4. தாவா சொத்தை பாராதீனம் செய்யா திருக்க எதிர்வாதிகளுக்கு எதிரான பரிகாரத்துக்கு வாதிக்கு பாத்தியதையுண்டா?

5. தாவா சொத்து மீதான வாதியினது உடைமைக்கு தொல்லைதரலில் எதிர்வாதிகளை தடுத்துநிறுத்தும் பரிகாரததை எதிர்வாதிகளுக்கு எதிராக பெறலுக்கு வாதிக்கு பாத்தியதையுண்டா

6. வேறன்ன பரிகாரம்?

5. வழக்கு முவ எண் 72/2019இன் பின்புலம் வருமாறு:

5.ஏ.தாவா சொத்தின் நல்லெண்ண வாங்குனராகவும் வழக்கு முவ எண் 42/2017 இல் இரண்டாவது எதிர்வாதியாகவும் உள்ளவர் முவ எண் 42/2017 இல் வாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரிக்கொண்டு வழக்கு தாக்கலிட்டுள்ளார்.

5. பி.கீழ்வரும் எழுவினாக்களை விசாரணை நீதிமன்றம் வனைந்தது.

ஏ.கோரப்பட்டவாறு நிரந்தர உறுத்துக் கட்டளைக்கு வாதி பாத்தியதை கொண்டவர் ஆவாரா?

பி.வேறு பரிகாரம் என்ன?

முவ எண் 42/2017

6. வாதி தரப்பில் வாசாகள் 1-2 விசாரிக்கப் பட்டு சா.ஏ1-ஏ6 குறியீடாகின. எதிர்வாதிகள் தரப்பில் எவாசாகள் 1-2 விசாரிக்கப்பட்டு ஆவணம் ஏதும் குறியிடப்படவில்லை.

முவ எண் 72/2019

7. வாதி தரப்பில் வாசாகள் 1-2 விசாரிக்கப் பட்டு சா.ஏ1-ஏ7 குறியீடாகின. எதிர்வாதிகள் தரப்பில் எவரும் விசாரிக்கப்படவில்லை. சா.பி1 குறியிடப்பட்டது.

8. இரு வழக்குகளும் கூட்டாக விசாரிக்கப் பட்டன. வழக்கு முவ எண் 42/2017ஐ விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்து வழக்கு முவ எண் 72/2019இல் தீர்ப்பாணையிட்டது. ஆகவே முவ எண் 42/2017இல் தோல்வியுற்ற வாதியும் முவ எண் 72/2019 எதிர்வாதியும் இப்போதைய மேல்முறையீடுகளை முன்னிட்டு உள்ளார்கள்.

9. கைமாற்று பெறலுக்காக துணைப் பிணையமாக மட்டுமே பொது அதிகாரத்தை வாதி வழங்கியுள்ளார் எனவும் சொத்தை விற்பதற்கான அதிகாரத்தை பொது அதிகார ஆவணத்தை நிறைவேற்றுதல் மட்டுமே வழங்காது எனவும் மேமு சார்பு வழக்குரைஞர் பணிந்திட்டாள். அவளது கூற்றுப்படி, கிரய பத்திரத்துடன் இணைக்கப்பட்ட உயிர் சான்று ஜோடிக்கப்பட்டிருந்தும் அவரால் ஒப்பமிடப்

படாதும் உள்ளது. வாதினது கூற்றுப்படி பொது அதிகாரம் ஆவணம் நிறைவேற்றல் சமயத்தில் ரூ.3 லட்சத்தை மட்டுமே அவள் வரப் பெற்றிருள்ளார். ஆகவே பொது அதிகார ஆவணத்தின் பின் தொடர்ச்சியாக நிறைவேற்றப் பட்ட கிரய ஆவணம் சட்டத்தின் பார்வையில் செல்லாததாகும். எனவே இந்த நீதிமன்றத்தின் தலையீடை அவள் வேண்டுகிறாள்.

10. பண பரிவத்தனை இருந்ததை காட்டும் சாட்சியம் முற்றிலும் இருந்ததில்லை எனவும் உண்மையில் பொது அதிகார ஆணைத்தை வாதியே நிறைவேற்றியிருந்து அதன் பின் தொடர்கையாக 2012வது வருடத்திலேயே இரண்டாவது எதிர்வாதிக்கு கிரய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது எனவும் எமேமு சார்பு வழக்குரைஞர் பணிந்துரைத்தார். அதன் பின்பு கிரய ஆவணம் 2017வது வருடத்தில் நிறைவேற்றப் பட்டது. உயிர் சான்று ஜோடிக்கப் பட்டுள்ளது என்ற வாதும் நிலைநாட்டப்பட்டிருக்க வில்லை. மேலும், சொத்து காலியான சொத்து ஆகும். வழக்கு முவ எண் 72/2019 இல்ன் இரண்டாவது எதிர்வ்வாதியால் செய்யப்பட்ட வாங்கல் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. ஆகையால் நிரந்தர உறுத்துக்கட்டளை எதனையும் மேமு கோரவியலாது. எனவே விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் இந்த நீதிமன்றத்தின் தலையீடை அவசியமாக்க வில்லை என அவர் பணிந்திட்டார்

11. மேலுள்ள வாதுரைகள் அடிப்படையில், கீழ்வரும் எழுவினாக்கள் பரிசீலனையில் எழுகின்றன.

(i) இரண்டாவது எதிர்வாதிக்கு நிறைவேற்றப் பட்ட கிரய ஆவணம் உயிர் சான்று ஜோடிப்பின் பயன் விளைவாக உள்ளதா?

ii) அத்தகைய ஆவணத்தை இல்லா நிலையாதாக்க மேமு/முவ எண்42/2017 இன் வாதுக்கு பாத்தியதையுண்டா?

அம்சங்கள் (i) (iii)

12.அவளால் நிறைவேற்றப்பட்ட பொது அதிகாரம் சொத்து விற்கலுக்கான அதிகாரத்தை அளிக்கவில்லை என்பது வாத்மாக இருந்தாலும் அந்த வாதத்துக்கு ஊன்றுகோலில்லை. முவ எண் 72/2019 இல் சா.ஏ1/9.7.2012 தேதிய பொது அதிகாரத்தை காணுகையில், கிரய ஒப்பந்தம் கிரய பத்திரம் நிறைவேற்றல், பிறவற்றுக்காக பொது அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது என்பதை அது சுட்டிக்காட்டும். ஆகையால் சொத்து விற்பனை தொடர்புற்றதாக பொது அதிகாரம் அமையவில்லை என்ற வாதம் எதிர்கொள்ளப்பட முடியாது.

13. ரூ.3 லட்சம் வரப்பெறப்படுதல் மற்றும் பொது அதிகார நிறைவேற்றல் பற்றி தகராறு மேமு ஆல் எழுப்பப்படவில்லை. அது ஒரு கடன் ஒப்பந்தமாக உள்ளது என்பது வாதமானாலும் சொத்து விற்பனைக்காக மட்டுமே ஒப்பந்தம் பதிவாக்யுள்ளது என்பதை வாதிக்கும் அவளது கணருக்கும் இடையிலான சாஏ2/ அசல் கிரய ஒப்பந்தமும் வாதிக்கு ஜி.ஜி.பிரபாகரனால் நிறைவேற்றப்பட்டு முவ எண் 72/2019இல் தாக்கலான ஏ3இஉம்/அசல் கிரய பத்திரமும் தெளிவாக்குகின்றன. ஆகையால் மேமு தரப்பில் வைக்கப்பட்ட பதிவு ஆவணம் இருக்கையில் மேமுஇன் வாதம் வாய்மொழி சாட்சிய அடிப்படையில் மட்டுமே ஏற்கப்பட முடியாது. மேமு அவளது சாட்சியத்தில் சம்பந்தப்பட்ட பரிவர்த்தனயை நிரூபிக்க சாட்சியம் ஏதுமில்லை என் தெளிவாக மேமு ஒப்புக் கொண்டுள்ளார். மேமுஇன் மருமகனாக்கவும் முவ எண் 42/2017இல் வாசா2/ திரு.பாலமுருகன், அவரது குறுக்கு விசாரணையில், அதன் உள்ளடக்கத்தை முழுமையாக அறிந்த பின்பே பொது அதிகாரம் மேமுஆல் நிறைவேற்றப்பட்டது என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். ஆகையால் சொத்து விற்பனைக்கு அதிகாரத்தை அவள் ஒருபோதும் வழங்கவில்லை என்ற வாதத்துக்கு ஊன்று கோல் கிடையாது.

14. கிரய ஆவணத்துடன் இணைப்பான உயிர் சான்று ஜோடிப்பாகியுள்ளது என்பது வாதமாக உள்ளது. இத்தகைய நிலைப்பாடு எடுத்திருக்கும் நிலையில் ஜோடித்தல் என அழைக்கப்படுவதை நிலைநாட்டிடலுக்கு எவ்

வகையானமுயற்சிகளும் மேமுஆல் மேற்கொள்ளப் படவில்லை. ஜோடித்தல் பற்றிய வாதுரையை வாதி எழுப்பும்போது ஜோடித்தல் என அழைக்கப் படுவதை நிலைநாட்டலின் பொறுப்பு வாதியை சேர்கிறது. மேலும் உயிர் சான்று ஜோடிக்கப் பட்டுள்ளது என்ற வாதம் பொய்ப்பிக்கப்படுகிறது என்பதை எதிர்வாதிக்கு/எவாசா1இக்கு வாதியால் வைக்கப்பட்ட குறிப்புரை சுட்டிக் காட்டுகிறது. வாதி மருத்துவமனையில் இருந்தபோது அத்தகைய சான்றிதழ் மருத்துவரின் உதவியுடன் பெறப் பட்டுள்ளது என்பது எவாசா1ஆல் குறிப்பு ரைக்கப்படுகிறது. ஆகையால் உயிர் சான்று பொறுத்த வாதியின் கூற்றுக்கு ஊன்றுகோல் கிடையாது.

15.மேலும், கடன் பரிமாற்றத்துக்காக ரூ.3 லட்சம் அவளால் பெறப்பட்டது என்பது அவளது வாதமாக இருக்கையில் அவளால் எது வகை யிலான மறுபயனும் வரபெறப்படவில்லை என்பது வாதியின் வழக்கு அல்ல. மேலும், கிரயத்துக்கு பின்பு பற்று வரவு கணக்கு எதனை யும் பொது அதிகார முகவை வழங்கியிருக்க வில்லை என்பதும் வாதியின் வழக்கு அல்ல. வேறெவருமின்றி இரண்டாவது எதிர்வாதி முதலாவது எதிர்வாதியின் மனைவி ஆவார் என்பதில் சந்தேகம் கிடையாது. வழக்கு விசாரணையின் போக்கில் இரண்டாவது எதிர் வாதியிடமிருந்து செலுத்துகைகள் செய்யப் பட்டுள்ளன என காட்ட வங்கியிடமிருந்து பதிவண்களை வரவழைக்க வவி எண்கள் 1-2/209 விண்ணப்பங்களையும் வாதி தாக்க லிட்டார். எனினும் வங்கி மேலாளரை விசாரித்ததில் வாதியால் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆகையால் பொது அதிகார முகமையும் கேள்விக்கு உட்படாதிருந்தும் பண வருகை மறுக்கப்படாதவரையில், வாதிக்கு மொத்த பரிவர்த்தனை பற்றி தெரியவில்லை என் வாதிடல் ஹைலில் இம்பார்பிலாக உள்ளது. அவரது மருமகன் முன்னிலையில் பொது அதிகாரத்தை நிறைவேற்றியிருந்தும் உள்ளடக்கம் பற்றி அவள் அறிந்தும் அதிகார முகவர் மூலமாக அவள் சொத்தை வாங்கிய நிலையில் பொது அதிகாரம் முகமை பற்றி அவளுக்கு தெரியாது என கூறப்பட முடியாது. பொது அதிகார முகமை நிறைவேற்றலிலிருந்து பணத்தை வரப்பெற்றுள்ள நிலையில் விற்பனைக்கான அதிகாரத்தை பொது அதிகாரம் முகமை தரவில்லை என வாதி வாதிடல் மிகவும் தாமதமானதாகும்.

16. மேலும். 1872இன் இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 92ன்படி அல்லது 2023இன் பாரதீய சாக்சிய அதினயம் சட்ட 95இன்பிரிவு படி ஒப்பந்த விதிமுறைகளுக்கு எதிராக வாய்மொழி சாட்சியம் அனுமதிக்கத் தக்கதல்ல. 1872இன் இந்திய சாட்சிய பிரிவு 92இன் அல்லது 2023 இன் பாரதீய சாக்சிய அதினய வகையங்களை ஈர்த்திடலுக்கு ஒட்டு மொத்த ஆவணமும் மோசடியாக அல்லது அச்சுறுத்தல் அல்லது உரிய நிறைவேற்றம் இல்லாது திறனின்மை அல்லது பொருண்மை அல்லது சட்ட பிழை யால் பெறப்படுகிறது என்பதும் வாதியினது வழக்கு அல்ல. ஆகையால் ஆவணத்தை செல்லாத்தாக்கல் பற்றிய வாதியின் வாதம் பொறுத்தளவில் வாதி அவரது வழக்கை புலப்படுத்தியிருக்கவில்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

17. முவ எண் 72/2019இன் தீர்ப்புரை யையும் தீர்ப்பாணையும் பொறுத்த மட்டில் பிரதான வழக்கில் எதிர்வாதியா வாதி சாஏ3. சாஏ4 மற்றும் சாஏ6 வருவாய் பதிவண்களை தாக்கலிட்டுள்ளார். அது விடுத்து பாத்தியதை ஆவணம் தாக்கலாகிறது. ஏற்றவாறு, வழக்கு சொத்து ஒரு காலி மனையாக உள்ளது. காலி மனை பொறுத்தளவில், பாத்தியம் நிலையுறுத்தப் படும்போது 2008 4 SCC 594 இல் அறிவிப்பாகி உச்ச நீதிமன்றத்தால் அனதுலா சுதாகர் –எதிர்– பி.புச்சி ரெட்டி (இறந்தவர்). ச.சா.கள் மற்றும் பிறர் வழக்கில் தீர்ப்பானவாறு உறுத்துக்கட்டளைக்கு அவருக்கு நிச்சயமாக உரிமையுண்டு. தொடர்புறு பகுதி கீழ் வருமாறு வாசிப்பாகிறது.:

“16. ஆனால், ஸ்தூல உடைமையில் இல்லாத அல்லது பயன்படுத்தபடாத அல்லது துய்க்கப்படாத காலி மனையாக சொத்து இருக்குமானால் என்னவாகும்? இத்தகைய

நேர்வுகளில் பாத்தியதைக்கு பின்பாக உடைமை வருகிறது என்பது கோட்பாடாகும். ஒரு காலி மனையில் உடைமை கொண்டிருப்பதாக இரு நபர்கள் கூறினால் அதற்குள்ள பாத்தியத்தை நிலைநாட்டவியலும் ஒருவர் வசம் உடைமை உள்ளதாக கருதப்படும். உரிமைமூலத்தை நிலைநாட்ட இயலாத ஒருவருக்கு எதிராக காலி மனை தொடர்பான வழக்கு வெறும் உறுத்துக் கட்டளைக்கானதாக அமைந்து, உடைமை பற்றியது எழுவினாவாக இருக்குமானால் சட்டப்படியுள்ள உடைமையை தீர்மானித்தலுக்கு முன்னோடியாக பாத்தியத்தை ஆராய்ந்து தீர்மானிப்பது தேவையாகும். இத்தகைய சூழலில் உரிமைமூலம் தெளிவாகவும் எளிதாவாகவும் உள்ளபோது உரிமைமூலம் பற்றிய எழு வினாவை தீர்மானித்தலை நீதிமன்றம் முயல லாம் வழக்கு உறுத்துக்கட்டளைக்காக மட்டும் இருக்கும் போதெல்லாம் டெஜுர் உடை பய்ரி தீர்மானுக்குமாகமாக பொருண்மையும் சட்ட நெறியும் உள்ளாகும் சிக்கலான அல்லது பல்லுறுப்பு எழுவினாவாக உரிமைமூலம் பற்றிய எழுவினா அமையும்போது அல்லது உரிமைமூலம கேள்வியாகவில்லை என்ற அடிப்படையில் தரப்பினர்கள் மேல்சென்றிருக்க வில்லை என நீதிமன்றம் உரணிடும் போது உரிமைமூலம் பற்றிய எழுவினாவை நீதிமன்றம் உறுத்துக்கட்டளைக்கான வழக்கில் தீர்மானிக்கக் கூடாது. விளம்புகைக்கும் விளைவாகும் பரிகாரங்களுக்கும் ஆன முழுமையான வழக்கு தீர்வழிக்கு வாதியை அனுப்புதல் சரியான பாதையாகும்.''

18.மேலுள்ளதன் பரிசீலிப்பில், விசாரண நீதிமன்றத்தால் இயற்றலான ஆணையில் பலவீனம் எதனையும் நான் காணவில்லை. அதற்கேற்ப, இரு ஆணைகளும் இதன்மூலம் உறுதியாக்கப்பட்டு மேல்முறையீடுகள் தள்ளுபடி யாகின்றன.செலவு தொகையில்லை.விளைவாக தொடர்புறு பல்வகை மனு தீர்வாகிறது.

**மொழியாக்கம் : பா.ஞானசேகரன்.**

## கடவுளுக்குத்தான் எப்போதும் முதல் மரியாதை கோயிலில் சிறப்பு மரியாதை அளிக்க மடாதிபதிகள் உரிமை கோர முடியாது

### உயர்நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவு

கோயிலில் கடவுளுக்குத்தான் எப்போதும் முதல் மரியாதை அங்கு சிறப்பு மரியாதை அளிப்பதை மடாதிபதிகள் உரிமையாக கோர முடியாது என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் ஸ்ரீதேவராஜ சுவாமி கோயிலில் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரம மடாதிபதிக்கு கடந்த 1992 முதல் வழங்கப்பட்டு வந்த பஞ்ச முத்திரை மரியாதை திடீரென நிறுத்தப்பட்டு விட்டதாக கூறி ஆசிரமம் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், சி.குமரப்பன் அமர்வில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நடைபெற்ற வாதம்.

மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் எம்.எஸ். கிருஷ்ணன், காஞ்சிபுரம் தேவராஜ சுவாமி கோயிலில் மத சம்பிரதாயப்படி, ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரம மடாதிபதிகளுக்கு இதற்கு முன்பு பலமுறை வழங்கப்பட்டு வந்த சிறப்பு மரியாதையை தடையின்றி தொடர்ந்து வழங்க வேண்டும் என்றுதான் கோருகிறோம்.

அறநிலையத் துறை தரப்பில் ஆஜரான அரசு தலைமை கழக வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், அரசு சிறப்பு வழக்கறிஞர் என்ஆர்ஆர் அருண் நடராஜன், காஞ்சிபுரம் தேவராஜ சுவாமி கோயிலுக்கு மங்களா சாசனத்துக்காக வருகை தரும் காஞ்சி சங்கர மடம், ஸ்ரீரங்கம் ஸ்ரீஅஹோபில மடம், நாங்குநேரி, ஸ்ரீவானமா மலை மடம், மைசூரு ஸ்ரீபரகால ஜீயர் மடம், உடுப்பி ஸ்ரீவியாச ராயர் மடம் ஆகிய 5 மடங்களின் மடாதிபதிகளுக்கு மட்டுமே சிறப்பு மரியாதை வழங்கப்படுவது வழக்கத்தில் உள்ளது. வேறு யாருக்கும் சிறப்பு மரியாதைகள் அளிக்கப் படுவது இல்லை. இவ்வாறு வாதம் நடந்தது. இதையடுத்து நீதிபதிகள் கூறியதாவது '' கோயிலில் கடவுளுக்குத் தான் எப்போதும் முதல் மரியாதை. காஞ்சிபுரம் தேவராஜ சுவாமி கோயிலில் 6 மடாதிபதி களுக்கு மட்டுமே சிறப்பு மரியாதை அளிக்கப் படுவதாக அறநிலையத் துறை தெரிவித்துள்ளது. இது போன்ற சிறப்பு மரியாதைகளை மடாதிபதிகள் ஒரு போதும் உரிமையாக கோர முடியாது. யார், யாருக்கு சிறப்பு மரியாதை அளிப்பது என்று அறநிலையத் துறை சட்டப்படி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தான் முடிவெடுக்க வேண்டும். எனவே, அறநிலையத் துறை அதிகாரிகளை அணுகி மனுதாரர் நிவாரணம் கோரலாம்'' இவ்வாறு கூறி, வழக்கை நீதிபதிகள் முடித்து வைத்தனர்.

**நன்றி : இந்து தமிழ் திசை 30.12.2025**

# முகவர் மற்றும் விற்பனைப் பத்திரத்தின் நம்பகத்தன்மை மற்றும் செல்லுபடி தன்மை குறித்த கண்டறியப்பட்ட முடிவுகள் காரணமாக 2ம் மேல் முறையீடு தள்ளுபடியாகிறது

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.முனைவர் ஏ.டி.மரிய கிளெட்
இ.மே.மு. எண் 32/2014
தீர்ப்பு ஒத்தி வைப்பு 08/09/2025
தீர்ப்பு பகர்ந்த தேதி 24/10/2025
(2025(6)CTC 817)

பி.தனசு, த/பெ பெருமாள் கவுண்டர்,
வானூர் கிராமம் ...மேல்முறையீட்டாளர்

–எதிர்–

1. டி.அய்யனாரப்பன் (இறப்பு) வானூர் கிராமம்
2. வேதவல்லி, க/பெ தில்லைக்கண்ணு
3. ஏ.லீலா, க/பெ அய்யனாரப்பன்
4. இளவர் ஏ.கமலேஷ், த/பெ அய்யனாரப்பன்
5. இளவர் ஏ.தருண், த/பெ அய்யனாரப்பன் .. எதிர்மனுதாரர்கள்

## தீர்ப்பு

1. இருதரப்பும் கேட்டறியப்பட்டது.

2. திண்டிவனம் முதன்மை சார்பு நீதிமன்றத்தால், 26.08.2011 தேதியிட்ட A.S. No.48/2009 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணையை எதிர்த்து இந்த இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இத்தீர்ப்பானது, வானூர் மாவட்ட முனிசீப் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் 22.07.2009 அன்று அசல் மனு எண். 30/2002–ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணையை உறுதி செய்தது.

3. மேல்முறையீட்டாளர் (வாதி), கீழமை நீதிமன்றங்கள் இரண்டிலும் தோல்வியுற்றவர் ஆவார். விழுப்புரம் மாவட்டம், வானூர் கிராமம், வானூர் பஞ்சாயத்தில் உள்ள சர்வே எண். 481/1A, ஆர்.எஸ். எண். 313/4–ல் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள 0.84 சென்ட் நிலப்பரப்பளவு கொண்ட அசையா சொத்தின் மீது உரிமையைப் பிரகடனப்படுத்தவும் மற்றும் நிரந்தரத் தடையுத்தரவு கோரியும் அவர் அசல் வழக்கு எண். 30/2002–ஐத் தாக்கல் செய்தார்.

4. இந்த மேல்முறையீட்டில், விசாரணை நீதிமன்றத்தில் வாதியாக இருந்தவர் மேல்முறையீட்டாளர் ஆவார், மற்றும் பிரதிவாதி முதல் எதிர்மனுதாரர் ஆவார். வசதிக்காக, விசாரணை நீதிமன்றத்தில் இருந்த அதே நிலைகளிலேயே தரப்பினர் இங்கு குறிப்பிடப்படுவார்கள்.

5. இந்த இரண்டாவது மேல்முறையீட்டைத் தீர்ப்பதற்குத் தேவையான வழக்கின் சுருக்கமான உண்மைகள் வருமாறு:

வழக்கிற்குரிய சொத்து முதலில் பெருமாள் கவுண்டருக்குச் சொந்தமானது என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். 02.09.1996 அன்று, பெருமாள் கவுண்டர் தனது மகனுக்கு ஆதரவாக ஒரு பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப் பத்திரத்தை ( சான்று ஆவணம் B3) எழுதிக் கொடுத்தார். பிரதிவாதி, பெருமாள் கவுண்டரின் மகன்/அதிகார முகவர் மூலம் 22.10.1996 தேதியிட்ட விற்பனைப் பத்திரம் (சான்று ஆவணம் ஆ4) வழியாக வழக்கிற்குரிய சொத்தை வாங்கினார்; இது 21.11.1996 அன்று பதிவு செய்யப்பட்டது. வாதியும் (மேல்முறையீட்டாளர்) அதே சொத்தை பெருமாள்

கவுண்டரிடமிருந்து 20.11.1996 தேதியிட்ட விற்பனைப் பத்திரம் (சான்று ஆவணம் A3) மூலம் வாங்கினார்; இது 30.01.1997 அன்று பதிவு செய்யப்பட்டது.

6. இதற்கிடையில், பெருமாள் கவுண்டர் முன்னதாக வழங்கிய பொது அதிகாரப் பத்திரத்தை (சான்று ஆவணம் B3), 20.11.1996 தேதி யிட்ட பதிவு செய்யப்பட்ட ரத்து ஆவணம் (சான்று ஆவணம் A14) மூலம் ரத்து செய்தி ருந்தார். வாதி தனது உரிமையை விற்பனைப் பத்திரம் சா.ஆ.A3-ன் கீழும், பிரதிவாதி தனது உரிமையை சா.ஆ.B4-ன் கீழும் கோருகின்றனர். கால அடிப்படையில் பிரதிவாதியின் விற்பனைப் பத்திரம் முந்தையதாகும். பெருமாள் கவுண்டர் வழங்கிய பொது அதிகாரப் பத்திரம் (சா.ஆ.B3) ஒரு செல்லுபடி யாகும் ஆவணம் அல்ல என்ற அடிப்படையில், பிரதிவாதியின் பெயரில் உள்ள விற்பனைப் பத்திரத்தை (சா.ஆ.B4) வாதி எதிர்க்கிறார்.

7. இந்த வழக்கின் சாராம்சம் என்னவென்றால், இரண்டு ஆவணங்களில்-அதாவது சா.ஆ.B4 அல்லது சா.ஆ.A3-எது செல்லுபடியாகும் மற்றும் அந்தந்த வாங்குபவருக்கு சட்டப்பூர்வ மாக எது உரிமையை வழங்குகிறது என்பதைத் தீர்மானிப்பதே ஆகும்.

8. 01.11.2019 அன்று இந்த இரண்டாவது மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டபோது, இந்த நீதிமன்றம் பின்வரும் முக்கிய சட்டக் கேள்வி களை உருவாக்கியது:

‘1. பெருமாளின் அதிகார முகவரான மெய்பாலன் மூலம் நிறைவேற்றப்பட்ட விற்பனைப் பத்திரம் 21.11.1996 அன்று பதிவு செய்யப்பட்டி ருந்தாலும், அது நிறைவேற்றப்பட்ட தேதியாக 22.10.1996 என இருப்பதைக் கொண்டு, வாதிக்கு நலனளிக்கும் உரிமை கிடைக்காது என்று கீழமை நீதிமன்றங்கள் முடிவு செய்தது சரியானதா?

2. சா.ஆ.B4 (விற்பனைப் பத்திரம்) சாட்சி கையெழுத்திட்டவர்களின் சாட்சியத்தில் உள்ள முக்கிய ஒப்புதல்கள்/முரண்பாடுகளைக் கீழமை நீதிமன்றங்கள் புறக்கணித்தது சரியா? இது கீழமை நீதிமன்றங்களின் கண்டுபிடிப்புகளைத் தவறானதாக ஆக்குமா?’

9. பெருமாள் கவுண்டர் தனது மகனுக்கு ஆதரவாக வழங்கிய பொது அதிகாரப் பத்திரத்தின் (சா.ஆ.B3) செல்லுபடித்தன்மையை வாதி பின்வரும் காரணங்களுக்காக எதிர்த்தார்:

(i) பயன்படுத்தப்பட்ட நான்கு முத்திரைத் தாள்களில், மூன்று தாள்கள் 20.09.1996 அன்று வாங்கப்பட்டுள்ளன. ஆனால், அதிகாரப் பத்திரம் 02.09.1996 அன்றே நிறைவேற்றப் பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

(ii) சான்று ஆவணம் B3-க்கு பயன்படுத்தப் பட்ட முத்திரைத் தாள்கள் வெவ்வேறு விற்பனை யாளர்களிடமிருந்து, வெவ்வேறு தேதிகளில், மற்றும் அசல் உரிமையாளர் அல்லது முகவர் அல்லாத பிற நபர்களின் பெயர்களில் வாங்கப் பட்டுள்ளன.

(ii) அதிகாரப் பத்திர ஆவணம் கிழிக்கப்பட்டு, பின்னர் ஒன்றாக ஒட்டப்பட்டுள்ளது.

10. ஆவணம் நிறைவேற்றப்பட்ட தேதி, முத்திரைத் தாள் வாங்கிய தேதிக்கு முந்தைய தேதியாக இருப்பதால், பதிவு விதிகளின் விதி 32(v)-ன்படி இதைப் பதிவு செய்திருக்கக்கூடாது என்று வாதி வாதிட்டார். அந்த விதி பின்வருமாறு கூறுகிறது:

‘(v) ஆவணம் நிறைவேற்றப்பட்ட தேதி குறிப்பிடப்படாவிட்டாலோ, அல்லது அது மாற்றப் பட்டிருந்தாலோ, அல்லது ஆவணத்தில் சாத்திய மற்ற தேதி அல்லது முத்திரைத் தாள் வாங்கு வதற்கு முந்தைய கற்பனையான தேதி குறிப்பிடப் பட்டிருந்தாலோ, சரியான தேதியைக் கண்டறிய முடியாத பட்சத்தில் அந்த ஆவணத்தைப் பதிவு செய்ய மறுக்க வேண்டும்.’

11. அதிகாரப் பத்திரத்தின் உள்ளடக்கத்தில் அது 02.09.1996 அன்று நிறைவேற்றப் பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், ஒரு முத்திரைத் தாள் அந்தத் தேதிக்கு முன்னதாக வாங்கப்பட்டிருந்தாலும், ஆவணம் எழுதப்பட்ட மீதமுள்ள மூன்று முத்திரைத் தாள்கள் 20.09.1996 அன்றுதான் வாங்கப்பட்டுள்ளன என்பதும், ஆவணம் பின்னர் 30.09.1996

அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. எனவே, அதில் கூறப்பட்டுள்ளபடி 02.09.1996 அன்று ஆவணம் நிறைவேற்றப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்பதும், அந்தத் தேதி ஒரு முன்கூட்டிய தேதி என்பதும் தெளிவாகிறது. இத்தகைய தவறான தகவல் அந்த ஆவணத்தைச் செல்லாததாக ஆக்கிவிடாது; மாறாக, அந்த ஆவணம் 20.09.1996-க்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட தாகக் கருதப்படும்.

12. பதிவு விதிகளின் விதி 32(v) என்பது பதிவுக்கு முந்தைய ஒரு பாதுகாப்பு நடவடிக்கை யாகும். சரியான தேதியைக் கண்டறிய முடியாத போது மட்டுமே இது பதிவை மறுக்க வழிவகுக்கிறது. ஒருமுறை பதிவு முறைப்படி நடந்துவிட்டால், பதிவுச் சட்டம் 1908, பிரிவு 60-ன் கீழ் அந்த ஆவணம் முறைப்படி நிறைவேற்றப்பட்டது மற்றும் நம்பகமானது என்ற சட்டப்பூர்வ ஊகம் அதற்கு கிடைக்கிறது. தேதியில் உள்ள முரண்பாடு என்பது சாட்சியங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டிய ஒன்றே தவிர, அது ஆவணத்தைச் செல்லாததாக ஆக்காது. மேலும், பெருமாள் கவுண்டர் தனது பதிவு செய்யப் பட்ட ரத்து ஆவணத்தில் (சா.ஆ.A14), கூட்டுறவு சங்கத்தில் பெற்ற விவசாயக் கடனை அடைக்க வேண்டியிருந்ததால் இந்த அதிகாரப் பத்திரத்தைத் திரும்பப் பெறுவதாகக் குறிப்பிட்டு, சா.ஆ.B3 நிறைவேற்றப்பட்டதை அவரே ஒப்புக் கொண்டு உள்ளார். அதன்படி, நிறைவேற்றப்பட்ட தேதியில் தவறான தகவல் இருந்தபோதிலும், பொது அதிகாரப் பத்திரம் (சா.ஆ.B3) செல்லுபடி யாகும் மற்றும் நடைமுறையில் இருக்கும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

13. பதிவு விதிகளின் விதி 32(ii) பின் வருமாறு கூறுகிறது:

'(ii) ஒரு ஆவணம் நிறைவேற்றப்பட்ட தேதி என்பது தரப்பினர் அதில் கையெழுத்திட்ட தேதியைக் குறிக்கும். ஆவணத்தின் தலைப்பில் உள்ள தேதி, அதன் முக நோக்கில் அவ்வாறு தெரிந்தாலும், அதுவே அந்த ஆவணம் நிறைவேற்றப்பட்டத் தேதியாக இருக்க வேண்டிய அவசியமில்லை.'

14. ஆவணத்தின் தலைப்பில் காணப்படும் 02.09.1996 என்ற தேதி, அது உண்மையில் நிறைவேற்றப்பட்ட தேதிக்கான இறுதியான ஆதாரம் அல்ல. நிறைவேற்றுபவர் உண்மை யில் எப்போது கையெழுத்திடுகிறாரோ, அதுவே நிறைவேற்றப்பட்ட தேதியாகும். ஒரு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி, அதன் நிறைவேற்றத்திற்கு முதல் நிலைச் சான்றாக மட்டுமே அமையும், அதுவே இறுதியான சான்று அல்ல என்பது உறுதி செய்யப்பட்ட சட்டமாகும். கோப்புகளில் உள்ள ஆதாரங்கள் மற்றும் பதிவு அலுவலரின் கையொப்பம் ஆகியவை, முத்திரைத் தாள்கள் வாங்கிய பிறகும், ஆவணம் பதிவு செய்யப் படுவதற்கு முன்பும் இது நிறைவேற்றப்பட்டது என்பதைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

15. பிரதிவாதி சா.ஆ.B3-ல் ஒரு தரப்பினர் அல்ல என்பதால், அவருக்கு எதிராக எந்தவொரு பாதகமான முடிவையும் எடுக்க முடியாது என்று முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் கண்டறிந்தது. இந்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஏனெனில் B3-ல் ஒரு தரப்பினராக இல்லாத பிரதிவாதி, மூன்று முத்திரைத் தாள்கள் 20.09.1996 அன்று வாங்கப்பட்டிருக்கும்போது, ஆவணத்தில் ஏன் 02.09.1996 என்று தேதி குறிப்பிடப் பட்டுள்ளது என்ற முரண்பாட்டிற்கு விளக்கம் அளிக்க வேண்டிய அவசியமில்லை. சா.ஆ.B3 முறைப்படி பதிவு செய்யப்பட்டிருப்பதால், இந்திய பதிவுச் சட்டம் 1908, பிரிவு 60-ன் கீழ் உள்ள சட்டப்பூர்வ ஊகத்தை பிரதிவாதி நம்பியிருக்க வாய்ப்புள்ளது. எனவே, தேதியில் உள்ள தவறான தகவலைக் கொண்டு மட்டும் ஆவணத்தைச் செல்லாததாக்க முடியாது.

16. பொது அதிகாரப் பத்திரத்தின் (B3) தரப்பினர் பெயரில் அல்லாமல், மூன்றாம் நபர்களின் பெயர்களில் வாங்கப்பட்ட முத்திரைத் தாள்களைப் பொறுத்தவரை, முத்திரைத் தாள்கள் அசல் உரிமையாளர் அல்லது முகவர் பெயரில் தான் வாங்கப்பட வேண்டும் என்று எந்தவொரு சட்ட விதியையும் இரு தரப்பினரும் முன்வைக்க வில்லை என்று முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பின் 12-வது பத்தியில் குறிப்பிட்டுள்ளது. சா.ஆ.B3 பாண்டிச்சேரி

(புதுச்சேரி) பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மேலும் ஆவணத்தின் இரு தரப்பினரும் புதுச்சேரியில் வசிப்பவர்கள். முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சரியாகக் குறிப்பிட்டது போல, சா.ஆ.ஆ3 நிறைவேற்றப்பட்ட நேரத்தில், ஆவணத்தின் தரப்பினர் அல்லாத பிற நபர்களின் பெயர்களில் உள்ள முத்திரைத் தாள்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் எந்தச் சட்டமும் புதுச்சேரியில் நடைமுறையில் இல்லை. அதேபோல், வெவ்வேறு தேதிகளில் வாங்கப்பட்ட முத்திரைத் தாள்களைப் பயன்படுத்துவதற்கும் சட்டப்பூர்வத் தடை ஏதும் இல்லை.

17. முத்திரைத் தாள்கள் ஆவணத்தின் தரப்பினரில் ஒருவருடைய பெயரில்தான் வாங்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு இந்திய முத்திரை விதிகள் 1925, விதி 6(2)-ல் இருந்தது; இது தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்தும். இருப்பினும், இந்த விதி பின்னர் தமிழ்நாடு அரசால் அரசாணை (G.O. Ms. No. 42602/6-2/1983, நாள் 20.08.1983) மூலம் நீக்கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில், மேல்முறையீட்டாளர் முன்வைத்த இந்த ஆட்சேபனை நிலைக்கத்தக்கது அல்ல, எனவே அது நிராகரிக்கப்படுகிறது.

18. சா.ஆ.B3 கிழிக்கப்பட்டுப் பின்னர் ஒட்டப்பட்டிருப்பதால் அது அதன் செல்லுபடித் தன்மையை இழந்துவிட்டது என்பது மேல்முறையீட்டாளரின் மற்றொரு வாதம். இந்த வாதம் ஏற்புடையதல்ல. மிகுந்த கவனத்துடன் கையாண்டாலும், ஆவணங்கள் தவறுதலாகக் கிழியக்கூடும்; அவற்றை ஒட்டுவது அல்லது சரிசெய்வதே முறையான தீர்வாகும். ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் ஏற்படும் வெறும் கிழிசல் அல்லது உடல் ரீதியான சேதம் அதன் செல்லுபடித்தன்மையையோ சட்டப்பூர்வத் தன்மையையோ பாதிக்காது.

19. ரத்து ஆவணம் (சா.ஆ.A14) மூலம் பொது அதிகாரப் பத்திரம் (சா.ஆ.B3) ரத்து செய்யப்பட்டது குறித்து முகவருக்கு எழுத்துப்பூர்வ அறிவிப்பு வழங்கப்படாததற்கு, கீழமை நீதிமன்றங்கள் தேவையற்ற முக்கியத்துவம் அளிப்பதாக மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிடப்பட்டது. நிறைவேற்றுபவரும் முகவரும் தந்தை-மகன் என்பதாலும், ஒரே வீட்டில் வசிப்பதாலும், முறையான அறிவிப்பு தேவையில்லை என்று வாதிடப்பட்டது.

20. முகவர் (D.W.4 ஆக விசாரிக்கப்பட்டவர்) ரத்து செய்யப்பட்டதை மறுத்தார் மற்றும் அதிகார முகவராகத் தான் நிறைவேற்றிய விற்பனைப் பத்திரம் (சா.ஆ.B4) செல்லுபடியாகும் என்று உறுதிபடக் கூறினார். இத்தகையச் சூழ்நிலையில், பொது அதிகாரப் பத்திரம் (சா.ஆ.B3) ரத்து செய்யப்பட்டது குறித்த முறையான அறிவிப்பு முகவருக்கு வழங்கப்பட்டது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு வாதியைச் சார்ந்தது.

21. இது தொடர்பாக, எதிர்மனுதாரர் இந்த நீதிமன்றத்தின் பின்வரும் தீர்ப்புகளைச் சுட்டிக் காட்டினார்:

(i) செந்தில்செல்வன் மற்றும் பலர் எதிர் சீனிவாசன், 2014 (2) MWN (Civil) 120;

(ii) டி. நீலா எதிர் கே.வி. குமார் மற்றும் 20 பேர், 2019 (2) MWN (Civil) 752; மற்றும்

(iii) டாக்டர் பி.ஆர். சங்கர் மற்றும் 3 பேர் எதிர் பி.ஆர். சீனிவாச ராவ் மற்றும் மற்றொருவர், 2019 (3) MWN (Civil) 419 (DB).

22. இந்த அனைத்து தீர்ப்புகளிலும், இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872, பிரிவு 208-ன் கீழ், முகமை முடிவுக்கு வருவது என்பது அந்த விபரம் முகவருக்குத் தெரியவரும்போது மட்டுமே நடைமுறைக்கு வரும் என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

23. இப்பொழுது, இந்த மேல்முறையீட்டில் எழுப்பப்பட்ட சட்டக் கேள்விகளைப் பரிசீலிப்போம். பிரதிவாதியின் பெயரில் உள்ள விற்பனைப் பத்திரம் (சா.ஆ.B4) 22.10.1996 அன்று நிறைவேற்றப்பட்டு, 21.11.1996 அன்று வானூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. வாதியின் பெயரில் உள்ள விற்பனைப் பத்திரம் 20.11.1996 அன்று நிறைவேற்றப்பட்டு, 30.01.1997 அன்று அதே அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

24. பதிவுச் சட்டம் 1908, பிரிவு 47-ன் படி, ஒரு ஆவணம் பதிவு செய்யப்பட்டவுடன், அது நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்தே நடைமுறைக்கு

வரும். சா.ஆ.A3 நிறைவேற்றப்பட்டது தெரிந்த பிறகு, சா.ஆ.B4-ல் முன்கூட்டிய தேதி இடப்பட்ட தாக வாதிடப்பட்டது. இருப்பினும், இந்த வாதத்தைத் தவிர, இதை நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லை. மாறாக, ஆ4 21.11.1996 அன்று பதிவு செய்யப்பட்டு ஒரு பொது ஆவண மாகிவிட்டது. வாதியின் விற்பனைப் பத்திரம் (சா.ஆ.A3) பின்னர் 30.01.1997 அன்று பதிவு செய்யப்பட்டபோது, வாதி B4-ன் முந்தைய இருப்பு மற்றும் பதிவைப் பற்றி அறிந்திருக்க வாய்ப்புள்ளது. எனவே, சா.ஆ.A3-ல் உள்ள 20.11.1996 என்ற தேதி, சா.ஆ.B4 பதிவு செய்யப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கவே அதிக வாய்ப்புள்ளது.

25. சா.ஆ.A3-ன் தேதி 20.11.1996 எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது 30.01.1997 அன்றுதான் பதிவு செய்யப்பட்டது என்பதால், சா.ஆ.B4 நிறைவேற்றப்படும்போது அதன் இருப்பைப் பற்றி பிரதிவாதி அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே, அதிகார முகவரால் பிரதிவாதிக்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்ட சான்று ஆவணம் சா.ஆ.B4 செல்லுபடியாகும் மற்றும் நடைமுறைக்கு வரும் என்று கீழமை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொண்டது தவறல்ல.

26. இரண்டாவது முக்கிய சட்டக் கேள்வி குறித்துப் பார்க்கையில், சா.ஆ.B4-ல் சாட்சி கையெழுத்திட்டவர்களில் ஒருவரான P.W.4, வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டார். அவர் தனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில், சா.ஆ.B4 ஆவணம் 21.11.1996 அன்று நிறைவேற்றப்பட்டு அன்றைய தினமே பதிவு செய்யப்பட்டதாகக் கூறினார். இருப்பினும், குறுக்கு விசாரணையின் போது, அந்த விற்பனைப் பத்திரம் அக்டோபர் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது என்ற ஆலோசனையை அவர் உறுதிப்படுத்தினார். D.W.2 ஆக விசாரிக்கப்பட்ட மற்றொரு சாட்சி, தனது முதன்மை விசாரணையில் சா.ஆ.B4 ஆவணம் 22.10.1996 அன்று நிறைவேற்றப்பட்டது என்று கூறினார். குறுக்கு விசாரணையில், அனைத்துப் பரிவர்த்தனைகளும் பதிவு செய்த தேதியிலேயே நடந்தன என்ற P.W.4-ன் கூற்றைக் குறித்த கேள்விக்கு அவர் 'ஆம்' என்று பதிலளித்தார்.

27. D.W.2-ன் அந்தப் பதில், P.W.4-ன் வாக்குமூலத்தைக் குறித்ததா என்பது தெளிவாக இல்லை. ஏனெனில் P.W.4 ஜனவரி மற்றும் பிப்ரவரி 2007-ல் விசாரிக்கப்பட்டார். ஆனால் D.W.2 மிகவும் தாமதமாக 06.07.2007 அன்று தான் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். மேலும், சாட்சியிடம் கேட்கப்பட்ட கேள்வி தெளிவற்றதாகவும், ஆவணம் நிறைவேற்றப் பட்ட விவகாரத்துடன் நேரடியாகத் தொடர்பு இல்லாததாகவும் இருந்தது. எனவே, ஆவணம் நிறைவேற்றப்பட்ட தேதி குறித்து தெளிவான அல்லது சந்தேகத்திற்கு இடமில்லாத ஒப்புதல் ஏதுமில்லை.

28. மேலும், இந்திய சாட்சியச் சட்டம், பிரிவு 92-ன்படி, ஆவணச் சான்றுகளுக்கு எதிராக வாய்மொழிச் சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எனவே, இந்த விவகாரத்தில் மேல் முறையீட்டாளர் முன்வைத்த வாதம் நிலைக்கத் தக்கது அல்ல, அது நிராகரிக்கப்படுகிறது.

29. மேல்முறையீட்டாளர் தரப்பில், பாரதி அம்மாள் –எதிர்– ஜெயராமன் மற்றும் பலர் [(2001) 3 M.L.J. 391] என்ற இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு மேற்கோள் காட்டப்பட்டது. அந்த வழக்கில், பதிவு செய்யப்பட்ட விற்பனை ஒப்பந்தம் மூன்றாம் நபர்களின் பெயர்களில் வாங்கப்பட்ட முத்திரைத் தாள்களில் எழுதப்பட்டிருந்தது. யாருடைய பெயரில் முத்திரைத் தாள்கள் வாங்கப் பட்டதோ அவர்களோ அல்லது முத்திரைத்தாள் விற்பனையாளர்களோ விசாரிக்கப்படவில்லை. மேலும், ஆவணத்தை நிறைவேற்றியவர் கடத்தப் பட்டதாகவும், கட்டாயத்தின்பேரில் அந்த ஆவணம் பெறப்பட்டதாகவும் குற்றம் சாட்டப் பட்டது. அத்தகையச் சூழ்நிலையில், அந்த விற்பனை ஒப்பந்தம் உண்மையானது அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

30. ஆனால் தற்போதைய வழக்கில், அசல் உரிமையாளர் பொது அதிகாரப் பத்திரத்தை (சா.ஆ.B3) நிறைவேற்றியது குறித்து எந்தத் தகராறும் இல்லை. மாறாக, அசல் உரிமையாளரே தனது ரத்து ஆவணத்தில் (சா.ஆ.A14), சா.ஆ.B3-ன் பதிவு எண் மற்றும் தேதியைக் குறிப்பிட்டு, அது நிறைவேற்றப்

பட்டதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார் (நிறைவேற்றப்பட்ட குறிப்பிட்ட தேதியை அவர் தவிர்க்க முயன்றிருந்தாலும்). மூன்றாம் நபர் களின் பெயர்களில் வாங்கப்பட்ட முத்திரைத் தாள்களில் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் மட்டுமே அதன் செல்லுபடித் தன்மை குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டுள்ளது. அவ்வாறு வாங்குவதற்கு சட்டப் பூர்வத் தடை ஏதும் இல்லாததால், அந்த அடிப்படையில் சா.ஆ.B3-ஐச் செல்லாது என அறிவிக்க முடியாது. எனவே, பாரதி அம்மாள் எதிர் ஜெயராமன் வழக்கின் தீர்ப்பு இந்த வழக்கின் உண்மைகளுக்குப் பொருந்தாது.

31. சா.ஆ.B4 ஆனது மயிலம் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் வாங்கப்பட்ட ரூ.10/- முத்திரைத் தாளில் எழுதப்பட்டுள்ளதாகவும், ஆனால் அந்தச் சொத்து வானூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் அமைந்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிடப்பட்டது. சா.ஆ.B4 ஆவணம் ரூ.10/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் எழுதப்பட்டது என்பது உண்மைதான்; இருப்பினும், இந்திய முத்திரைச் சட்டம் 1899, பிரிவு 41-ன் படி, குறைவான முத்திரைத் தீர்வை வானூர் சார்பதிவாளரிடம் ரொக்கமாகச் செலுத்தப்பட்டது. சார்பதிவாளர், ஆவணத்தை நிறைவேற்றியவர் கூறிய காரணங்களில் திருப்தியடைந்து, அந்தப் பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மீதித் தீர்வையை வசூலித்தார். இந்த நடைமுறை சட்டப்பூர்வமானது என்பதால், இதன் அடிப்படை யில் பதிவின் செல்லுபடித்தன்மையைக் கேள்வி கேட்க முடியாது.

32. அசையாச் சொத்து அமைந்துள்ள எல்லைக்கு வெளியே வாங்கப்பட்ட முத்திரைத் தாளைப் பயன்படுத்துவது குறித்த வாதத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மாநிலத்தில் நடைமுறையில் உள்ள இந்திய முத்திரை விதிகள் 1925, விதி 3(iii) பின்வருமாறு கூறுகிறது:

'3(iii) தமிழ்நாடு மாநிலத்தில் வாங்கப்பட்ட முத்திரைத் தாள்கள் மட்டுமே, அந்த மாநிலத்தில் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் தீர்வைக்கு உட்பட்ட ஆவணங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.'- [அரசாணை எண் 1365, வருவாய்த் துறை, நாள் 28.04.1955]

33. எனவே, அந்த மாநிலத்தில் சட்டப்படி தீர்வைக்கு உட்பட்ட ஆவணங்களுக்குப் பயன் படுத்தப்படும் வரை, தமிழ்நாடு மாநிலத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் வாங்கப்பட்ட முத்திரைத் தாள்களைப் பயன்படுத்துவதற்கு விதிகளில் எந்தத் தடையும் இல்லை. இதன் விளைவாக, இந்த வாதம் அடிப்படை ஆதாரமற்றது. அதன் படி, சான்று ஆவணங்கள் B3 மற்றும் B4 தொடர்பான இரண்டு ஆட்சேபனைகளும் நிலைக்கத்தக்கவை அல்ல; அந்த ஆவணங்கள் சட்டப்படி முறைப்படி நிறைவேற்றப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று கருதப்படுகிறது.

34. மேற்கூறிய விவாதங்களின் அடிப்படை யில், சான்று ஆவணங்கள் B3 மற்றும் B4-ன் உண்மைத்தன்மை மற்றும் செல்லுபடித்தன்மை குறித்து கீழமை நீதிமன்றங்கள் வழங்கிய கண்டுபிடிப்புகள் நன்கு ஆராயப்பட்டவை. சட்டப்பூர்வ ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்தவை மற்றும் சட்ட விதிகளுக்கு உட் பட்டவை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. இதில் எந்தத் தவறும் அல்லது பரிசீலிக்க வேண்டிய முக்கிய சட்டக் கேள்வியும் எழ வில்லை. அதன்படி, முக்கிய சட்டக் கேள்வி மேல்முறையீட்டாளருக்கு எதிராகவும், எதிர்மனு தாரர்களுக்கு ஆதரவாகவும் பதிலளிக்கப் படுகிறது.

35. மேலே கூறப்பட்ட காரணங்களுக்காக, இரண்டு முக்கிய சட்டக் கேள்விகளும் வாதி/ மேல்முறையீட்டாளருக்கு எதிராகத் தீர்மானிக்கப் படுகின்றன. விசாரணை நீதிமன்றம் மற்றும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மற்றும் ஆணைகள் இதன் மூலம் உறுதி செய்யப் படுகின்றன. அதன்படி, இந்த இரண்டாவது மேல்முறையீடு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# அரசு துறைகளில் தினக்கூலி அல்லது ஒப்பந்த அல்லது தற்காலிகமாக பணியமர்வான பணியாட்களின் பணி வரன்முறைப்படுத்தப்படவியலாது

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி முனைவர் அனிதா சுமந்த்
மாண்புமிகு நீதிபதி திரு.ஜி.அருள் முருகன்,
நீபேமே எண் 3562/2019 மற்றும் உபம எண் 22881/2019
17.12.2024
2025 (3) சிடிசி 494

1. தமிழ்நாடு மாநிலம், சார்பாற்றம்,
   அரசு முதன்மை செயலர்,
   பள்ளிக்கல்வி (கீ1) துறை, செயலகம்,
   சென்னை-9.
2. பள்ளிக் கல்வி இயக்குனர்,
   கல்லூரி சாலை, சென்னை-6.
3. மாவட்ட கல்வி அலுவலர்,
   வேலூர் மாவட்டம்
4. தலைமையாசிரியர்,
   அரசு உயர்நிலைப் பள்ளி,
   மேடூர்-601201
4. பொன்னேரி வட்டம்,
   திருவள்ளூர் மாவட்டம் ...மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

பி.லக்சுமி
எதிர்மேல்முறையீட்டாளர்கள்

திரு.யூ.எம்.ரவிசந்திரன்
சிறப்பு அரசு வழக்குரைஞர்,
மேல்முறையீட்டாளர்கள் சார்பில்

எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில் எவரும் முன்னிலையாகவில்லை.

## தீர்ப்புரை

**நீதிபதி திரு ஜி.அருள் முருகனால் பகரப்பட்டது**

28.2.2006 தேதிய அரசாணை நிலை எண் 22 மற்றும் 3.10.2012 தேதிய அரசாணை நிலை எண் ஆகியவற்றின் பின்னொளியில் நீதிப்பேராணை மனுதாரரது பணியை வரன்முறைப்படுத்துமாறு நீபேம எண் 18306/2013இல் நீதிப்பேராணை நீதிமன்றம் பணித்திருந்து இயற்றிய 18.1.2018 தேதிய ஆணைக்கு சவாலிட்டுக் கொண்டு இந்த நீதிப் பேராணை மேல்முறையீட்டை மாநிலம் முன்னிட்டிருக்கிறது.

2.மேமுகள் சார்பில் சிறப்பு வழக்குரைஞர் திரு.யு.எம்.ரவிசந்திரனை கேட்டறிந்தேன் சார்வானாலும் வ்ழக்கு பட்டியலில் பெய்ர் அச்சான நிலையிலும் எமேமு சார்பில் எவரும் முன்னிலையாகவில்லை.

3. எமேமு/நீதிப்பேராணை மனுதாரர் 1.6.1990 அன்று பெற்றோர்- ஆசிரியர் கழகம் மூலமாக பகுதி நேர குடி நீர் வழங்கலராக நியமிக்கப்பட்டாள். அவளது கூற்றுப்படி, அவள் 22 வருடங்கள் பணிபுரிந்திருந்ததால், 28.2,2006 தேதிய அரசாணை நிலை எண் 22 கீழ் பலன்கள் கோரிக் கொண்டு, 10 வருட பணி நிறைவில் அவரது பணி வரன்முறைப்படுத்தப் படலுக்காக நீதிப்பேராணை நீதிமன்றத்தை

அனுகியிருந்தாள். 10 ஆண்டுகள் பணியாற்றி யிருந்த ஒத்த பிரிவு கீழான நபர்களுக்கு வழங்கப்பட்ட பலன்களிலும் எமேமு நம்புகை வைத்திருந்தாள்.

4.மேமு நியமிக்கப்பட்டு 10 வருடம் பணி முடித்திருந்ததால் 28.2.2006 தேதிய அரசாணை நிலை எண் 22இல். உள்ளடங்கும் பலன் களுக்கு அவள் பாத்தியதையுற்றவள் ஆவாள் என தீர்ப்பிட்டுக் கொண்டு, பலன்களை அளிக்கு மாறு மேமுகளை பணித்துக் கொண்டு இறுதி யாக நீதிப்பேராணை மனுவை நீதிப்பேராணை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருந்தது. அதனை எதிர்த்துக் கொண்டு இப்போதைய மேல்முறை யீடை மாநிலம் தாக்கலிட்டுள்ளது.

5. ஆரம்பத்தில் குடிநீர் வழங்கலராக நீதிப் பேராணை மனுதாரர் நியமிக்கப்பட்டார் என்பது பற்றி தகராறில்லை. அவர்களது பணி வரன் முறைப்படுத்தப்பட்டதற்கு அடித்தளமான பத்தாண்டு பணிபுரிந்திருந்த பணியாளர் பிரிவுகளுக்கு பலன்களை நீட்டித்த 28.2.2006 தேதிய அரசாணை நிலை எண்22ஐ அரசு இயற்றி யிருந்தது என்பதும் மெய்யாகும்.

6. 28.2.2006 தேதிய அரசாணை நிலை எண் 22ந் தொடர்புறு பகுதி கீழ் வருமாறு வாசிப்பாகிற்து.

‘‘3. தேவைப்படும்போது அந்தந்த துறை தலைவர்களுடன் ஆலோசனையில் 1.1.2006 அன்றாக பத்தாண்டுகள் பணிபுரிந்திருந்த அனைத்து அரசு துறைகளிலும் பணியாற்றிக் கொண்டிருந்த தினக்கூலி பணியாளர்களது பணியை வரன்முறைப்படுத்தலுக்கு நடவடிக்கையை தொடருமாறு செயலகத்தின் துறைகள் அறிவுறுத்தப்படலாம்.’’

7.28.2.2006 தேதிய அரசாணை நிலை எண் 22 அடிப்படையில் பத்தாண்டுகள் பணியை பூர்த்தியாக்கியிருந்த பணியாளர் களுக்கு பள்ளி கல்வி துறையில் வழங்கியிருந்து அதன் பலன்கள் 9.5.2012 தேதிய அரசாணை நிலை எண் 111மூலமாக நீட்டிக்கப்பட்டன

8. அரசாணை நிலை எண் 22 அடிப்படை யிலான வரன்முறைபடுத்தல் பற்றிய கேள்வி பல்வேறு நீதிப்பேராணை மனுக்களிலும் நீதிப் பேராணை மேல்முறையீடுகளிலும் தீர்மானிக்கப் பட்டு உச்ச நீதிமன்றத்தால் அரசு செயலர். பள்ளிக்கல்வி துறை எதிர் ஆர்.கோவிந்தசாமி மற்றும் பிறர் 2014 4 SCC 769 வழக்கில் பரிசீலிக்கப் பட்டது. கர்னாடகா மாநிலம் –எதிர்– உமாதேவி 2006 4 SCC 1, இந்திய ஒன்றியம் –எதிர்– ஏ.எஸ்.பிள்ளை 2010 13 SCC 448 மற்றும் ராஜஸ்தான் மாநிலம் –எதிர்– வி.தயாலால் 2011 2 SC 429 ஆகிய வழக்குகளில் முன்கூட்டிய தீர்ப்புரைகளில் குறிப்பாடு வைத்துக் கொண்டு அரசு நிறுவனங்களில் பகுதி நேர பணியாளர்கள் சம நிலையை கோரவியலாது எனவும் வரன்முறைப் படுத்தலை கோரலுக்கு அவர்களுக்கு பாத்தியதை கிடையாது எனவும் இறுதியாக தீர்ப்பிட்டது.

9. (மேலுள்ள) ஆர் கோவிந்தசாமி வழக்கு தீர்ப்புரையின் தொடர்புறு பகுதி வாசிப்பாவது வருமாறு:

‘‘5.பகுதி நேர துப்புரவாளர்கள் பணிகள் வரன்முறைப்படுத்தபடலை உயர்நீதிமன்றம் பணிக்க இயன்றிந்திருந்திருக்மா என்ற கேள்வி யுடன் இங்கு உள்ளாகும் கேள்வி வரம்புற்ற தாகிறது. கேள்வி இனியும் தீர்க்கப்படாது இருக்க வில்லை.

‘‘6. கர்னாடகா மாநிலம் –எதிர்– உமாதேவி AIR 2006 SC 1806 வழக்கில் இந்த நீதிமன்றம் கீழ வருமாறு தீர்ப்பிட்டது. [SCC p 40, p48]

‘‘48.பணியில் அவர்கள் உள்ளீர்க்கபட அவர் களுக்கு உரிமை உண்ட என கோரலுக்கு தினக்கூலி அல்லது தற்காலிக அல்லது ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்கள் அடிப்படையுரிமை கொண்டிருக்கவில்லை. இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ள வாறு, இந்திய அரசமைப்பு சட்டத்தின் 14–16வது உறுப்புகளின் அவசியப்பாடுகளுக்கு இசைவாக மட்டுமே நிரந்த பணி நியமனம் செய்யப்பட வியலும் என்பதால் ஒரு பதவியை வகிப்பவர் களாக அவர்கள் அழைக்கப்பட முடியாது. முறைப்படியாக பணியமர்த்தப்பட்டவர்களுக்கு சமமான பாவித்தல் கோரிக்கைக்கு தினக்கூலி பேரில் பணியமர்த்தப்பட்ட இதர பணியாளர் களுடன் சமமாக பாவிக்கப்படலுக்கான உரிமை

நீட்டிக்கப்படவியலாது. அது சமமற்றவர்களை சமமாக பாவித்தலாக்கும் தொடர்புறு ஆட் சேர்க்கை விதிமுறைகள்படி அவர்கள் ஒருபோதும் தேந்தெடுக்கப்பட்டிருக்கவில்லை எனவான போதிலும் பணியில் உள்ளீர்க்கப் படலுக்கு கோரிக்கை வைத்தலுக்கு அதன் மீது நம்புகை வைக்கப்பட முடியாது.''

7.இந்திய ஒன்றியம் –எதிர்– ஏ.எஸ்.பிள்ளை [2010 13 SCC 448] வழக்கில் பகுதி நேர ஊழியர் களை வரன்முறைப்படுத்தல் பற்றிய பேசிய இந்த நீதிமன்றம், வேறிடத்தில் அவர் களால் பணியமர்த்தப்படுக்கான சுதந்திரம் அவர் ளுக்கு உண்டு எனவும் அதிகாரிக்காக/பணி வழங்குனருக்காக அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்காதபோது வேறிடத்தில் பணியாற்றலில் அவர்கள் தடுத்துநிறுத்தப்படவில்லை எனவும் ஆன முகாந்திரங்களில் பரிகாரத்தை மறுத்தது. அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக உள்ள நிலை யில் துறையின் முறைப்படியாக நியமிக்கப் பட்ட ஊழியர்களை கட்டுப்படுத்தும் பணிமுறை விதிகளுக்கு அல்லாது இதர ஒழுங்குமுறை களுக்கு அவர்கள் ஆட்படவில்லை. ஆகையால் சம வேலைக்கு சம ஊதியம் வழங்குதல் அல்லது அவர்களது விஷயத்தை வரன்முறைப் படுத்தல் பற்றிய கேள்வி எழாது.

8. ராஜஸ்தான் மாநிலம் –எதிர்– தயாலால் [AIR 2011 SC 1193] வழக்கில் , அனைத்து சாத்திய நிகழ்பாடுகளிலும் முறைப்படியில்லா அல்லது பகுதி நேர நியமனங்களை வரன் முறைப்படுத்தலின் குறியெல்லையை இந்த நீதிமன்றம் பரிசீலித்து அதனுள் எழுப்பப்படும் தருவாய்க்கு தொடர்புற்ற வரன்முறைப்படுத்தல் மற்றும் சமநிலை பற்றி அறுதியான கோட்பாடு களை வகுத்துள்ளது. அவை பின்வருமாறு அமைகின்றன. [SCC p435,p 12]

''(I) உயர்நீதிமன்றங்கள் அரசமைப்பு சட்ட உறுப்பு 226 கீழான அதிகாரங்களை செலுத்துகையில் ஒப்பேற்பான காலி பதவிகளில் திறந்த போட்டி செயல்முறையில் தொடர்புற்ற விதிகளுக்கு இணக்கமாக ஒப்பேற்பான காலி பணியிடங்களுக்கான நிரந்தர ஆட்சேர்ப்புக்கு பின் தொடர்கையாக வரன்முறை கோரும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டாலன்றி, வரன்முறை படுத்தலுக்கும் உள்ளீர்ப்புக்கும் அல்லது நிரந்தர தொடர்ச்சிக்காக பணித்தல்களை அளிக்காது. உறுப்புகள் 14–16இல் உள்ளடங்கும் சம முடைமை சரத்து கவனமாக பின்பற்றப்பட வேண்டும். அரசமைப்பு சட்ட திட்டத்தின் மீறலாக பணியாளர்களை வரன்முறைபடுத்தலுக்காக பணித்தல்களை நீதிமன்றங்கள் வழங்கக் கூடாது. செயல்முறையின் வேருக்கு செல்லா திருக்கும் தேர்தெடுப்பு முறைமையின் மூலகங்களில் ஒன்றை நிறைவேற்றாமைக்காக முறையற்றதாகும் ஏதோவொன்று வரன்முறைப் படுத்தப்படவியலும் எனவாக இருக்கையில் பின் வாசல் நுழைவுகளும் அரசமைப்பு சட்டத்துக்கு முரணான நியமனங்கள் மற்றும் அல்லது தகுதியற்ற மாணாக்கர்கள் நியமனம் வரன்முறைப்படுத்தப்பட முடியாது.

(ii) அத்தகைய பணிமுறை வழக்கியல்வான பணியமர்வாகும் என்பதால் நீதிமன்றத்தின் சில இடைக்கால உத்தரவுகள் கீழான போர்வையில் தற்காலிக அல்லது இடைக்கால அல்லது தினக்கூலி பணியாளரது பணி தொடர்ச்சி மட்டுமே அத்தகைய பணிமுறையில் சேர்க்கப் படலுக்கு அவருக்கு எந்த உரிமையையும் அளிக்காது, நீடித்த குறிப்பிட்ட தற்காலிக அல்லது தினக்கூலி பணி கூட வரன்முறை படுத்தலை கோரலுக்கு அத்தகைய பணியாளரை பாத்தியதையுற்றவராக்காது ஒப்பேற்பான பதவியில் அவர் பணியாற்றிக் கொண்டிருக்கா விடில் சட்டப்படி உரிமையில்லாநிலையில் வரன்முறைப்படுத்தல் ஆணை எதனையும் இயற்றலுக்கு கழிவிரக்கமும் உணர்வும் முகாந்திரங்களாக இருக்கவியலாது.

(iii) குறிப்பிடப்பட் எண்ணிக்கை வருடங் களில் பணியாற்றியிருந்து இறுதி தேதியன்று பணியில் தொடர்ந்து கொண்டிருப்பவர்களுக்கு வகை செய்யும் திட்டமாகும் இறுதி தேதியுடன் ஒரு திட்டம் வடிவமைக்கப்படும் போது கூட இறுதி தேதி அவர்களுக்கு பொருந்துகையாக்கப்பட வேண்டும் என கோரிட அல்லது அடுத்தடுத்த தேதிக்கு வகைசெய்யும் புதிய திட்டங்களுக்கு பணித்தலாணை வேண்டிட இறுதி தேதிக்கு

பின்னராக நியமிக்கப்பட்ட பிறருக்கு சாத்திய மற்றதாகும்.

(iv) ஒப்புதலான பதவிகளில் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கவில்லை என்பதால் வரன்முறைபடுத்தலை கோரலுக்கு பகுதி நேர ஊழியர்களுக்கு பாத்தியதை கிடையாது. தற்காலிக, பகுதி நேர ஊழியர்கள் உள்ளீர்க்கப் படுவதை வரன்முறைபடுத்தலுக்கு அல்லது நிரந்தரமாக தொடரலுக்கு பணித்தலாணை சாத்தியமாகவியலாது.

(v) சம வேலைக்கு சம ஊதியம் கோட்பாடு அடிப்படையில் நிரந்தர அரசு ஊழியரது சம்பளத்துடன் சமநிலை கோரலுக்கு அரசால் நடத்தப்படும் நிறுவனங்களிலுள்ள பகுதி நேர தற்காலிக ஊழியர்களால் இயலாது. தனியாரால் பணியமர்வான ஊழியர்கள் அவர்கள் முழு நேரமாக பணியாற்றிக் கொண்டிருந்தாலும் அரசு ஊழியர்களின் சம்பள்த்துடன் சமநிலை கோரிட இயலாது. அரசுக்கு எதிராக குறிப்பிட்ட சம்பளத்தை கோரலுக்கான உரிமை ஒப்பந்தம் அல்லது இயற்றல்சட்டம் கீழ் உருவாக வேண்டும்.'

10. ஆர் கோவிந்தராஜன் வழக்கில் உச்ச நீதிமன்ற தீர்ப்புரையைப் பின்பற்றிக் கொண்டு, நீபேமே எண் 836 –837/214(தமிழ்நாடு மாநிலம் மற்றும் பிறர் –எதிர்– பி.ராஜா கிருஷ்ணன்) வழக்கில் ஒப்பேற்பான பதவிகளில் மசலாச்சி இல்லாதிருப்பதால் நீதிப்பேராணை மனுவில் இயற்றப்பட்ட 5.7.2023 ஆணைகள் தொடர்பான பலன்கள் நிலையுறுத்தப்பட முடியாது என எங்ககளில் ஒருவர் தரப்பினரான [முனைவர் அனிதா சுமந்த்] இரு நீதியர் அமர்வு பத்தி 7 மற்றும் 14இல் கீழ்வருமாறு தீர்ப்புரைத்துக் கொண்டு. மேல்முறையீடை ஏற்று கொண்டது

''7. மசலாச்சி பதவி ஒப்பேற்பான ஒன்றாக அமையவில்லை எனவும் ஆகவே விதிகளுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் கிடைத்தலுக்கு வெளி யாக தனி நீதிபதியால் வழங்கப்பட்ட பலன்கள் அமைகிற்து எனவும் ஆன நிலைமைக்கும் அரசு கவனத்தை ஈர்க்கிறது.

.....

.....

14. மேலுள்ளவாறு, சென்னை பள்ளிக் கல்வித் துறை அரசு செயலர் –எதிர்– ஆர்.கோவிந்தராஜன் [உரிமையியல் மேல் முறை ஈடு எண் 2726–2729/2014 சிலவழக்கில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புரையி லிருந்தும் பகுதி நேர ஊழியர் தருவாயிலில் அதனுள் மேற்கோளான வழக்குகளிலிருந்தும் இந்த முடிவு ஆதரவு பெறுகிறது.

11. இப்போதுள்ள வழக்கில் ஏற்றவாறு, பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலமாக எமேமு பகுதி நேர பணியாளராக நியமிக்கப்பட்டார். இத்தகைய சூழல்களில் 28.2.2006 தேதிய அரசாணை நிலை எண் 22 அடிப்படையில் பிற ஊழியர்களுக்கு சமமாக சமநிலைக்கும் பலன் களுக்கும் ஆன எமேமுஇன் கோருகை நிலை யுறுத்தப்பட முடியாது. எனவே நீதிப்பேராணை மனுவிலான ஆணை தலையீடை தேவையாக்கு கிறது.

12. மேலுள்ளதன் பின்னொளியில் நீதிப் பேராணை நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட 18.1.2019 தேதிய ஆணை நீக்கறவாகி இந்த நீதிப்பேராணை மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. செலவு தொகையில்லை. தொடர்புறு பல்வகை மனு தீர்வாக்கப்படுகிறது.

**மொழியாக்கம் : பா.ஞானசேகரன்**


**ரூ.900/- பணம்**
**காசோலை (Cheque)**
**அல்லது**
**வங்கி வரைவுக் கேட்போலை**
**(Demand Draft)**
**மூலம் செலுத்தி**
**சட்டக்கதிர் ஆண்டு**
**சந்தாதாரர் ஆகுங்கள்**

விவரங்களுக்கு
website:www.sattakadir.com
E-mail:sattakadir1992@yahoo.co.in.

# வணிக நீதிமன்றங்கள் சட்டப்படி அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்

சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்)
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.ஆர்.விஜயகுமார்
உ.சீ.ம.(PD) (MD) எண்கள் 7 & 8/2025
உ.ப.ம. (MD) எண்கள் 104 & 105/2025
தீர்ப்பு நாள் 7.4.2025
2025 (3) சிடிசி 808

அருணாசலா இம்பெக்ஸ் தனியார் வரம்பிடப்பட்டது.
அதன் மேலாண்மை இயக்குநர் மூலமாக – கமலநாதன் கலைவாணி
2. கமலநாதன் கலைவாணி,
மேலாண்மை இயக்குநர்
அருணாசலா இம்பெக்ஸ் தனியார் வரம்பிடப்பட்டது.
3. ஸ்வாதி செல்வராஜ் அதன் இயக்குநர் மூலமாக
அருணாசலா இம்பெக்ஸ் தனியார் வரம்பிடப்பட்டது,
சென்னை – 600 028. ...மனுதாரர்கள்

–எதிர்–

ஸ்வாதிராம் சன்ஸ் தனியார் வரம். – சார்பாற்றம்
அதன் கிளை மேலாளர், தேஷ் ராஜ்சர்மா,
19–ஏ, முதல் தளம், தெற்கு ராஜா தெரு, தூத்துக்குடி
...எதிர்வழக்கீட்டாளர்கள்

ரகுவரன் கோபாலன்,
ஆர்.எல்.திலிபன் பாண்டியன்
மனுதாரர்களுக்கான வழக்கறிஞர்

ஜி.பிரபுராஜதுரை
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

உ.சீ.ம. தள்ளுபடி, உ.சீ.ம. 8 அனுமதிக்கப் பட்டது. செலவுத் தொகையின்றி. ப.ம. முடிக்கப் பட்டது.

**கோரிக்கை**: உ.சீ.ம. (MD) எண்கள் 7/2025 உரிமையியல் சீராய்வு வழக்கு இந்திய அரசமைப்பின் 227ஆல் உறுப்பின்படி முன்னிடப்பட்டது. மு.வ.எண் 88/2019 தூத்துக்குடி, முதன்மை மாவட்ட நீதிமன்ற கோப்பில் உள்ளது. மு.மே.எண் 3/2021இன் 13.8.2004 தேதியிடப்பட்ட குறை கூறப்பட்ட ஆணையை தள்ளுபடி செய்யக் கோரப்பட்டது.

தீர்ப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 13.3.2025க்கு மற்றும் வெளியிடப்பட்டது. 7.4.2025 அன்று.

## தீர்ப்பு:

1. இந்த இரண்டு சீராய்வு மனுக்களும் எதிர்வழக்கீட்டாளர்களால் மு.வ.எண் 88/2019 தூத்துக்குடியில் முதன்மை மாவட்ட நீதிமன்ற கோப்பில் உள்ளது.

(அ) பொருண்மை பற்றியது

2. வாதுரையில் கூறப்பட்ட உறுதியுரை யினை கூர்ந்தாய்வு செய்வதில் அறியப்படுவ தாவது எதிர்வாதிகள் வழக்கில் தூத்துக்குடியில் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளனர். அதன்படி 2643 பைகள் லயர்டு எல்லோ லெண்டில்ஸ் மற்றும் 2440 பைகள் எஸ்டன் எல்லோ லெண்டில்ஸ், தூத்துக்குடி சரக்கு பண்டக சாலை யிலிருந்து வாங்க ஒப்பந்தம் செய்துள்ளனர். செலுத்தம் செய்யப்படவில்லை. சரக்குகளை தூக்கிய பின்னர் இதன் செலுத்தத்திற்காக சொல்லப்பட்டத் தொகையைப் பெற வழக்கு முன்னிடப்பட்டது.

3. எதிர்வழக்கீட்டாளர் இதில் மேற்சொல்லப் பட்ட வழக்கை முன்னிட்டுள்ளார். ரூ.49,38,820 யினை பெறுவதற்கான உய்திக்காக எதிர்வாதி யிடமிருந்து எதிர்கால வட்டியுடன் அதன் செலவுத் தொகை கோரப்படுகிறது.

4. உ.சீ.ம. (MD) எண் 7/2025 - உ.வி.தொ. ச.இன் கட்டளை 7இன் விதி 11இன்படி எதிர் வழக்கீட்டாளர்களால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து முன்னிடப்பட்டது. அதாவது வாதுரையை நிராகரிக்க கோரி உ.சீ.ம. (MD) 8/2025 எதிர்வாதிகளால் முன்னிடப் பட்டது. வாதியினால் முன்னிடப்பட்ட விண்ணப்பத்தினை அனுமதித்த அதாவது கட்டளை 5இன் விதி 1இன்படி வணிக நீதிமன்றம் ஓர் ஆணை பிறப்பித்துள்ளது எதிர்வாதிகளின் உரிமைகளை விட்டுக்கொடுத்து, அதாவது ஒரு எழுத்துமூல விவர உரையை முன்னிடுவதற்கான உரிமையை விட்டுக் கொடுத்து இதில் எழுத்துமூல விவர உரை 120 நாட்கள் காலம் அழிவுற்ற பின்னர், முன்னமே முன்னிடப்பட்டது. இது பதிவேட்டி லிருந்து எடுக்கப்பட்டது.

5. இந்த இரண்டு ஆணைகளையும் எதிர்த்து, தற்போதைய சீராய்வு மனுக்கள் எதிர்வாதிகளால் முன்னிடப்பட்டுள்ளது.

பி. இரு தரப்பினராலும் பணிந்தனுப்பப் பட்டவைகள்

6. சீராய்வு மனுதாரர்களின் வழக்கறிஞருக் கிணங்க, எதிர்வாதிகளால் பெறப்பட்ட அழைப்பாணைகள், எதிலும் அது வணிக வழக்கு என்பது குறிப்பிடப்படவில்லை. வாதுரையின்படி, அழைப்பாணைகளுடன் சார்வு செய்யப்பட்டதிலும் கூட, அது முன்னிடப்பட்டதில் அல்லது வணிக வழக்காக கருதப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. எதிர்வாதிகளின் வழக்கறிஞர் இரண்டாதாரரிடமிருந்து கடிதம் போக்குவரத்தை 6.2.2023 அன்று பெற்ற போது மட்டுமே, இந்த வழக்கு ஒரு வணிக வழக்கை பாவிக்கப்பட்டது. அறியப்பட்டது. எதிர்வாதிகள், மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டன. ஆணைகளுக்கு உடந்தை யாளர்களாக இல்லை. அதாவது வாதுரையை பெற்ற போதும் எதிர்வாதிகள் எந்த நேரத்திலும் இது பற்றி எந்த அறிக்கையும் பெறவில்லை. அதாவது வழக்கு வணிக வழக்காக தொடங்கப் பட்டது பற்றி. எழுத்து மூல விவர உரை அழைப்பாணைகள் பெறப்பட்ட தேதியிலிருந்து 146 ஆவது நாளில் முன்னிடப் பட்டது.

7. மனுதாரர்களின் வழக்கறிஞர் மேலும் வாதிட்டதாவது, வணிக வழக்கில் வாதுரைகள் சரிபார்க்கப்படுவது வணிக நீதிமன்றங்கள் சட்டத்தின் கட்டளை 6இன் விதி 15(அ)இன்படி எதிர்பார்க்கப்படுவது அதுவும் வாதுரையுடன் சேர்த்து முன்னிடப்படவில்லை. வாதுரைகளை சரிபார்த்தல் தொடர்பாக அதன்படி கோரப்பட்டு முன்னிடப்பட்ட விண்ணப்பப்படி கட்டளை 6, விதி 15(அ)இன்படியானது, அது முதன்மை மாவட்ட நீதிமன்றத்தினால் அத்தகைய சரிபார்ப்பு எதுவும் முன்னிடப்படவில்லை என்று திருப்பியளிக்கப் பட்டது.

8. சீராய்வு மனுதாரர்களின் வழக்கறிஞர், மேலும் வாதிட்டதாவது பத்தி எண் 10இல் அந்த எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணை சீராய்வு மனுவில், (உ.சீ.ம.(MD) எண் 8/2025)இல், முதன்மை மாவட்ட நீதிபதி இந்த திருப்பப்பட்ட ஆணை 9.9.2019 அன்று அலுவலகத்தால் பிறப்பிக்கப்பட்டதை மட்டுமே ஆதாரமாகக் கொண்டுள்ளார். அதாவது அந்த வழக்கு ஒரு வணிக வழக்காக முன்னிடப்பட்டதாகக் கண்டறியப் பட்டது. இதில் அளிக்கப்பட்ட எண் மு.வ.எண் 88/ 2019 மனுதாரர்களுக்கு இணங்க, எதிர் வாதிகள் திருப்பப் பெறப்பட்ட ஆணை பற்றி அறிந்திருக்கவில்லை மற்றும் திரும்பப் பெற்ற ஆணை எந்த நேரத்திலும் எதிர்வாதிகளுக்கு தெரியப்படுத்தப்படவில்லை.

9. மனுதாரர்களுக்கான வழக்கறிஞர் மேலும் வாதிட்டதாவது அந்த விசாரணை நீதிமன்றம், வாதுரையில், முகப்புச் சீட்டில் அது ஒரு வணிக நீதிமன்ற வழக்கு என்று மேற்குறிப்பெழுதப் பட்டிருந்தது. அதனையே இவர்கள் ஆதாரமாகக் கொண்டனர். எனினும் மேல்முகப்பு சீட்டு வாதுரையில் பகுதியாகாது. அதுவே எதிர்வாதி

களுக்கு சார்வு செய்யப்பட்டது. அவர் மேலும் குறிப்பிட்டதாவது விசாரணை நீதிபதி, அவரே ஏற்றுள்ளதாவது அந்த நாள் வரையில் வழக்கின் எண் மு.வ.எண் 88/2019 மற்றும் இது C.O.S. எண் 88/2019 அல்ல என்பது.

10. மனுதாரர்களின் வழக்கறிஞர்களுக்கு இணங்க, தூத்துக்குடியின் முதன்மை மாவட்ட நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ப்பட்ட நீதிமன்றம் அதாவது வணிக வழக்குகளுக்கானதல்ல. ஆனால், சாதாரண வழக்குகளை ஏற்கும் நீதிமன்றம், அதாவது 10,00,000 ரூபாய்க்கு மேற்பட்ட வழக்குகளை ஏற்கும் நீதிமன்றம், அதாவது 10,00,00 ரூபாய்க்கு மேற்பட்ட வழக்குகளை ஏற்கும். அத்தகைய சூழ்நிலை களில், இதில் குறிப்பிட்டு தெரிவிக்கப்பட்டா லன்றி, எதிர்வாதிகள் இதிலிருந்து அது ஒரு வணிக வழக்கு என்று எதிர்கொள்ள முடியாது மற்றும் வணிக வழக்குகள் சட்டம் 2015இன் வகைமுறைகள் செய்யப்பட்ட வழக்குகளுக்கு பொருந்தும். இத்தகைய சூழ்நிலைகளில் விசாரணை நீதிமன்றம் 2015 வணிக நீதிமன்றங்கள் சட்டத்தை செயற்படுத்துவது சரியல்ல. அதாவது எதிர்வாதிகள் ஒரு எழுத்து மூல விவர உரையை முன்னிடாது தவிர்த்து ள்ளனர் என்பது மற்றும் இவர்கள் பதிவேட்டி லிருந்து எழுத்து மூல விவர உரையை எடுத்துள்ளனர்.

11. சீராய்வு மனுதாரர்களின் வழக்கறிஞர், இந்த நீதிமன்றத் தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டுள்ளார். டி.வி.கிருஷ்ணமூர்த்தி மற்றும் பிறர் –எதிர்– கனகதாரா நிதி மற்றும் பிறர் உ.சீ.ம.எண் 4244/2023, 15.3.2024 தேதி யிடப்பட்டது மற்றும் வாதிட்டதாவது, குறிப்பிட்ட எதிர்ப்பு வாதுரையில் இந்தச் சூழ்நிலைகள் தொடர்பாக, இந்த வழக்கை வணிக நீதிமன்ற சட்டத்தின் பிரிவு 12(அ)வின் தேவைக்கு வெளியே எடுக்க வேண்டியது. எனவே, எதிர் வாதிகள் இந்த பொருண்மைப்படி வணிக வழக்கு முன்னிடப்பட்டதை அறிந்திருக்கவில்லை.

12. மனுதாரர்களின் வழக்கறிஞர் நீதியர் ஆயத்தினை தீர்ப்பை ஆதாரமாகக் காட்டி யுள்ளார். தில்லி உயர்நீதிமன்றம் டிஷ் டிவி இந்தியா வரம்பிடப்பட்டது –எதிர்– கல்ப் டிடிஹெச் எஃப் 2, எல்எல்சி மற்றும் பிறர், 2024 உச்.நீ.வ. வலைதளம் தில்லி 4844 வாதிட்ட தாவது வழக்கானது ஒரு வணிக வழக்காக மனு எண்ணிட பணிக்கப்பட்டது. சாதாரண வழக்கின் போக்கில் விசாரணை நீதிபதி வணிக நீதிமன்றங்கள் சட்டத்தின் பிரிவு 15(3)இன் வரம்புரையின்படி, அவரது உளத் தேர்வினை செயற்டுத்தியிருத்தல் வேண்டும். அதாவது எழுத்து மூல விவர உரையை முன்னிடு வதற்கான புதிய கால அவகாசத்தை வகுத்துரைப்பது தொடர்பாக. சொல்லப்பட்ட வழக்கில் எழுத்து மூல விவர உரை 120 நாட்கள் கடந்த பின்னரும் 3 நாட்களுக்க முன்னிடப்பட்டது. அது மன்னிக்கப்பட்டது. அதாவது காலத் தாழ்வுக்கான விளக்கம் ஒன்று எதிர்வாதிகளால் அளிக்கப்பட்டதன்பேரில்.

13. சீராய்வு மனுதாரருக்கான வழக்கறிஞர், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டுள்ளார். ராஜ்ப்ராசஸ் சாதனங்கள் அண்டு சிஸ்டம்ஸ் பிரைவேட் லிட் மற்றும் பிறர் –எதிர்– ஹானஸ்ட் டெரிரேட்டிவ்ஸ் பி. லிட்., 2022 (3) (MWN) (உரிமையியல்) 676 (உச்.நீ.): 2022 உச்.நீ.வ. வலைதளம் உச்.நீ. 1877. இதில் உச்சநீதிமன்றம் கூறியதாவது நீதிமன்றத்தின் முன்பு வழக்கு நடப்பில் உள்ளது. சாதாரண உரிமையியல் நீதிமன்றத்தின் முன்பானது மற்றும் பின்னர் இது ஒரு வணிக நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இந்த வழக்கானது, ஒரு சாதாரண வழக்காக நடத்தப்பட வேண்டும் மற்றும் 120 நாட்கள் காலத்தாழ்வு இத்தகைய வழக்கிற்குப் பொருந்த தக்கதல்ல. வழக்கறிஞர் உச்சநீதிமன்ற வழக்கை ஆதாரமாகக் காட்டியுள்ளார். ஐஸ்க் சிங் –எதிர்– பிரிஸ்லால் மற்றும் பிறர், அ.இ.அ. 1966 உச்.நீ. 1631. வாதமாவது நீதிமன்றத் தரப்பில் தவறு உள்ளதாகவும், நீதிமன்றத் தகவலின் அடிப்படை யில் வழக்காடுபவர் கூறுவதாவது நீதிமன்றத் தவறால் வழக்காடுபவருக்கு குந்தகம் ஏற்படக் கூடாது மற்றும் அவருக்கு பழைய நிலை

அடையப் பெற வேண்டும். அதாவது அந்த தவறு நடந்திராவிட்டால் பெறக் கூடிய நிலை.

14. மனுதாரர்களின் வழக்கறிஞர் மேலும் வாதிட்டதாவது, எதிர்வாதிகள் வழக்கானது ஒரு வணிக வழக்காக முன்னிடப்பட்டது என்றும் பொருண்மையை அறியாதிருந்தால். அதாவது 6.2.2023 அன்று முதன்மை மாவட்ட நீதிமன்ற சிரஸ்தாரரிடமிருந்து கடிதப் போக்குவரத்தை பெறப்படும் வரையில் மற்றும் அதன் பின்னர், அந்த வழக்கு, ஒரு வணிக வழக்காகவே தொடர்ந்தது. அதுவும் எண்ணில் எந்த மாற்றமும் இன்றி. எனினும், சொல்லப்பட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 21.2.2020இல் எழுத்து மூல விவர உரை முன்னிடப்பட்டது. அதுவும் 146 நாட்கள் கால தாமதத்துடன்.

15. மனுதாரர்களுக்கான வழக்கறிஞர், அவரது பணிந்தனுப்புதல்களைச் செய்வதில் அதாவது உ.சீ.ம. (MD) எண் 7/2022 வாதிட்ட தாவது எந்த எதிர் ஒப்பந்தமும் நீதிமன்றத்தின் முன்பு முன்னிடப்படவில்லை என்பது குறிப்பிடுவதாவது எந்த வியாபார நடவடிக்கை பற்றியும் குறிப்பு இல்லை என்பது. மேலும் வாதிடப்பட்டதாவது வழக்குக்கு முந்திய அறிக்கை வாதியின் வழக்கறிஞரால் முன்னிடப்பட்ட இதில் வாதியின் கிட்டங்கியில் தூத்துக்குடியில் சரக்கு விதைகளை ஒப்படைப்பு செய்வதாக கூறப்பட்டிருந்தது. எனவே, அத்தகைய வாதுரைகள் கிடைக்கத்தக்கதாக இருந்தாலன்றி, முதன்மை மாநில நீதிமன்றம் தூத்துக்குடியில் உள்ளதற்கு, எப்படியிருப்பினும் அதிகார வரம்பு கொண்டிருக்க முடியாது. அதில் இந்த செயற்படுதலுக்கான காரணம் தூத்துக்குடியில் எழுந்துள்ளது என்பதற்கானது பதிவேடுகளில் எதிலும் காட்டப்படவில்லை.

16. வழக்கறிஞர் மேலும் வாதிட்டதாவது, விசாரணை நீதிமன்றம், தவறுதலாக, இந்த கண்டறிதலுக்கு வந்துள்ளது. அதாவது மொத்த நடவடிக்கைகளும் தூத்துக்குடியில் நடைபெற்று உள்ளது என்பதாக இவை சில பதிவுச் சீட்டுகளின் அடிப்படையில் எந்த எழுத்து மூல ஒப்பந்தமும் இன்றி உள்ளது. எனவே, விசாரணை நீதிமன்றம், உ.வி.தொ.ச.இன் கட்டளை 7 விதி 11இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்திருக்கலாகாது.

17. மாறாக, எதிர்வழக்கீட்டாளர்/வாதிகள் வழக்கறிஞர், வாதிட்டதாவது, வாதி மற்றும் எதிர்வாதிகள் தனியார் வரம்பிடப்பட்ட நிறுமங்கள் அவர்களிடையேயான நடவடிக்கைகள் வணிகத் தன்மையானவை எதிர்வாதிகள் நன்கு இந்த நடவடிக்கை பற்றி அறிந்திருத்தல் இதற்காகவே பணம் பெற கோரியிருந்தனர். இது வணிகத் தன்மையதே.

18. எதிர்வழக்கீட்டாளர்களின் வழக்கறிஞர், மேலும் வாதிட்டதாவது, 2015 வணிக நீதிமன்றங்கள் சட்டத்தின்படி, வழக்கானது, ஒரு வணிக வழக்காக முன்னிடப்பட்டுள்ளது என்ப தால் எதிர்வாதி அறிக்கை அளிப்பது பற்றி சட்டத்தில் எந்த வகைமுறையும் இல்லை மற்றும் இது 2015 வணிக நீதிமன்ற சட்டத்தின் படி ஆளப்படுகிறது என்பதில் இல்லை. எதிர் வாதிகள் சொல்லப்பட்ட பொருண்மைகளை வாதுரையில் வாதங்களிலிருந்தே இது பற்றிய பொருண்மைகளை சேகரிக்க வேண்டியுள்ளது. அதன்படியே அவர்கள் செயற்பட வேண்டி யுள்ளது.

19. எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் மேலும் வாதிட்டதாவது, அழைப்பாணைகளைப் பெற்றதன்பேரில் உடனடியாகவே எதிர்வாதிகள் வாதுரையையும் அதனுடன் முன்னிடப்பட்ட ஆவணங்களையும் ஆய்வு செய்திருத்தல் வேண்டும். அதாவது நீதிமன்றத்திடம் அதற் கான அனுமதியைப் பெற்றதும் எதிர்வாதிகளின் தரப்பில் இது பற்றி அசட்டை அல்லது செயற் படாநிலை உள்ளது. அதாவது வாதுரையை சரிபார்க்காதது பற்றி அவர் இப்போது வாதிட முடியாது. அதாவது இவர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட வாதுரை முன்னிடப்பட்ட நேரத்தில்.

20. எதிர்வாதிகள் வழக்கறிஞர் மேலும் வாதிட்டதாவது வாதுரைகள் சரிபார்த்தல்

முன்னிடப்படாதது. அதாவது உ.வி.தொ.ச.இன் கட்டளை 6, விதி 15 (அ)இன்படி. இது ஒரு திருத்தப்படக் கூடிய/சரி செய்யப்படக் கூடிய தவறே. எனவே, இது மட்டுமே வழக்கை ஒரு சாதாரண வழக்காகப் பாவிக்க ஒரு காரணமாக அமையாது.

21. எதிர்வாதியின் வழக்கறிஞர் மேலும் வாதிட்டதாவது வாதுரையில் அதுவும் குறிப்பாக கூறப்பட்டிருந்ததாவது வாதி 24 சதவீதம் வட்டியைக் கோரியுள்ளார். ஏனெனில் இது ஒரு வணிக நடவடிக்கை என்பதால். எனவே இந்த வாதங்கள் உ.வி.தொ.ச.இன் கட்டளை 7இன் விதி 2(அ)க்கிணங்க செய்யப்பட்டுள்ளன. இது வணிக வழக்கிற்கு பொருந்துகிற ஒன்றே. எனவே, இதில் வெளிப்படையாக இது வணிக வழக்கு ஒன்று உரைக்க தேவையில்லை. வழக்கானது சாதாரண வழக்காக தொடுக்கப்பட வில்லை. ஆனால் பின்னர் வணிக வழக்காக மாற்றப்பட்டது. தொடக்கத்திலிருந்தே வழக்கானது வணிக வழக்காக மட்டுமே முன்னிடப்பட்டது. எனவே, வழக்கறிஞரால் கூறப்பட்ட தீர்ப்பு எதிர் வாதிகளுக்கானது தற்போதைய வழக்கின் பொருண்மைகளுக்குப் பொருந்தாது.

22. எதிர்வழக்கீட்டாளர்களின் வழக்கறிஞர் மேலும் வாதிட்டதாவது கால வரம்புக்காலம் உ.வி.தொ.ச.இன் கட்டளை 8இன் விதி 1இன்படி எழுத்து மூல விவர உரை முன்னிடுவதற்காக வகுத்துரைக்கப்பட்டது (வணிக நீதிமன்றங்கள் சட்டத்திற்கு பொருந்துகிறவாறு.

23. மேற்சொல்லப்பட்ட பொருண்மைகளின் கருத்தில் எந்தச் சூழ்நிலைகளிலும், எழுத்து மூல விவர உரை முன்னிடுவதற்கான காலம் நீட்டிக்கப்படும். 120 நாட் கால அளவு முடிவடை வதன்பேரில் அதாவது அழைப்பாணைகள் பெறப்பட்ட தேதியிலிருந்து, எதிர்வாதிகள் தங்களது எழுத்து மூல விவர உரை முன்னிடும் உரிமையை விட்டுக் கொடுத்தனர். விசாரணை நீதிமன்றம் அதன் அதிகாரத்தைச் செயற்படுத்தியுள்ளது. அதாவது வணிக நீதிமன்றங்கள் சட்டத்திற்குப் பொருந்துகிற வகைமுறைகளை மற்றும் இது இடையீடு செய்யப்பட வேண்டியது இல்லை.

24. எதிர்வழக்கீட்டாளரின் வழக்குரைஞர் மேலும் வாதிட்டதாவது உ.வி.தொ.ச. இன் கட்டளை 7இன் விதி 11இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பத்தைப் பொறுத்தவரை, இதன் வாதுரையில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது குழு நடவடிக்கைகளும், முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் ஆட்சி மண்டல நிலப் பரப்பின் அதிகார எல்லைகளுக்குள்ளே நடை பெற்றுள்ளது. தூத்துக்குடியில், இந்த நடவடிக்கை களை அலைக்கழிப்பு செய்யவே சொல்லப்பட்ட விண்ணப்பம் எதிர்வாதிகளால் முன்னிடப் பட்டுள்ளது. எதிர்வாதிகள் பிற நீதிமன்றம் எதனின் அதிகார வரம்பு பற்றிக் குறிப்பிடாத போது இதில் தெளிவாக்கப்படுவதாவது இது அலைக்கழிப்புக்கான விண்ணப்பம் என்பது. எனவே, அவர் கோருவது விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை அவ்வாறே வைத்திருப்பது.

25. இரு தரப்பினர்களும் கேட்டறியப் பட்டுள்ளனர் மற்றும் பதிவேடுகளின் பொருட் பாடுகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன.

**கலந்தாய்வு**

26.சீராய்வு மனுக்களை வகை செய்வதற்கான தொடர்புற்ற தேதிகள் மற்றும் நிகழ்வுகளின் சுருக்கம் பின்வருமாறு.

| வ.எண் | தேதிகள் | நிகழ்வுகள் |
|---|---|---|
| 1. | 9.7.2019 | தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் முன்பு வாதுரை முன்னிடப்பட்டது. |
| 2. | 9.9.2019 | வாதுரை நீதிமன்றத்தினால் திருப்பியளிக்கப்பட்டது. அதாவது வழக்கானது வணிக வழக்கு என்ற காரணத்தின்பேரில், முன்பு செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளை முடிக்காமல் வழக்கு செல்லத்தக்கதல்ல என்று கூறப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 3. | 18.9.2019 | வாதுரை மீண்டும் முன்னிடப்பட்டது. அதில் மேற்குறிப்பு எழுதப்பட்டிருந்தது. அதாவது அவசர இடைநிலை உய்தி கோரப்படுகிறது. அதாவது எதிர்வாதி களின் வங்கி கணக்குத் தொகை பற்றுகை செய்யப்பட்டது எனவே, வழக்கு செல்லத்தக்கது முன்பு செய்யப்பட வேண்டிய நடைமுறையின்றி. |
| 4. | 26.9.2019 | அழைப்பாணைகளை எதிர்வாதிகள் பெற்றனர். |
| 5. | 16.12.2019 | மு.மே.எண் 2/2019 எதிர்வாதிகளால் முன்னிடப்பட்டது. உ.வி.தொ.ச.இன் கட்டளை 7, விதி 11இன்படி வாதுரையை நிராகரிக்கக் கோரி. |
| 6. | 21.2.2020 | தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் முன்பு எழுத்து மூல விவர உரை முன்னிடப்பட்டது. |
| 7. | 9.9.2021 | வாதி மு.மே.எண் 3/2021இனை முன்னிட்டு எதிர்வாதிகள் எழுத்து மூல விவர உரையை முன்னிடும் உரிமையை விட்டுக் கொடுப்பதாகவும் எதனால் பதிவேடுகளில் இருந்தான எழுத்து மூல விவர உரையை எடுத்து விடவும் கோரப்பட்டது. |
| 8. | 6.2.2023 | சிரசுதார் தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிமன்ற கடிதப்போக்குவரத்தில் வாதி மற்றும் எதிர்வாதிகளின் வழக்கறிஞர்களுக்கு கூறப்பட்டதாவது மு.வ.எண் 88/2019இல் நடப்பில் உள்ள நடவடிக்கைகள் தொடரப்படும் அதாவது அதே எண்களில் வணிக நிதிமன்ற சட்டத்தின்படி என்பது. |
| 9. | 13.8.2024 | மு.மே.எண் 2/2019 எதிர்வாதிகளால் முன்னிடப்பட்டது தள்ளுபடி செய்யப்பட்டது மற்றும் மு.மே.எண் 3/2021 வாதிகளால் முன்னிடப்பட்டது. விசாரணை நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டது. |

27. தூத்துக்குடியில் உள்ள முதன்மை மாவட்ட நீதிமன்றம் ஒரு குறிப்பிடப்பட்ட நீதிமன்றம் அதாவது 2015 வணிக நீதிமன்ற சட்டத்தின் 3ஆம் பிரிவின்படி வணிக வழக்குகள் அவ்வாறு சொல்லப்பட்ட நீதிமன்றத்திற்கு முதன்மை அதிகார வரம்பு அதாவது முதன்மை உரிமை யியல் வழக்குகள் வழக்குகளின் மதிப்பு 10,00,000க்கு மேற்பட்டவற்றை விசாரிக்கும் அதிகார வரம்பு சாதாரண வழக்குகள் எண்ணிடப் பட்டவை. மு.வ.(முதன்மை வழக்கு) மற்றும் வணிக வழக்குகள் எண்ணிடப்பட்டவை. வ.மு.வ. நீதிமன்றமானது இந்த பொருண்மைகள் பற்றி நீதிமுறை அறிக்கை பெறும்.

28. வாதுரையானது 9.7.2019 அன்று முன்னிடப்பட்டது. பத்தி எண் 7 வாதுரையில் வாதி 24 சதவீதம் வட்டி இந்த வணிக நடவடிக்கைக்கான கோரியுள்ளார். இந்த வாதங்கள் நீங்கலாக, வேறு எந்த வாதம் வாதுரையில் காணப்படவில்லை. அதாவது இதனை ஒரு வணிக வழக்கு என்று கூறுவதற்கு. இதில் விசாரணை நீதிபதி, இரண்டு மேற்குறிப்பு களை ஆதாரமாகக் கொண்டிருந்தார். அவை அலுவலகத்தில் செய்யப்பட்டவை. அதாவது இந்த வழக்கு ஒரு வணிக வழக்கு என்னும் கண்டறிதலைப் பெறுவதற்காக. இதில் ஒரு மேற்குறிப்பு அந்த வாதுரையின் பின் பக்கத்தில் உள்ளது. ''வணிக நீதிமன்ற வழக்குகள்'' என்பது. மற்றொரு மேற்குறிப்பு அந்த அலுவலகத்தின் திருப்பி அனுப்பப்பட்ட ஆணை யில் பிறப்பிக்கப்பட்டது. இந்த வழக்கின் செல்லுந்தன்மையைக் கேள்வியாக்கி அதாவது இதற்கு வழக்கிற்கு முந்திய செயற்பாடுகள் பற்றிய கேள்வி. இதில் எதிர்வாதிகளின் வழக்காவது இதன் முகப்பு தாள்களில் காணப் படும். இது ஒரு வணிக நீதிமன்ற வழக்கு என்பது இது வாதுரையில் பகுதியாக அமையாது. இது இவருக்கு சார்வு செய்யப்பட்டது. இந்த வழக்கின் செல்லுந்தன்மையைக் கேள்வியாக்கி அதாவது இதற்கு வழக்கிற்கு முந்திய செயற்பாடுள் பற்றிய கேள்வி. இதில் எதிர்வாதிகளின் வழக்காவது

இதன் முகப்பு தாள்களில் காணப்படும் இது ஒரு வணிக நீதிமன்ற வழக்கு என்பது. இது வாதுரையின் பகுதியாக அமையாது. இது இவருக்க சார்வு செய்யப்பட்டது. இந்த பொருண்மை அது முரணாக்கப்படவில்லை என்பது அதுவும் விசாரணை நீதிமன்றத்தினால் இது எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணை அல்லது வாதியினால் இந்த நீதிமன்றத்தின் முன்பு பொருட்பாடுகள் முன்னிடப்பட்டுள்ளது என்பது.

29. எழுத்துமூல விவர உரை முன்னிடப் படுவதற்கு ஒரு சிறப்பு கால வரம்பு வகுத்து ரைக்கப்படும்போது, அதாவது ஒரு வணிக வழக்கின் சட்டத்தின்படி அந்த வழக்க ஒரு வணிக வழக்காக முன்னிடப்பட்டதா இல்லையா என்பது பற்றி எதிர்வாதிகளுக்குத் தெளிவாக்கப் பட வேண்டும். அதுவும் குறிப்பாக 120 நாட் களுக்குள் எழுத்து மூல விவர அறிக்கை யினை முன்னிடாதபோது இதனால் இவர்களது உரிமை களை விட்டுக் கொடுக்கும் நிலை ஏற்படுத்தப் படும் அதாவது எழுத்துமூல விவர உரையை முன்னிடாது விட்டு விடும் நிலை. இதில் 120 நாட்களுக்குள் எழுத்து மூல விவர அறிக்கை யினை முன்னிடாதபோது இதனால் இவர்களது உரிமைகளை விட்டுக் கொடுக்கும் நிலை ஏற்படுத்தப்படும். அதாவது எழுத்து மூல விவர உரையை முன்னிடாது விட்டு விடும் நிலை. இதில் 120 நாட்களுக்குள் எழுத்து மூல விவர உரையை முன்னிடாதது தொடர்பான கடும் பாதிப்புகள் ஏற்படும்போது, வாதி அல்லது விசாரணை நீதிமன்றம். இதில் எதிர்வாதிகள் இந்த வாதுரைகளை புரிந்து கொண்டதாக கூறப்படக் கேட்க முடியாது மற்றும் இவர்கள் இதனை ஒரு வணிக வழக்காக பாதித்திருத்தல் வேண்டும் அதற்கிணங்க செயற்பட்டு இருத்தல் வேண்டும்.

30. நீதிமன்றம் இதனை குறிப்பாக தெளிவாக்காதபோது இந்த வழக்கு வணிக நீதிமன்றங்கள் சட்டத்தின்படி தொடங்கப்பட்டது. இதற்கான பழியை எதிர்வாதிகள் மீது போடுதல் ஆகாது. அதாவது இவர்கள் மூல வாதுரையை ஆய்வு செய்யவில்லை என்று. அதன்படி இந்த வழக்கு ஒரு வணிக வழக்கா? இல்லையா? என்று அதன் தன்மையை அறிவதில், தூத்துக்குடியில் உள்ள முதன்மை மாவட்ட நீதிமன்றம் சாதாரண வழக்குகளையும் வணிக வழக்குகளையும் ஏற்று விசாரிக்கும்போது, எதிர்வாதிகளை பழி சுமத்த முடியாது. சார்வு செய்யப்பட்ட வாதுரை மற்றும் அழைப்பாணை களில் இந்த வழக்கு ஒரு வணிக வழக்கு என்று குறிப்பிடவில்லை.

31. எதிர்வழக்கீட்டாளருக்காக முன்னிலை யாகிற வழக்கறிஞர், வாதுரையின் பத்தி எண் 7இனை ஆதாரமாகக் கொண்டு வாதிட்டதாவது வாதி 24 வட்டியினை கோரியது. இது ஒரு வணிக நடவடிக்கை என்பதால் எனினும் பத்தி எண் 9 வாதுரையில் காணப்படுவது வாதி தனது வட்டிக் கோரிக்கையினை 12 சதவீதத்துக்கு குறைத்துள்ளார் என்பது. எனவே சொல்லப்பட்ட வாதம் வாதிக்கு எந்த விதத்திலும் உதவாது எதிர்வாதிகள் அந்த வழக்கின் பொருண்மையின் படி அது ஒரு வணிக வழக்காக முன்னிடப் பட்டதை அறிவர்.

32. பொருண்மைப்படி வாதி வாதுரைகளை சரிபார்த்தலுக்காக எதனையும் முன்னிட வில்லை. அதாவது உ.வி.தொ.ச.இன் கட்டளை 6 விதி 15(அ)இனால் எதிர்பார்க்கப்பட்டவாறு (ஒரு வணிக வழக்கிற்கு பொருந்துகிற வகையில்) இது பற்றி வாதுரையில் குறிப்பிடப்பட்டிருக்குமானால் எதிர்வாதிகள் இந்த பொருண்மை பற்றி அறிந்திருப்பர். அந்த வழக்கானது ஓர் வணிக வழக்காக முன்னிடப்பட்டுள்ளது என்பதை.

33. (ஆ) குறிப்பேட்டினைக் கூர்ந்தாய்வு செய்வதில், வாதுரையின் குறிப்புகளில் அறியப் படுவதாவது, எதிர்வாதிகள் எழுத்து மூல விவர உரையினை அலுவலகத்தில் 21.2.2020 அன்று முன்னிட்டுள்ளார் என்பது அதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், சிரங்கதாரர் அந்த முதன்மை அதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் சிரங்கதாரர் அந்த முதன்மை மாவட்ட நீதிமன்றம் தூத்துக்குடியிலிருந்து வாதிக்காக முன்னிலையாகிற வழக்கறிஞருக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார் மற்றும் எதிர்வாதிகள்

குறிப்பிட்டுள்ளதாவது கு.வ.எண் 88/2014இன் நடவடிக்கைகள் அதே எண்ணில் தொடரும் என்றும் அவை வணிக நீதிமன்றங்கள் சட்டப்படி நடைபெறும் என்பதும் அறிவிப்பானது, சிரங்தாரால் தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிபதியால் அளிக்கப்பட்ட ஆணை மூலமாக, சொல்லப்பட்ட வழக்கை நீதிமன்றம், ஒரு வணிக வழக்காக எண்ணிடவில்லை. வ.மு.வ.எண் 88/2019, இதனை பிற வணிக வழக்குகள் அல்லாத வழக்குகளைப் போல் மு.வ.எண் 88/2019 என்று எண்ணிட்டிருந்தது. நீதிமன்றத்தின் தரப்பிலான இந்த தவறை சரி செய்வதற்காகவே 6.2.2023 அன்று அறிக்கை அளிக்கப்பட்டது. தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தி லிருந்து சிரங்கதாரர் மூலமாக, நீதிபதியின் ஆணைகளின்படி. எனவே, இதில் தெளிவாக்கப் படுவதாவது, விசாரணை நீதிமன்றம், முதன் முறையாக அகன்ற தவறை ஏற்றுக் கொண்டு உள்ளது என்பது தெளிவாகிறது. எதிர்வாதி களுக்கு அறிவிப்பு அளிக்கப்பட்டது. அதாவது இதற்குப் பின்னர் வழக்கானது வணிக நீதிமன்றங்கள் சட்டத்தின்படி தொடரப்படும் என்பதாக.

34. உச்ச நீதிமன்றம் ஜஸ்சிங் –எதிர்– ரிஸ்லால் மற்றும் பிறர், பின்வருமாறு கூறப் பட்டுள்ளது.

“6. இதில் தெளிவாக்கப்படுவதாவது, இதில் தவறு ஒன்று ஏற்படுமானால் அதற்கு நீதிமன்ற அலுவலர்களே பெரும்பாலும் காரணமாக இருப்பார்கள். இதில் ஐயமின்றி உள்ள உண்மை யாவது வழக்கிடுபவர் இது பற்றி விழிப்புணர்வு டன் இருத்தல் அவசியம். ஆனால் வழக்கிடுபவர் நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத்தின் உதவியை நாடும்போது, இதன் மூலம் அந்த தீர்ப்பாணையின் படியான கடமைப் பொறுப்பானது நிறைவேற்றப்படுகிறது. அவரால் கட்டாயமாக நீதிமன்றத்தின்பேரில் அங்கு வருபவர்கள் இது பற்றி அவர்களது விருப்பப்படி செயற்பட்டு சரியான பொருட்பாடுகளை அளிப்பதை உறுதி செய்தல் வேண்டும். இதில் நீதிமன்றம் செய்தியை அளிப்பதில் தவறு செய்யுமானால், இதன் பொறுப்பை வழக்கீட்டாளர் அடைவார். அவரது பொறுப்பு நீங்காது. இது நீதிமன்றத்தை பங்கேற்கப்படும். வழக்கிடுபவர் நீதிமன்றத்தால் அளிக்கப்படும் செய்திகளுக்க அவர் பொறுப்பாக மாட்டார் என்னும் நம்பிக்கையில் செயற்படு மானால், அதுவும் அதனால் செய்யப்பட்ட தவறு தொடர்பாக, அப்போது நீதிமன்றத்தின் வழி காட்டுதல் நெறிமுறைக்கு மேலானது இல்லை. இதில் நீதிமன்ற செயற்பாடு எதுவும் வழக்கிடு பவனுக்குவாறு இழைத்தல் ஆகாது மற்றும் இது நீதிமன்றத்தின் கட்டாயக் கடமை, நீதிமன்றத்தின் தவறால் ஒருவர் கேடுவாரானால், அவருக்கு பழைய நிலையைப் பெற்றுத் தருவது நீதிமன்றக் கடமையாகும். அதாவது அந்த தவறு காரண மாக, இது பற்றி இங்கு விளக்கப்பட்டுள்ளது.

35. விசாரணை நீதிமன்றம், அது எண்ணிடும் நிலையில் அல்லது அழைப்பாணைப் பிறப்பிக்கும் நிலையில், அல்லது எதிர்வாதிகள் தோன்றிய பின்னர், எதிர்வாதிகளுக்கு அந்த வழக்கின் பொருண்மைகளைப் பற்றி அதாவது வழக்கானது. வணிக நீதிமன்றங்கள் சட்டத்தின் வகைமுறை களின்படி, தொடுக்கப்பட்டுள்ளதாக எந்த தகவலையும் கூறவில்லை. மூன்று ஆண்டு களுக்குப் பின்னர் எதிர்வாதிகள் எந்த எழுத்து மூல விவர உரையினை முன்னிட்டுள்ளனர். நீதிமன்றமானது, அறுதியாக தெரிவித்துள்ள தாவது, எதிர்வாதிகளுக்கு, அந்த வழக்கின் மேலுமான நடவடிக்கைகள் மு.வ.எண் 88/2019 என்பதைக் கொண்டே வணிகநீதிமன்றங்கள் சட்டப்படி வழக்கு தொடர்ந்து நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் நீதிமன்றத்தால் இழைக்கப்பட்ட தவறு என்பதற் காக எதிர்வாதிகள் அவர்களது உரிமையான எழுத்து மூல விவர உரை முன்னிடுவதை விட்டுக் கொடுக்க இயலாது. அந்த எதிர்ப்புக்குள்ளாக்கப் பட்ட ஆணையிலும் பத்தி எண் 10இல் நீதிமன்றமானது குறிப்பிட்டுள்ளதாவது இன்று வரை இந்த வழக்கின் எண் மு.வ.எண் 88/2019, மற்றும் அது வ.மு.வ.எண் 88/2019 அன்று என்று கூறியுள்ளது.

36. மேற்சொல்லப்பட்ட பொருண்மைகளின் கருத்தில் எதிர்வாதிகள் இதற்கு பொறுப்பாக்கப் பட முடியாது. அதாவது அவர்கள் இந்த வழக்கை ஒரு வணிக வழக்காக ஊகிக்காததற்காக மற்றும் 120 நாட்களுக்குள் எழுத்து மூல விவர உரையினை முன்னிடாததற்கும் பொருண்மை யின்படி எதிர்வாதிகள் தவறாக வழி நடத்தப் பட்டனர். அதாவது நீதிமன்ற நடவடிக்கைகள் மூலமாக அத்தகைய சூழ்நிலைகளில், எதிர் வாதிகள் அவர்களது உரிமையைத் துறப்பு நீதிபடியாகாது. அதாவது வழக்கை எதிர்ப்பதற் காக எழுத்து மூல விவர உரையை முன்னிட்டு எதிர்ப்பது.

37. உரிமையியல் தொடர்பான சட்டத்தின் கட்டளை 7இன் விதி 11இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பத்தினைப் பொறுத்தவரை எதிர்வாதிகள் தொடர்பாக, வாதுரை தெளிவாகத் தெரிவிப்பதாவது தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிபதியினால் அதன் அதிகார வரம்பிற்குள் நடவடிக்கைகள் நடைபெற்று ள்ளன. எனவே, இந்த நீதிமன்றம் மு.மே.எண் 2/2019இல் விசாரணை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் இடையீடு செய்ய எந்தக் காரணமும் இந்த நீதிமன்றம் கண்டறியவில்லை.

38. மேற்சொல்லப்பட்டவற்றின் கருத்தில் இந்த நீதிமன்றம் பின்வரும் கட்டளைகளைப் பிறப்பிக்காது.

(அ) விசாரணை நீதிமன்ற எதிர்ப்புக்குள்ளாக்கப் பட்ட ஆணை மு.மே.எண் 2/2019இல் இதன் மூலம் உ.சீ.ம.(MD) எண் 7/2025இல் உறுதி செய்யப்படுகிறது. இது தள்ளுபடி செய்யப் படுகிறது.

(ஆ) எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட விசாரணை நீதிமன்ற ஆணை மு.மே.எண் 9/2011. இதன் மூலம் தள்ளுபடி செய்யப்படுகிறது மற்றும் உ.சீ.ம. (MD) எண் 8/2025 அனுமதிக்கப் படுகிறது. செலவுத் தொகையின்றி, இதன் விளைவாக தொடர்புடைய பல்வகை மனுக்கள் முடிக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச் சட்டத்தின் புதிய பிரிவு 7(C) ஆனது பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒரு முக்கிய தடுப்பு கருவியாக விளங்குகிறது

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் வெளியிட்ட செய்திக்குப்பில் கூறியிருப்பதாவது

பெண்கள் மீதான தொடர்ச்சியான தொல்லை மற்றும் அச்சுறுத்தல்களை தடுக்கும் நோக்கில், தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச் சட்டத்தின் (TNPHW Act) புதிய திருத்தமான (Amendment) பிரிவு 7(C) ஆனது அமல்படுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எதிராக தொடர்ச்சி யான தொல்லை மற்றும் அச்சுறுத்தல் களில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக, நிர்வாகத்துறை நடுவர்களால் பாதுகாப்பு ஆணைகள் Protection Orders) வழங்கப்படுகின்றன.

மேற்சொன்ன பிரிவின் வழிமுறைகளை பயன்படுத்தி, திருநெல்வேலி மாவட்ட காவல் அலுவலர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் அடிப்படையில், திருநெல்வேலி கோட்டாட்சி யரால் பின்வரும் நபர்களுக்கு எதிராக ஒரு வருடத்திற்கான பாதுகாப்பு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சுத்தமல்லி காவல் நிலையம்–மூன்று நபர்கள், சீதபற்ப நல்லூர் காவல் நிலையம் – ஒரு நபர், சிவந்திபட்டி காவல் நிலையம் ஒரு நபர்.

இந்த பாதுகாப்பு ஆணைகள் அமலில் உள்ள காலத்தில் மேற்சொன்ன நபர்கள் மீண்டும் பாதிக்கப்பட்ட பெண்களை பின் தொடர்ந்து சென்றாலோ, தொந்தரவு செய்தாலோ, அச்சுறுத்தல் செய்தாலோ அல்லது வேறு எந்த வகையிலாவது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அப்பெண்ணுக்கு தொல்லை செய்தாலோ அல்லது இணைய வழி மூலம் அப்பெண்ணை பின் தொடர்ந்தாலோ, தொடர்பு கொண்டாலோ அல்லது தொந்தரவு செய்யும் விதத்தில் நடந்து கொண்டால், அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், ரூ.1 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படலாம் என்ற வகையில் சட்டத்தின் தீர்வுகள் உள்ளன.

**நன்றி: தினந்தந்தி 26.12.2025**

# பொது நிதியை 'சலுகை பெற்ற சிலருக்கு' வழங்க முடியாது: அரசு வழக்குகளுக்கு செலவிடும் 'அளவுக்கு அதிகமான' கட்டணங்கள் தணிக்கை செய்யப்பட வேண்டும்

**சென்னை உயர்நீதிமன்றம் - மதுரை அமர்வு**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.ஜி.ஆர்.சுவாமிநாதன்**
**நீ.பே.(மஅ) எண் 26707/2022**
**நீபே இவம (மஅ) எண் 20921/2022**
**நாள் 19-12-2025**

**பி. திருமலை ... மனுதாரர்**

**-எதிர்-**

**மதுரை மாநகராட்சி,**
**அதன் ஆணையர் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.**
**தல்லாகுளம், மதுரை - 625 002. ... எதிர்மனுதாரர்**

**வேண்டுகை**: இந்திய அரசியலமைப்பின் 226-வது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த நீதிப்பேராணை மனுவானது, எதிர்மனு தாரர் தனது செயல்முறைகளில் (Ma.Sa.1/9106/ 2006) 14.07.2008 அன்று பிறப்பித்த அரசாணையை ரத்து செய்யக் கோரியும், அதன் தொடர்ச்சியாக மனுதாரரின் உரிமைக் கோரிக்கை தொகையான ரூ.13,05,770/- (ரூபாய் பதிமூன்று லட்சத்து ஐந்தாயிரத்து எழுநூற்று எழுபது மட்டும்) மதிப்பிலான தொகையை ஆண்டுக்கு 18% வட்டியுடன், இந்த நீதிமன்றம் நிர்ணயிக்கும் காலக்கெடுவுக்குள் வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**திரு.பி.விஜய் கார்த்திகேயன்**
மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்:

**திரு.எஸ்.விநாயக், நிலை வழக்கறிஞர்.**
எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்

## தீர்ப்பு:

'தொழிலாளியின் வேர்வை காயும் முன்பே அவருக்குரிய கூலியைக் கொடுத்துவிடுங்கள்' என்பது நபிகள் நாயகம் அவர்கள் தெரிவித்த தாகச் சொல்லப்படும் அறிவுரையாகும்.

2. இந்தத் தத்துவமானது நேர்மையின் ஒரு பரிமாணமாகும், மேலும் இது தொழிலாளர் நலச் சட்டவியலில் மிகச்சிறந்த முறையில் பொருந்தக்கூடியது. தற்போதைய வழக்கிலும் இதனைப் பயன்படுத்த முடியும்.

3. இந்த நீதிப்பேராணை மனுதாரர், 1992 முதல் 2006 வரை 14 ஆண்டுகளுக்கும் மேலாக மதுரை மாநகராட்சியின் அங்கீகரிக்கப் பட்ட நிறுவன வழக்கறிஞராக பணியாற்றியவர். மதுரை மாவட்ட நீதிமன்றங்களில் மாநகராட்சி சார்பாக அவர் முன்னிலையாகியுள்ளார். மாநகராட்சி தனது கட்டணப் நிலுவைத் தொகையை வழங்கவில்லை என்பது அவரது குறையாகும். எனவே, அவர் கட்டணம் கோரி நீ.பே.(மஅ) எண்.9282/2006 என்ற மனுவைத் தாக்கல் செய்தார். அந்த மனுவை 14.11.2006 அன்று விசாரித்த நீதிமன்றம், அவரது கோரிக்கையைப் பரிசீலித்து உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டது. அந்த உத்தரவின் தொடர்ச்சி யாகவே தற்போது எதிர்க்கப்பட்டுள்ள இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இதனை எதிர்த்து இந்த நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. மனுதாரரின் கூற்றுப்படி, மாநகராட்சி அவருக்கு ரூ.14,07,807/- வழங்க வேண்டும். ஆனால் மாநகராட்சி ரூ. 1,02,037/- மட்டுமே வழங்கியுள்ளது, மீதமுள்ள ரூ.13,05,770/- நிலுவையில் உள்ளது.

4. எதிர்மனுதாரர் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மதுரை மாநகராட்சி

சார்பில் ஆஜரான வழக்கறிஞர், மனுதாரரின் கட்டணக் கோரிக்கைகள் முறையாக இருக்கும் பட்சத்தில், உள்ளாட்சி அமைப்பு அதனை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். கட்டணப் பட்டியல்களுடன் தீர்ப்பு மற்றும் ஆணைகளின் நகல்களும் இணைக்கப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார். பதில் மனுவின் 6-வது பத்தியில், தீர்ப்புகளை உரிய நேரத்தில் சமர்ப்பிக்காத காரணத்தால், சில குறிப்பிட்ட வழக்குகளில், குறிப்பாகப் பொது ஏல வழக்குகளில் மாநகராட்சிக்கு பெரும் இழப்பு ஏற்பட்டதாகவும், அதன் காரணமாகவே மனுதாரர் வழக்கறிஞர் குழுவிலிருந்து நீக்கப் பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. தீர்ப்பு நகல் களைச் சமர்ப்பிக்காத காரணத்தால், மனுதார ருக்கு நிலுவைத் தொகையை வழங்க மாநகராட்சியால் இயலவில்லை என சொல்லப் பட்டது.

5. இருதரப்பு வாதங்களையும் நான் கவன மாகப் பரிசீலித்தேன் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்தேன். மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் திரு.பி.விஜய் கார்த்திகேயன், மனுதாரர் ஆஜரானதாகக் கூறப்படும் 818 வழக்குகளின் பட்டியலைச் சமர்ப்பித்தார். அந்த வழக்குகள் அனைத்திலும் சான்றளிக்கப்பட்ட நகல்களை பெற்று மாநகராட்சியிடம் ஒப்படைப்பதில் என்ன சிக்கல் என்று நான் அறிய விரும்பினேன். அதற்கு மனுதாரரின் வழக்கறிஞர், மனுதாரர் தற்போது மிகவும் வறுமையான நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார். சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்காக ஒரு வழக்கறிஞர் எழுத்தரை மனுதாரர் அணுகியபோது, அவர் ஒவ்வொரு நகலுக்கும் ரூ. 750/- கேட்டதாகக் கூறப்படுகிறது. அந்தத் தொகையைச் செலுத்தும் நிலையில் மனுதாரர் இல்லை.

6. மனுதாரரின் நிதி நிலைமை குறித்து என் முன் வைக்கப்பட்ட வாதங்கள் உண்மை யானவை என்ற அடிப்படையிலேயே நான் தொடர் நடவடிக்கைக்கு நகர்கிறேன்.. எது எப்படியிருந்தாலும், தான் ஆஜரான 818 வழக்குகளுக்கான சான்றளிக்கப்பட்ட நகல் களைப் பெறுவதற்கு ஒரு எழுத்தாளரைக்கூட பணியமர்த்த இயலாத நிலையில் இருப்பதாக ஒரு வழக்கறிஞர் கூறும் கூற்றை நான் சந்தேகிக்க விரும்பவில்லை.

7. எனவே, மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் அல்லது செயலாளரை அணுகி, தான் ஆஜரான வழக்குகளின் பட்டியலை ஒப்படைக்க மனுதாரருக்கு நான் அனுமதி அளிக்கிறேன். மனுதாரர் அளிக்கும் அந்தப் பட்டியலைச் சரிபார்க்குமாறு சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் தலைவர்/செயலாளருக்கு உத்தரவிடப் படுகிறது. அந்த வழக்குகளில் மனுதாரர் ஆஜராகியுள்ளார் என்பதை உறுதி செய்தவுடன், சட்டப்பணிகள் ஆணைக்குழு அதற்கான சான்ற ளிக்கப்பட்ட நகல்களைப் பெற ஏற்பாடு செய்து, அவற்றை மனுதாரரிடம் வழங்க வேண்டும். இந்த உத்தரவின் நகல் கிடைக்கப் பெற்ற இரண்டு மாத காலத்திற்குள் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்பின்பு, சட்டப்பணிகள் ஆணைக்குழு வழங்கிய நகல் களை இணைத்து மனுதாரர் தனது கட்டணப் பட்டியல்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மதுரை மாநகராட்சி, அதன் பிறகு இரண்டு மாத காலத்திற்குள் அந்தக் கட்டணப் பட்டியல்களை வட்டி இல்லாமல் தீர்வு செய்ய வேண்டும். மனுதாரர் 18 ஆண்டுகள் தாமதத்திற்குப் பிறகு இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளதால் வட்டி மறுக்கப்படுகிறது. இரண்டாவதாக, கட்டணப் பட்டியல்கள் முறையாகச் சமர்ப்பிக்கப்படாத போது, பணம் செலுத்தாததற்காக மாநகராட்சியைக் குற்றம் சொல்ல முடியாது.

8. சான்றளிக்கப்பட்ட நகல்களை வழங்கு வதற்காக ஆன செலவுகளுக்குச் சட்டப்பணிகள் ஆணைக்குழு ஒரு விலைப்பட்டியலை தயார் செய்யலாம். அந்த விலைப்பட்டியலும் கட்டணப் பட்டியல்களுடன் இணைக்கப்பட வேண்டும். மதுரை மாநகராட்சி அந்தத் தொகையை நேரடி யாகச் சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டும். மனுதாரரின் கட்டணப் பட்டியலிலிருந்து இந்தத் தொகையை முறைப் படி கழித்த பிறகு மீதித் தொகை அவருக்கு வழங்கப்பட வேண்டும்.

9. மனுதாரர் ஆஜரான வழக்குகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது, அவரது மொத்தக் கோரிக்கை மிகச் சொற்பமான தாகவேத் தெரிகிறது. நடைமுறைச் சிக்கல் களைக் சுட்டிக்காட்டி பணம் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்

உள்ளிட்ட நீதி போல் அரசு நிறுவனங்கள் சில சட்ட அதிகாரிகளுக்கும் மூத்த வழக்கறிஞர் களுக்கும் வழங்கும் அதிர்ச்சியூட்டும் வகை யிலான அதிகப்படியான கட்டணங்களைக் கண்டு நான் வியக்காமல் இருக்க முடிய வில்லை. ஒரு உதாரணத்தைக் குறிப்பிடுகிறேன். மதுரை காமராசர் பல்கலைக்கழகம் கடும் நிதி நெருக்கடியில் உள்ளது. ஓய்வுபெற்ற பணியாளர்கள் தாக்கல் செய்த குறைந்தது ஒரு டஜன் நீதிப் பேராணை மனுக்களை நானே விசாரித்து உள்ளேன். அந்தப் பல்கலைக்கழகம் ஒரு குறிப்பிட்ட மூத்த வழக்கறிஞருக்கு ஒருமுறை வழக்கை வாதாடுவதற்கு ரூ.4,00,000/- கட்டணமாக வழங்கியதாக எனக்குத் தெரிவிக்கப் பட்டது. ஓய்வு பெற்ற பணியாளர்களின் நிலுவைத் தொகையை வழங்க முடியாத அளவுக்கு நிதி நிலைமை மோசமாக இருப்பதாகக் கூறும் பல்கலைக் கழகத்திற்கு, தனது வழக்கறிஞருக்கு இவ்வளவு அதிகப்படியான கட்டணத்தை வழங்குவதில் எந்தச் சிரமமும் இல்லை. மிகச் சாதாரணமான வழக்குகளில் கூட, ஒரு புதிய அரசு வழக்கறிஞரே கையாளக்கூடிய விஷயங் களில் கூட, கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர்கள் ஆஜராகிறார்கள். இதெல்லாம் சில சில்லறைக் காசுகளுக்காக. ஆஜராவதைக் குறிப்பது என்பது பணத்தைப் பொறுத்த விஷயமாகி விட்டது. சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் கட்டணங்கள் குறித்து ஒரு தணிக்கை செய்யப் பட வேண்டிய நேரம் இது. மத்தியப் பிரதேச செவிலியர் பதிவு கவுன்சில் மூலம் அம்மாநில அரசு தலைமை வழக்கறிஞருக்கு வழங்கப்பட்ட அதிகப்படியான கட்டணம் குறித்து விசாரணை நடத்த அண்மையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது என்பதை நான் அறிவேன். மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர்களுக்கு வழங்கப்படும் கட்டணத்தின் அளவு குறித்து நீதிமன்றங்கள் விசாரிக்க முடியாது என்றாலும், பொதுக் கருவூலத்திலிருந்து நிதி எடுக்கப்படும் போது அது அளவோடும் முறையோடும் இருக்க வேண்டுமே தவிர, தங்களுக்கு விருப்பமான சிலருக்கு தாராளமாக வாரி வழங்கப்படக் கூடாது என்பதே நல்லாட்சிக்கு அழகாகும். மேலும், மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ்.எம்.சுப்பிர மணியம் அவர்கள் தலைமையிலான அமர்வு, அனைத்து வழக்குகளிலும் கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர்கள் ஆஜராக முடியாது என்று சமீபத்தில் சுட்டிக்காட்டியுள்ளதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவர்களின் இருப்பு அவசியமானதாக இருக்க வேண்டும். வழக்கின் தன்மை அவர்கள் ஆஜராவதை நியாயப்படுத்த வேண்டும். பல்வேறு தரப்பினரைத் திருப்திப் படுத்துவதற்காக, ஆளும் அரசுகள் தேவையற்ற எண்ணிக்கையில் சட்ட அதிகாரிகளை நியமிக் கின்றன. தமிழ்நாடு மாநிலத்தில் கிட்டத்தட்ட ஒரு டஜன் கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர்கள் இருப்பது சங்கடத்திற்குரிய விஷயம். நான் 1991-ல் வழக்கறிஞர் தொழிலுக்கு வந்த போது, ஒரு அரசு தலைமை வழக்கறிஞர் மட்டுமே இருந்தார். அப்போது கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர்களே கிடையாது. அளவுக்கு அதிகமானவர்கள் நியமிக்கப்படும் போது, அவர்களுக்கு வேலை கொடுத்தாக வேண்டும். இது அவர்களின் தேவையே இல்லாத வழக்குகளையும் அவர்களுக்கு ஒதுக்கு வதற்கு வழிவகுக்கிறது. வழக்குகள் விசாரணைக்கு வரும்போது, கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் நியமிக்கப்பட்டுள்ளார், ஆனால் அவர் வேறு நீதிமன்றத்தில் இருக்கிறார் என்ற காரணத்தைக் கூறி அரசு வழக்கறிஞர் ஒத்தி வைப்பு கோருகிறார். சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையிலாவது இத்தகைய நடைமுறைகள் முடிவுக்கு வரும் என்றும், 2026-ஆம் ஆண்டிலிருந்து கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர்கள் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குவார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

10. இந்த நிலை குறித்து நான் மட்டும் வருத்தம் தெரிவிக்கவில்லை. அலகாபாத் உயர்நீதிமன்றமும் இதே போன்ற கருத்தைத் தெரிவித்ததுடன், ஒரு படி மேலே சென்று இவ் விவகாரத்தை உத்திரப் பிரதேச அமைச்சரவை யின் முன் வைக்குமாறு உத்தரவிட்டது (2022 LiveLaw (AB) 271 (இஷான் இன்டர்நேஷனல் எஜுகேஷனல் சொசைட்டி, சார்பாற்றம் அதன் இயக்அனர் -எதிர்- ஸ்ரீமுகுல் சிங்கால், முதன்மை செயலாளர்)

11. இந்த நீதிப்பேராணை மனு அதற்கேற்ப தீர்வு செய்யப்படுகிறது. செலவுத் தொகை ஏதுமில்லை. அதன் விளைவாக, இதனுடன் தொடர்புடைய இதர மனுக்கள் முடிக்கப் படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# உரிமையியல் தொடர்பான சட்டப் பிரிவு 92லிருந்து அதிகார எல்லை

சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்)
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.ஜி.ஆர்.சுவாமிநாதன்
உ.சீ.ம. (MD) எண் 808/2021, உ.ப.ம. (MD) எண் 4374/2021
நாள்: 19.10.2024

ரெவரன்ட் பாதர் சவரிமுத்து (இறப்பு 1. மரியா செல்வம் 2. மரியகிரிஸ்டி
...மனுதாரர்கள்

–எதிர்–

வி.எஸ். ஜெயபாண்டி 2. பி.ஜெரால்டு மைக்கேல்ராஜ் 3. ஆர்.ஜெயகுமார்
...எதிர்வழக்கீட்டாளர்கள்

**டி.ஏ. எபிநேசர்**
மனுதாரர்களின் வழக்கறிஞர்

**ஜி. கர்ணம்**
எதிர்வழக்கீட்டாளர்களின் வழக்கறிஞர்

உ.சீ.ம. அனுமதிக்கப்பட்டது. ப.ம. முடிக்கப் பட்டது.

**கோரிக்கை** : உரிமையியல் சீராய்வு மனு இந்திய அரசமைப்பின் 227ஆம் உறுப்பின்படி முன்னிடப்பட்டது. மு.மே.எண் 14/2015இன் ஆணையை தள்ளுபடி செய்ய கோரப்பட்டது. எண்ணிடப்படாத வழக்கு 2015. இது தஞ்சாவூரில் 31.3.2021 தேதியிடப்பட்டு முதன்மை மாவட்ட நீதிபதியின் கோப்பில் தஞ்சாவூரில் உள்ளது.

## தீர்ப்பு

1. எதிர்வழக்கீட்டாளர்கள் இதில் கட்டளை 7 விதி 1 உடன் சேர்த்து வாசிக்கப்படுகிற உரிமையியல் தொடர்பான சட்டப் பிரிவு 92இன் படி வழக்குகளை முன்னிட்டு மாதா அறக்கட்டளை மருதாநல்லூர், கும்பகோணத்தில் அதன் நிர்வாக திட்டத்தினை சீர் செய்ய வழக்கீட்டனர். இது கட்டளை ஆவணம் கொண்டது. தேதி 22.12.1999 அந்த சுய வழக்கை ஏற்றுக் கொள்ள அனுமதி பெற வேண்டும். இவர்கள் I.A. எண் 14/2015 முன்னிட்டனர். அறிவிப்புக்கு ஆணையிடப்பட்டது. அது 31.3.2021 தேதியிடப் பட்டது. இதனைக் கேள்வியாக்கி உரிமையியல் சீராய்வு மனு முன்னிடப்பட்டது.

2.இடைநிலை விண்ணப்பம் அனுமதிக்கப் படவில்லை. இதற்கான 2 காரணங்கள் முதலாவதாக மாதா அறக்கட்டளை ஒரு எதிர்வழக் கீட்டாளராக இடையீட்டாளராகச் சேர்க்கப்பட வில்லை. இரண்டாவதாக வாதுரை ஒரு வாதம் வைக்கப்பட்டதோடு அதுவே உறுதியுரை யிலும் ஆதரவாக கூறப்பட்டது. அவர்கள் அறக்கட்டளை யின் நலம் பெறுபவர்கள் என்றும் விண்ணப்ப தாரர்கள் எவ்வாறு அறக்கட்டளையில் உரித்தம் கொண்டவர்கள் என்பதைக் காட்டவில்லை.

3. மேற்சொல்லப்பட்ட பிரச்சினைகள் இந்த பொருட்பாட்டின் வேர்னா சென்னவாகும் மற்றும் எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணை உ.வ.தொ. ச.இன் 92ஆம் பிரிவின்படி அனுமதி வழங்கப் பட்டது. நேரடியாக தள்ளுபடி செய்யப்படத்தக்கது. நான் அவ்வாறு செய்ய இருந்தபோது, எதிர் வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளித்த தாவது, எனது கைகள் கட்டப்பட்டுள்ளன. ஏனெனில் உரிமையியல் சீராய்வு மனுவே செல்லத்தக்கதல்ல என்பது அவர் வாதமாவது வழக்கின் சட்டம், சென்னை உயர்நீதிமன்றத்தில் பலமுறை கூறியுள்ளதாவது உ.வி.தொ.ச.இன் 92ஆம் பிரிவின்படி அனுமதி வழங்குவது ஒரு நிர்வாக ஆணையம் மட்டுமே, அது ஒரு நீதிமுறை ஆணை அன்று என்பதை. எனவே அதனை எதிர்ப்புக்கானதாக எடுக்க முடியாது. அதாவது உரிமையியல் தொடர்பான சட்டம் 115ஆம் பிரிவின் படி அல்லது இந்திய அரசமைப்பின் 227ஆம் உறுப்பின்படி.

4. இதில் உண்மை நிலை ஜி.ஆர்.கோவிந்த ராஜுலு அண்டு சன்ஸ் அறக்கொடை, கோயம்புத்தூர்

மற்றும் 2 பிறர். வி.வி.ஆர்.சேதுராவ் மற்றும் பிறர் (12 பேர்), 1998 (2) த.த.வ. 65. இதில் கூறப்பட்டதாவது அனுமதி அளிப்பது. நீதிமன்றம் மூலம் தடை பெற்றாலும், இது சட்டப்படியல்ல. நீதிமன்றம் நிர்வாக பணியை செய்கிறது. இது நீதிமுறைப் பணியல்ல அல்லது பாதித்த முறையானது அல்ல. உரிமையியல் தொடர்பான சட்டப் பிரிவு 151 பொருந்தாது. எனவே சீராய்வு செல்லத்தக்கதல்ல. அதாவது அனுமதி அளிப்பு ஆணைக்கெதிராக.

5. மேற்சொல்லப்பட்ட தீர்ப்பு பின்வரும் வழக்குகளில் பின்பற்றப்பட்டன.

(i) அணைக்கடவு மாடமனை லத்திகாரர் குலாம் ஸ்ரீவெங்கடேச பெருமாள் திருக்கோவில் அறக்கட்டளை மற்றும் பிறர் –எதிர்– கே. தண்ட பாணி மற்றும் பிறர், 2009 (1) த.த.வ. 416.

(ii) எம். அஸாரியா –எதிர்– டி.டி. சுந்தரவரதன் 2009 உச்.நீ.வ. வலைதளம், சென். 1821

(iii) ஏ.ஜி. சையது மொய்தீன் –எதிர்– ஜெய ராம் கல்வி அறக்கட்டளை 2010 உச்.நீ.வ. வலைதளம் சென். 5618.

(iv) ஏ. விரிஷபதாஸ் –எதிர்– பி. ஜெயச் சந்திரன், 2011 உச்நீ.வ. வலைதளம் சென்.52

(v) ஸ்ரீ அரோபிந்தோ ஆசிரம அறக் கட்டளை மற்றும் பிறர், –எதிர்– எஸ். ராமநாதன் மற்றும் பிறர், 2013 (4) த.த.வ. 566,

(vi) ஒட்டக் கூத்தர் தொண்டு அறக்கட்டளை மற்றும் பிறர், –எதிர்– வி.தெய்வசிகாமணி மற்றும் பிறர் (MANU/TN/0966/2017).

மேற்சொல்லப்பட்ட ஆணைகள் அனைத்தும் மேதகு நீதியர் ஆயத்தினால் கூறப்பட்டவை. விகிதாச்சாரப்படி சென்னை உயர்நீதிமன்றத்தின் கூறப்பட்டவை. ஆர்.கண்ணன் ஆதித்யன் –எதிர்– பி.எஸ். ஆதித்யன் 1996 (2) ச.ப. 364.

6. ஆர்.கண்ணன் ஆதித்யன் –எதிர்– பி.எஸ்.ஆதித்யன் 1996 (2) LW 364 கேள்வியாகப் படாதவாறு உ.மே.எண்கள் 12915–20/ 1976. 16.4.2024 அன்று தீர்மானிக்கப் பட்டது. இதன் முடிபு பி.எஸ்.ஆதித்யன் –எதிர்– ராமச்சந்திரன் ஆதித்யன் 2004 (9) உச்.நீ.வ. 720. மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப் பட்டன. எனினும், தீர்ப்புகளின் கண்டறியப்பட்ட தாவது சில உயர்நீதிமன்றங்களில் உரிமை யியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி அனுமதியளிப்பது பற்றிய ஆணை நீதிமுறையில் சீராய்வுக்கு உட்படுத்தப்படலாம் என்பது. உச்சநீதிமன்றம் இதில் கூறப்பட்டதை ஆமோதிக்கவில்லை. ஆர்.கண்ணன் ஆதித்யன், பி.எஸ்.ஆதித்யன் அனுமதி வழங்கும் ஆணை நிர்வாகம் பற்றிய நிலையிலானது. வேறு வகையில் எந்தக் கண்டறிதலும் இல்லை. அதாவது உச்சநீதிமன்ற தீர்ப்பில் சாதாரண நிலையில், ஓர் ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்படுமானால், அதாவது உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி ஒரு தரப்பினருக்கு வழக்காக முன்னிட அனுமதி வழங்குவது. இதில் இடையீடு எதுவும் செய்வ தாகக் கொள்ளப்படாது.

சுவாமி சிவசங்கரகிரி செல்லுசாமி –எதிர்– சத்திய–– நிகேதன், 2017 (2) த.த.வ. 232, (உச்.நீ.) 2017 (1) (MWN) (உரிமையியல்) 569 (உச்.நீ.); 2017 (4) உச்.நீ.வ.771. இதில் உள்ள ஒரு வேறுபாட்டை கவனிக்க உள்ளது. அந்த வழக்கில், மாவட்ட நீதிபதி உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி அனுமதி வழங்கியுள்ளார். அது கேள்வியாக்கப் பட்டது. சீராய்வு மனுவை முன்னிட்டு உரிமை யியல் தொடர்பான சட்டத்தின் 115ஆம் பிரிவின்படி சீராய்வு மனு அளிக்கப்பட்டது. மூல விண்ணப்பதாரர்கள் உச்ச நீதிமன்றத்தின் முன்பு மேல்முறையீட்டை முன்னிட்டார். உச்சநீதிமன்றம் இதனை கவனித்தது வாதுரை முன்னிட்டதில் அனுமதி விண்ணப்பத்துடன் முன் கூட்டிய நிபந்தனை. இதில் வாதுரை இணைக்கப்பட வில்லை. இதில் கூறப்பட்டது. விசாரணை நீதிமன்றம் அனுமதி வழங்குவதில் தவறு செய்துள்ளதாக உச்ச நீதிமன்றம் கூறியதாவது நீதிமன்றமானது, பிரிவு 92இன்படியான விண்ணப்பத்துடன் வாதுரை இணைக்கப்பட்டு உள்ளதா என்று பார்க்க வேண்டியது சட்டக் கடமை என்று மற்றும் கூறியது உயர்நீதிமன்றம்

இந்த பொருண்மையை கவனிக்காது விட்டதில் தவறு செய்துள்ளது என்று, உயர்நீதிமன்ற ஆணை தள்ளுடி செய்யப்படவில்லை. அதாவது உரிமை வழக்கு மேல்முறையீட்டை வகை செய்யும்போது, உச்சநீதிமன்றம் இரு ஆணை களுக்கிடையேயான வேறுபாட்டை கவனத்திற் கொண்டிருந்தது. அதாவது நிர்வாக ஆணை மற்றும் நீதிமுறை ஆணை. இந்த வழக்கின் கூறப்பட்டதாவது மேல் முறையீட்டாளர்கள் சான்று என்னும் வகையில் தீர்மானிக்கப்பட வேண்டிய தாவது சிறப்பு வழக்கு 92ஆம் பிரிவின் படியானது அதன்படியான முழு நீதியின் முடிவு. மேல்முறை யீட்டாளர்களுக்கு உரிய விண்ணப்பத்தினை முன்னிட சுதந்திரம் உள்ளது. அதாவது சட்டத்திற் கிணங்க இதில் பணிக்கப்பட்டதாவது உரிமை யியல் நீதிமன்றங்கள் வழக்கு எதனையும் ஏற்க அதிகார வரம்பு கொண்டுள்ளபோது உரிமை யியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படியான விண்ணப்பத்தை முன்னிடு வதை கவனமாக விசாரிக்க எதிர்பார்க்கப் படுகிறது. இந்த முடிவினை கவனமாகப் படிப்பதில் இதில் எனக்கு எதிர்க்க முடியாது. முடிவு தோன்றுகிறது. உச்சநீதிமன்றமானது உட்கிடை யாக, உரிமையியல் சீராய்வு மனு முன்னிடப் படுவதை செல்லுந்தன்மையை ஆதரிக்கிறது என்பது. அதாவது உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி அனுமதி வழங்குகிற ஆணைக்கு எதிரான சீராய்வை அதாவது இந்தப் பொருண்மையிலிருந்து சான்றாகிறது. உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கும் ஆணையை தள்ளுபடி செய்வதை இடையீடு செய்யவில்லை என்பதால்.

8. குறைந்தது 3 வேறு உயர்நீதிமன்றங்கள், ஜி.ஆர்.கோவிந்தன் வழக்கு முடிவிற்கு மாறான கருத்தை எடுத்துள்ளனர். கேரளா உயர் நீதிமன்றம், தென்னிந்திய சர்ச் –எதிர்– ஜான் 2012 (2) கே.உ.ம. 502, கூறியதாவது, தொகுப்புச் சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி அனுமதிக்கிற ஆணை அல்லது ‘‘அனுமதி மறுக்கிற ஆணை ஒரு நிர்வாக ஆணை. அது நீதிமுறை சீராய்வுக்கு உட்படாது என்பதே தவறானது’’ அனுமதி வழங்கும்போது அனுமதி பெற்றது அறுதியானதாக இல்லாதபோதும், அது வழக்கில், எதிர்க்கக் கூடிய நிலை உள்ளது. இதில் பொருட்டான உரிமைகள் தரப்பினர் களுடையது பாதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் அல்லது மனுதாரர்களின் உரிமைகள். அதாவது அனுமதி கோருபவர்களின் உரிமை இது எதிரான விளைவை கொண்டது. அதாவது இது வழக்கை எதிர்கொள்வதற்கானது மற்றும் வழக்கில் உள்ள ஆணை இதன் தீர்மானிக்கும். இது பிற எதிர்ப்பு களுக்கும் தயாராக உள்ளது. அதாவது சீராய்வு என்னும் முறையில், அல்லது நேர்வுக்கேற்ப இந்திய அரசமைப்பின் 227ஆம் உறுப்பின்படி இதில் கண்டறியப்பட்டதாவது அனுமதி வழங்கப் பட்டது. 92 உரிமையியல் தொடர்பான சட்டத்தின் படி என்பது எந்திர கதியிலானது, இது வாதுரை யின் கூறப்பட்டதில் அடிப்படையிலானது. அதாவது விசாரணை எதுவுமின்றி அதாவது உண்மை நிலை அறியாதபோது மற்றும் வழக்கின் காரணம் இதன் மூடியுள்ள உட் பொருளை பிரிக்கச் செய்யும். இதில் பொது மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது. வீணான வழக்குகளில் அலைக்கழிக்கப்படும் விதமாக இல்லாதவாறு அளிக்கப்படும் பாதுகாப்பு.

9. கர்நாடகா உச்சநீதிமன்றம் ஸ்ரீமத் உஜ்ஜயினி சாதர்மா –எதிர்– ஸ்ரீ எஸ்.எஸ்.படேல் உ.சீ.ம. எண் 406/2021, 13.04.2023 தேதி யிடப்பட்டது. வெளிப்படையாக ஜி.ஆர்.கோவிந்த ராஜுலு வழக்கிலிருந்து ஆதித்யா –எதிர்– பி.எஸ்.ஆதித்யன் வழக்கில் இது உச்சநீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தது மற்றும் இது முடிவு செய்ததாவது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு படிக்கப் படுமானால், இதில் உச்சநீதிமன்றம் எந்த விகிதாச்சாரம் பற்றியும் கூறவில்லை. அதாவது உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படியான விண்ணப்பத்தின்பேரிலான முடிவு பற்றி. அதாவது இது நிர்வாகத் தன்மையது என்பது பற்றி. கர்நாடகா உ.நீ.ம. வித்யோதயா அறக் கட்டளை –எதிர்– மோகன் பிரசாத் மற்றும் பிறர், 2006 (2) உச்.நீ.வ. 452இல் அளிக்கப்பட்ட முடிவு பற்றி கவனித்து உள்ளது. மேற்சொல்லப்பட்ட முடிவில் உச்ச நீதிமன்றம் நிர்வாக ஆணை மற்றும் நீதிமுறை

ஆணைக்கான வேறுபாடு பற்றி கருதுகை செய்யவில்லை. இதில் கூறப்பட்ட தாவது சீராய்வு உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 115ஆம் பிரிவின்படி சீராய்வு செய்யத் தக்கதல்ல என்பது.

10. ஒரிசா உயர்நீதிமன்றம் கலிங்கா இன்ஸ்டிட்யூப் ஆஃப் மைனிங் என்ஜியரிங் அண்டு டெக்னாலஜி அறக்கட்டளை (KIMET) செந்திபாடா அங்குல் மற்றும் பிறர் –எதிர்– பிப்பின் பிஹாரி பெஹரா மற்றும் பிறர் 2023 (II) ILR-CUT 497. இதில் எடுக்கப்பட்ட கருத்து உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92(1)ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒரு நீதிமுறை ஆணை என்பது.

11. உச்சநீதிமன்ற 7 நீதிபதிகள் ஆயம் எஸ்.பி.ப்பி 2 நிறு. –எதிர்– பட்டேல் பொறியியல் வரையறுக்கப்பட்டது 2005 (5) த.த.வ. 302 (உச்.நீ.), 2005 (8) உச்.நீ.வ. 618, கூறிய தாவது. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியினால் அல்லது இந்தியாவின் தலைமை நீதிபதியினால் 11(6) பிரிவின்படி பொதுவர் மற்றும் தீர்வு சட்டம் 1996இன்படி பொதுவர் ஒருவரை அமர்த்துவது நீதிமுறை அதிகாரம் மற்றும் நிர்வாக அதிகாரம் அல்ல என்பது. பெரும் பாலான நீதிபதிகள் ஏற்றதாகக் கூறிய தாவது. முந்திய தீர்ப்பில் வெளியிடப்பட்டவை. சங்கர் லால் அகர்வால் மற்றும் பிறர் –எதிர்– சங்கர் லால் போடார் பிறர் அ.இ.அ.1965 உச்.நீ. 507. இதில் நிர்வாக மற்றும் நீதிமுறை ஆணை பற்றி பேசப்பட்டது. ஒரு நிர்வாக கண்காணிப்பு தொடர்பான பொருட்பாடுகள் பற்றியது. இது ஆணையிலிருந்து வேறுபடும். இதில் தரப்பினர் களின் உரிமைகள் தீர்மானிக்கப்படும் அல்லது சொத்து தொடர்பாக. உரிமைகளை அளிக்கும் அல்லது அளிக்க மறுக்கும். இவையே விசாரணைக்குரியவை நீதிமன்றத்தின் முன்பு இதில் உளத்தேர்வு என்பதில் மறுபயன் என்பது பொருட்டாக அமையும். இது நீதிமுறை முடிவு. இதில் அதிகாரம் நீதிமன்றத்தினால் உறுதி செய்யப்படுகிறது. இதில் வழக்கு உள்ளடங்கி யுள்ளது. போதிய மறுபயனும் உள்ளடக்கும். இவை முடிவாக இல்லாதபோதும் மேற்சொல்லப் பட்ட தேர்வுகளை நிகழ்த்துவதன் மூலம் நீதிமன்றம் கூறியதாவது 1996 பொதுவர் மற்றும் இணக்கத் தீர்வு உடன்பாடு சட்டத்தின் 11(6)பிரிவின்படி செலுத்தப்படும் அதிகாரம் நீதிமுறையிலானது நிர்வாகம் பற்றியதல்ல என்பது. இந்த முடிவு சட்டப்படி மேலோங்கி யுள்ளது. இதில் கூறப்பட்டவை இன்றும் பொருந்துவதாக உள்ளன. என்.என்.குளோபல் வணிகம் (தனி) வரம்பிடப்பட்ட –எதிர்– இந்தோ யுனிக் ப்ளோம் வரையறு பிறர், 2021 (7) த.த.வ. 868 (உச்.நீ.) 2023 (7) உச்.நீ.வ. (1).

12. இதோ நிலையினை ஏற்று ஒருவர் எளிதாக முடிவுக்கு வருவதாவது உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படியான அதிகாரம், நீதிமுறைபடியானது மற்றும் நிர்வாக முறையிலானதல்ல. முதலாவதாக இதில் அதிகாரம் உரிமையியல் நீதிமன்றத்தினால் உறுதி செய்யப்பட்டது. கட்டாயமாக, இதில் வழக்கு உள்ளடங்கியுள்ளது. இரண்டாவதாக, உரிமை யியல் நீதிமன்றத்தினால் உறுதி செய்யப்பட்டது. கட்டாயமாக இதில் வழக்கு உள்ளடங்கியுள்ளது. இரண்டாவதாக, உரிமையியல் நீதிமன்றம் அதன் உ.வி.தேர்தலை செயற்படுத்தும். அதாவது நிலையான ஆதாரங்கள்பேரில் பொருட்பாடு தரப்பினர்களின் உரிமைகளை உள்ளடக்கும். நீதியர் ஆயத் தீர்ப்பு ஆர்.கண்ணன் ஆதித்யன் வழக்கில் எதிர்க்கப்பட்டது. உச்சநீதிமன்றத்தின் முன்பு அனுமதி வழங்கப்பட்டு, தீர்ப்பு அளிக்கப் பட்டது. இந்த உரிமையியல் மேல்முறையீட்டில் இணைப்பு என்னும் சட்டக்கோட்பாட்டினைப் பயன்படுத்தி நீதியர் ஆயத் தீர்ப்பில் அளிக்கப் பட்ட விகிதாச்சாரம் பற்றி கண்டு கொள்ளாமல், உச்சநீதிமன்றம் இதற்கு ஒப்புதல் அளிக்க வில்லை. வேறுவகையில் முடிவுகள் வித்யோதயா அறக்கட்டளை –எதிர்– மோகன் பிரசாத் ஆர். மற்றும் பிறர் 2006 (7) உச்.நீ.வ. 452 மற்றும் சுவாமி சிவசங்கரகிரி செல்லசாமி –எதிர்– சத்யா ஞான நிகேதன் 2017 (2) த.த.வ. 232 உச்.நீ., 2017 (MWN) உரிமையியல் 569 (உச்.நீ.) (4) உச்.நீ.வ. 771. தெளிவாக குறிப்பிடுவது சீராய்வு மனு ஆணைக்கெதிராக அனுமதி வழங்குவது உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம்

பிரிவின்படி இது செய்யத்தக்கதாகும் என்பதாகும்.

13. மாண்புமிகு நீதிபதி கே.புட்டஸ்வாமி தென்னிந்திய கிறிஸ்துவ திருச்சபை சங்கம் –எதிர்– ரெவரண்ட் டி.ஐ. அனந்தா, 1980 உச்.நீ.வ. வலைதளம் கார் 218 பின்வருமாறு கண்டறியப்பட்டது.

"13. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர் களுக்கு அனுமதி மறுக்கப்படும் ஓர் ஆணை நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யத்தக்க தாகும். அதற்கு அந்த நீதிமன்றத்திலிருந்து மேல்முறையீடு செய்யப்படலாம். விரிவு பிரிவு 104 ஆனால் அனுமதி வழங்குகிற ஓர் ஆணை அதனை மேல்முறையீடு செய்ய முடியாத போதும் இந்த நீதிமன்றத்தினால் சீராய்வுக்கு உட்படுத்தப்படலாம். உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 115ஆம் பிரிவின்படி இதற்கு மாற்றான ஆணை உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப் பட்டது. உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி இதனை உச்ச நீதிமன்றம் இடையீடு செய்யலாம். அதாவது அரசமைப்பின் 133ஆம் உறுப்பின்படி அல்லது நேர்வுக்கேற்ப 136ஆம் உறுப்பின்படி ஆணை ஒன்று, மேல்முறையீடு ஒன்றிற்கு அல்லது சீராய்வுக்கு உட்படுத்தப்படுவதன் பேரில் இது ஒரு நிர்வாக ஆணையாக எப்போதும் கூறப்பட முடியாது. தேர்வின் மூலம் உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி இது தெளிவாக நீதிமுறைகளை மற்றும் மாவட்ட நீதிபதி இதற்கு மாறாக கூறுவது மற்றும் விண்ணப்பத்திற்கு வகை செய்வது அந்த அடிப்படையில் இது சட்ட விரோத அல்லது பொருட்டான ஒழுங்கற்ற நிலை அதாவது அதிகார வரம்பைப் பாதிப்பது."

14. இதில் குறையுற்ற தரப்பினர் இந்த ஆணையை கேள்விக்குள்ளாக்கலாம். அதாவது அனுமதி வழங்குதலை சீராய்வு மனுவை முன்னிடுவதன் மூலம் ஓர் அடிப்படைத் தவறு செய்யப்படுவதாக கீழ்நிலை நீதிமன்றத்தினால் இது. முந்தைய நிலையில் திருத்தப்பட முடியாது. இதில் நற்குறிப்பு இல்லை. வாதமாவது மனு வினை நீக்குதல் பின்னர் முன்னிடப்படலாம். அதிக அளவில் அனுமதி மனுக்கள் அறிவிப்பு அளிக்கப்பட்ட பின்னரே வகை செய்யப்படு கின்றன. இந்த வழக்கிலும்கூட எதிர்வழக்கீட்டாளர்கள் சார்பாக. அறிவிப்பு அளிக்கப்பட்டது மற்றும் அனுமதி வழங்கப்பட்டது. விசாரணைக்குப் பின்னர் மட்டுமே. எனக்கு புரியவில்லை. எவ்வாறு மனு ஒன்று அனுமதியை மறுக்கக் கோரி அதே நீதிமன்றத்தின் முன்பு மனு ஒன்று அனுமதியை மறுக்கக் கோரி அதே நீதிமன்றத்தின் முன்பு முன்னிடப்பட முடியும் என்பது. நீதியர் ஆயம் எஸ். குகன் –எதிர்– ருக்மணி தேவி அருண்டேல் அ.இ.அ. 1988 சென்னை. நான் உறுதியாக கூறியதாவது உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படியான ஒரு வழக்கு. இதில் கட்டளை ஒரு தேவையான தரப்பு மற்றும் அது இடையீட்டாளராக சேர்க்கப்படா திருப்பின் அதாவது நடவடிக்கையின் தரப்பினராக வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும். தற்போதைய வழக்கில், மாதா அறக்கட்டளை. இது தேவையான தரப்பு. ஆனால் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. கேரளா உயர்நீதிமன்றம், தென்னிந்திய திருச்சபை –எதிர்– ஜான் 2012 (2) கே.உ.நீ. 502இல் கூறியதாவது உரிமையியல் தொடர்பான சட்டத்தின் பிரிவு 92ஆம்படி எதிர்பார்க்கப்படுகிற உரித்தம் உண்மையானதாக இருத்தல் வேண்டும் என்பது. அதுவும் அந்தக் கட்டளையில் உரித்தம் இருந்து வருதல் பொருட்டானது. தொகுப்புச் சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி செயற்பாட்டை ஒருவருக்கு உரித்தம் உள்ளதா என்பது பற்றிய கூறின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டியது மற்றும் அதன் வாதுரையில் குற்றங்கள் சுட்டப் பட்டதா அது அனுமதி விண்ணப்பத்துடன் வைக்கப்பட்டதா என்பது. நிர்வாகத்தில் உரித்தம் அதுவும் கொடையில் அது ஒருவரது சொந்த நிலை அது மற்றவர்களது அல்ல. [விரிவு அ.இ.அ.1924 பி.சி. 221 (2)] தற்போதைய வழக்கில், உறுதியுரை மு.மே.எண் 14/2015இல் முன்னிடப்பட்டது. அனுமதி கோருவது எவற்றாக உள்ளது. கீழ்நிலை நீதிமன்றம் அடிப்படையில் தவறு செய்துள்ளது. இரண்டு நிலைகளை கவனிக்காது. அரசமைப்பின் 227ஆம் உறுப்பின்படி கண்காணிப்பு அதிகார வரம்பு

வழங்கப்படுவதன் நோக்கம். உயர்நீதிமன்றம் பிற நீதிமன்றங்களால் இழைக்கப்பட்ட குற்றங் களை திருத்துவதே. இவை அதன் எல்லைக்குள் வைத்திருக்க வேண்டியது. இந்த வழக்கில், விசாரணை நீதிபதி கண்டறிந்ததாவது கேள்வி யில் உள்ள கட்டளை ஒரு பொது அறக்கட்டளையா என்பது. உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி ஒரு பொது அறக்கட்டளை யில் உரித்தம் கொண்டுள்ளவர். அது நியாய மாக நடக்காதபோது பாதிக்கப்படுவார். இது உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி தவறான குறை மற்றும் தவறாக பயன்படுத்துவது சட்ட வகைமுறைகளை என்ப தாகும். அத்தகைய, தவறு நீதிமன்றத்தின் ஏற்படும்போது இது சீராய்வு அதிகார வரம்பி னால் திருத்தப்பட முடியாது. எனவே, சீராய்வு மற்றும் கண்காணிப்பு அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு வழங்குவதில் பொருளோ நோக்கமோ இல்லை.

15. இந்தக் காரணங்களுக்காக, நான் மாற்று முடிவை எடுத்துள்ளேன். உரிமையியல் தொடர்பான சட்டத்தின் 92ஆம் பிரிவின்படி அனுமதி வழங்கும் ஆணை. ஒரு நீதிமுறை ஆணையர் மற்றும் இது நிர்வாக ஆணையன்று மற்றும் இது. சீராய்வு அதிகார வரம்பிற்குட்பட்டதே. நான் பெரிய நீதியர் ஆயத்திற்கு அரசமைப்பின் சுட்டுகையை செய்ய முன் வரவில்லை. ஏனெனின் எங்கிருந்து உச்சநீதிமன்றத்தால் ஆதரிக்கப்பட்ட ஒன்று. நான் இதிலிருந்து வளம் பெறுகிறேன். ஜி.ஆர். கோவிந்தராஜுலு வழக்கின் தீர்ப்பு ஆர்.கண்ணன் ஆதித்யன் வழக்கின் மேல்முறையீடு அளிக்கப்படவில்லை. இரண்டாவ தாக எஸ்.பி.பி. அண்டு நிறுவனம் –எதிர் பட்டேல் பொறிய வழக்கில் விதிக்கப்பட்டது இதற்கு செயற்படுத்தப்படவில்லை. அதாவது நீதிபதிகளால்.

16. உரிமையியல் சீராய்வு மனுவில் எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணை தள்ளுபடி செய்யப்பட்டது. உரிமையியல் சீராய்வு மனு அனுமதிக்கப்பட்டது. அவ்வாறே தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்பட்டது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிக்களுக்கான இருக்கைகள் : மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

மெட்ரோ ரயில்களில் மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான இருக்கைகள் ஒதுக்கீடு முறையாக அமல்படுத்தப்படுகிறதா என்பது குறித்து அதிகாரிகள் திடீர் சோதனை நடத்த வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னையில் மெட்ரோ ரயில்களில் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருக்கைகள் ஒதுக்கீடு செய்யக் கோரி வழக்குரைஞர் வி.பி.ஆர். மேனன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் 19 ஜனவரி விசாரணைக்கு வந்தது. அப்போது, மெட்ரோ ரயில் நிர்வாகம் தரப்பில், மெட்ரோ ரயில்களில் உள்ள ஒவ்வொரு பெட்டி யிலும் உள்ள 50 இருக்கைகளில் 14 இருக்கைகள் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக விளக்கம் அளிக்கப்பட்டது.

அதற்கு மனுதாரர் தரப்பில் தனியான இருக்கைகள் ஒதுக்கியிருந்தாலும், அந்த இருக்கை களில் அனைவரும் அமர்ந்து செல்கின்றனர். மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் வந்தால் அவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை. எனவே, பெண்களுக்கு பிரத்யேகமாக ஒதுக்கப் பட்டுள்ளது போன்று மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு தனிப்பெட்டிகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், தனிப்பெட்டி ஒதுக்கீடு செய்வது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம்தான் முடிவு செய்ய வேண்டும். எனவே, மெட்ரோ ரயில்களில் மூத்த குடி மக்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான இருக்கைகள் ஒதுக்கீடு முறையாக அமல்படுத்தப்படுகிறதா என அதிகாரிகள் திடீர் சோதனை நடத்த வேண்டும்.

இது தொடர்பான வழிகாட்டு நெறிமுறை களை 30 நாள்களுக்குள் மெட்ரோ ரயில் நிர்வாகம் வகுக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

**நன்றி: தினமணி 20.01.2026**

# குற்றச் செயல்களுக்கான சிறுவர் வயதைக் குறைப்பது ஓர் பின்னடைவு

- வந்தனா வெங்கடேஷ்

'மாற்று அமைப்பு' என்று அழைக்கப்படும் நடைமுறையை அறிமுகப்படுத்தி, சிறார் நீதித்துறையில் மாற்றங்களைக் கொண்டுவந்த சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 அமலுக்கு வந்து ஒரு தசாப்தம் (10 ஆண்டுகள்) ஆகிறது. இந்நிலையில், டிசம்பர் 2025-ல் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு தனிநபர் மசோதா, 'கடுமையான' குற்றங்களில் ஈடுபடும் சிறார்களுக்கான வயது வரம்பை 16-லிருந்து 14- ஆகக் குறைக்க முயல்கிறது. ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத் தண்டனைக்குரிய குற்றங்களே கடுமையான குற்றங்கள் எனப்படுகின்றன. இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால், 14 முதல் 15 வயதுடைய சிறார்கள் பெரியவர்களுக்கான குற்றவியல் விசாரணை நடைமுறைகள் மற்றும் சிறைத் தண்டனைக்கு ஆட்படுத்தப்படுவார்கள். இது பாதுகாப்பு, மறுவாழ்வு மற்றும் சமூகத்துடன் இணைத்தல் ஆகிய கொள்கைகளைச் சிதைத்து, பழிவாங்கும் தண்டனைக்கே முன்னுரிமை அளிப்பதாக அமைந்துவிடும்.

**'மாற்று அமைப்பில்' உள்ள சிக்கல்**

இந்திய சிறார் நீதி அமைப்பானது, குழந்தைகள் வளர்ச்சி நிலையில் பெரியவர்களிடமிருந்து வேறுபட்டவர்கள் என்றும், அவர்களைச் சீர்திருத்த முடியும் என்றும் நம்பும் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. டெல்லி கூட்டுப் பாலியல் வன்கொடுமை வழக்குக்கு (2012) எதிர்வினையாக, சிறார் நீதிச் சட்டம் தண்டனையை மையமாகக் கொண்ட ஒரு திருப்பத்தை எடுத்தது. இதன்படி, கடுமையான குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட 16 முதல் 18 வயதுடைய சிறார்கள், சிறார் நீதி வாரியத்தால் முதல்நிலை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவார்கள். இதன் மூலம் அவர்களை பெரியவர்களைப் போல விசாரிக்க வேண்டுமா என்பது அதில் தீர்மானிக்கப்படும். அவர்களுடைய மனத் திறன் மற்றும் குற்றத்தின் விளைவுகளைப் புரிந்துகொள்ளும் திறன் ஆகியவை இதில் மதிப்பிடப்படுகின்றன. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் வழக்கு மாற்றப்பட்டால், குழந்தைகள் நீதிமன்றம் அவர்களை ஒரு பெரியவராகவோ அல்லது குழந்தையாகவோ கருதி விசாரிக்கலாம்.

ஆனால், இந்த மாற்றம் எந்தவொரு புள்ளிவிவர ஆதாரங்களாலும் ஆதரிக்கப்படவில்லை; மேலும், இந்த மசோதாவை ஆய்வு செய்த நாடாளுமன்ற நிலைக்குழுவும், இது உள்நாட்டு மற்றும் சர்வதேச சிறார் நீதித் தரங்களுக்கு முரணானது என்று கண்டறிந்தது.

தற்போது வெளியாகும் சான்றுகள், இந்த 'மாற்று அமைப்பு' தன்னிச்சையான போக்குகள், நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் குழப்பங்கள் நிறைந்தது என்பதைக் காட்டுகின்றன. ஒரு குழந்தை தனது செயலின் 'விளைவுகளை அறிந்திருந்தாரா' அல்லது குற்றத்தைச் செய்வதற்கான 'மனத் திறனைப்' பெற்றிருந்தாரா என்பதை மதிப்பிடுவது, குழந்தையின் வளர்ச்சி நிலைகள் மற்றும் வாழ்நிலைச் சூழல்களிலிருந்து கவனத்தைத் திருப்பி, ஒரு கற்பனையான பழிசுமத்தல் நோக்கி நகர்த்துகிறது. மேலும், ஒரு குழந்தைக்குக் குற்றம் செய்யப் பெரியவர்களுக்குரிய முதிர்ச்சி உள்ளதா என்பதைத் தீர்மானிக்கவோ, அல்லது குற்றம் நடந்த நேரத்தில் அவர்களின் மனநிலை எப்படி இருந்தது என்பதை பின்னோக்கி ஆராய்ந்து மதிப்பிடவோ எந்தக் கருவிகளும் இல்லை.

பெரும்பாலும் இத்தகைய மதிப்பீடுகள் குழந்தையின் வளர்ச்சித் திறனோடு தொடர்பில்லாத விஷயங்களைச் சார்ந்தே அமைகின்றன. உதாரணமாக, அந்தக் குழந்தைக்குச் செயல் 'தவறு' என்று

தெரிந்திருந்ததா, கைது செய்யப்படும்போது அவர்கள் பயந்தபடியோ அல்லது வருத்தத்துடனோ காணப்பட்டார்களா, அல்லது தங்கள் செயல்களின் விளைவுகளை விவரிக்க முடிந்ததா போன்றவையே கணக்கில் கொள்ளப்படுகின்றன.

ஒரே மாதிரியான சூழலில் உள்ள குழந்தைகள், அவர்களின் தனிப்பட்ட சூழ்நிலைகள் மற்றும் சிறார் நீதி வாரியங்களின் அகநிலை முடிவுகளால் முற்றிலும் மாறுபட்ட விளைவுகளைச் சந்திக்கின்றனர். மறுவாழ்வு என்ற நோக்கத்தைச் சிதைத்து, குழந்தைகளிடையே செயற்கையான பிரிவினையை உருவாக்கி, பாரபட்சமான முடிவுகளைத் தரும் ஒரு செயல்முறையில் உள்ள சமத்துவ மின்மையை எந்தவொரு கட்டமைப்பாலும் தீர்க்க முடியாது. 14 வயதுடைய குழந்தைகளுக்கும் இந்த முறையை விரிவுபடுத்துவது, குழந்தைப் பருவத்தின் மிகவும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய கட்டத்தில் தன்னிச்சையான போக்கை நிறுவனமயமாக்கும் அபாயத்தை உருவாக்குகிறது.

**விடலைப் பருவக் குற்றங்களின் எதார்த்தம்**

14 முதல் 16 வயதுடையவர்களால் செய்யப்படும் கடுமையான குற்றங்கள் அதிகரித்துள்ள தாகவும், பொறுப்புடைமை மற்றும் குற்றத் தடுப்பை உறுதிப்படுத்த வயது வரம்பைக் குறைப்பது அவசியம் என்றும் தற்போதுள்ள மசோதா கூறுகிறது.

இருப்பினும், தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் 2023-ம் ஆண்டு புள்ளிவிவரங்களின்படி, சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளுக்கு எதிராக 31,365 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது அந்த ஆண்டில் பதிவான மொத்தக் குற்றங்களில் வெறும் 0.5% மட்டுமே. மேலும், 2023-ல் பிடிபட்ட 40,036 சிறார்களில், 79% பேர் (31,610) 16 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள். மீதமுள்ள 21% பேர் (8,426) மட்டுமே 12 முதல் 16 வயதுக்குட்பட்டவர்கள்.

எனவே, தீவிரமான குற்றங்களின் அதிகரிப்புக்கு 14 முதல் 16 வயதுடைய இளம்பருவத்தினரே காரணம் என்ற வாதத்தை தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகள் நேரடியாக மறுக்கின்றன. குழந்தைகள் எவ்வாறு குற்றவியல் நீதி அமைப்பிற்குள் நுழைகிறார்கள் என்பது குறித்த தவறான புரிதலையும் இந்த முன்மொழிவு பிரதிபலிக்கிறது.

இளம்பருவத்தினர் சம்பந்தப்பட்ட பல வழக்குகள், அவர்களின் கட்டமைப்பு ரீதியான பாதிப்புகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளிலிருந்து எழுகின்றன. சட்டத்துடன் முரண்படும் பல குழந்தைகள், அதே நேரத்தில் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகளாகவும் உள்ளனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நீதித்துறையுடனான அவர்களின் தொடர்பு, அவர்களின் இயல்பான குற்றத்தன்மையை விட, சமூக நலக் கடமைகளின் தோல்வியையே காட்டுகிறது. வயது வரம்பைக் குறைப்பது, இந்தக் குழந்தைகளைத் தண்டிக்கும் செயல்முறைக்குள் மேலும் ஆழமாக இழுத்துச் செல்லும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

பெரியவர்களுக்கான குற்றவியல் செயல்முறைகளுக்குக் குழந்தைகளை ஆட்படுத்துவது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். தடுப்புக் காவல் அவர்களின் பள்ளிப் படிப்பைத் தடைசெய்கிறது மற்றும் அறிவுசார் வளர்ச்சியை முடக்குகிறது; குற்றவியல் நடவடிக்கைகள் அவர்கள் மீது சமூகக் களங்கத்தை ஏற்படுத்துகின்றன; நீதித்துறையுடனான நீண்டகாலத் தொடர்பு நிரந்தரமான உளவியல் அழுத்தத்தை உண்டாக்குகிறது. இந்தச் செயல்முறையே தண்டிப்பதாகவும் மன உளைச்சல் தருவதாகவும் உள்ளது. சட்டப் பாதுகாப்புகளை மீறி குழந்தைகள் இன்னும் காவல் நிலையங்களில் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்படுவதும், பெரியவர்களுக்கான சிறைகளில் அடைக்கப்படுவதும் தொடர்கிறது என்பதற்கான சான்றுகள் உள்ள நிலையில், சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளைப் பாதுகாக்கத் தவறிய அமைப்பின் தோல்வியையும், பொறுப்பின்மையையும் சரிசெய்வதே இப்போதைய தேவையாகும்.

**குழந்தையை அல்ல, அமைப்பைச் சரிசெய்யுங்கள்**

இந்த மசோதா, அமைப்பைத் தண்டனையை நோக்கித் திருப்புவதோடு, ஆரம்பக்கட்டத் தலையீடு, குடும்பங்களை வலுப்படுத்துதல், கல்வி, மனநல ஆதரவு மற்றும் அமைப்பு ரீதியான மாற்றங்கள் ஆகியவற்றின் மீதான கவனத்தைத் திசைதிருப்புகிறது. விடலைப் பருவத்திற்கும் முதிர் வயதுக்கும் இடையிலான வேறுபாட்டை அழிப்பதற்கான சட்ட முயற்சிகள், அடிப்படைக் குழந்தை உரிமைகள் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவம் ஆகியவற்றைச் சிதைக்கின்றன.

கடுமையான பாதிப்புகளுக்கு அர்த்தமுள்ள வகையில் பதிலளிப்பதே இலக்கு என்றால், அதற்கான தீர்வு பாதுகாப்பை விலக்கிக் கொள்வதில் இல்லை; மாறாக, பாதிப்பு ஏற்படும் முன்பே குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் நிறுவனங்களையும் சமூகங்களையும் வலுப்படுத்துவதில் முதலீடு செய்வதில் உள்ளது. இத்தகைய அமைப்பு ரீதியான தோல்விகளைச் சிறார்கள் மீது கடுமையான தண்டனை விதிப்பதற்கு நியாயமாகப் பயன்படுத்துவது சிக்கலைத் தீர்க்காது. இது விளைவுகளைத் தாங்கிக்கொள்ளச் சற்றும் திராணியற்றவர்களின் மீது அப்பழுக்கைச் சுமத்துவதாகவே அமையும்.

**நன்றி: தி இந்து நாளிதழ். (கட்டுரையாளர், 'என்போல்டு புரோஆக்டிவ் ஹெல்த் டிரஸ்ட்' நிறுவனத்தில் சட்ட ஆய்வாளராகப் பணியாற்றுகிறார். இவர் இந்தியாவில் குழந்தை உரிமைகள் மற்றும் சிறார் நீதி தொடர்பான விவகாரங்களில் பணியாற்றி வருகிறார்.)**

**– மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

---

## 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் இணைய தளத்தை பார்க்க தடை விதிக்க வேண்டும் – மத்திய அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

ஆஸ்திரேலியா நாட்டைப் போல 16 வயதுக்கு கீழ் உள்ள சிறுவர்கள் இணைய தளத்தை பார்ப்பதற்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டும் என்று மதுரை உயர் நீதிமன்றம் அதிரடியாக உத்தரவு பிறப்பித்துள்ளது.

மதுரை உயர்நீதிமன்றத்தில் எஸ்.விஜயகுமார் என்பவர் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில், ''இணைய தளங்களில் ஆபாச வீடியோ படங்களில் தாராளமாக உலவுகிறது. இதனால், சிறுவர், சிறுமிகளின் எதிர்காலம் பாழாகும். எனவே, தேசிய குழந்தைகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி ஆபாச வீடியோக்களை தடுக்கும் விதமான சாப்ட்வேர் (மென்பொருளை) பயன்படுத்த வேண்டும் என்று மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் செயலாளஉள்துறை செயலாளர், தேசிய மற்றும் தமிழ்நாடு குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையங்களின் உறுப்பினர் செயலாளர்கள், இன்டர்நெட் சர்வீசஸ் புரோவைடர் சங்கத்தின் செயலாளர் உள்ளிட்டோருக்கு உத்தரவிட வேண்டும்'' என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே.ராம கிருஷ்ணன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கே.பி.எஸ். பழனிவேல்ராஜன், ''ஆபாச படங்களை எளிதில் பார்த்து விடுவதை தடுக்கும் மென்பொருளை இன்டர்நெட் சேவை வழங்கும் தனியார் நிறுவனங்கள் பயன்படுத்த வேண்டும். தவறினால், குழந்தைகள் உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அந்த நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். அது மட்டுமல்ல, இந்த தீய செயல் குறித்து குழந்தைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த குழந்தைகள் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்'' என்று வாதிட்டார்.

இன்டர்நெட் சேவை வழங்குவோர் சங்கத்தின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சரவணன் மோகன், டிஜிட்டல் மீடியா இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் நெறி முறைகள் விதிகளின்படி தகுந்த நடவடிக்கை எடுக்கத் தான் செய்கிறோம். ஆபாச படங்கள் தொடர்பான புகார்கள் ஏதாவது வந்தால், சம்பந்தப்பட்ட சேவை நிறுவனங்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். அந்த வீடியோவை இணையதளத்தில் இருந்து நீக்குகிறோம் என்று கூறினார்.

மத்திய, மாநில அரசுகள் தரப்பிலும் வாதிடப் பட்டது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது. ''மத்திய அரசு கடந்த 2017ஆம் ஆண்டு பிறப்பித்துள்ள உத்தரவின் படி, சர்ச்சைக்குரிய வீடியோவை தடுக்க வழிகள் உள்ளன. ஆபாச படங்களை குழந்தைகள் பார்ப்பதை முற்றிலும் தடுக்க வழிவகை செய்ய மென்பொருள் அவசியம் தேவைப்படுகிறது. அருவருப்பான காட்சிகளை பார்ப்பதும், தவிர்ப்பதும் அவரவர் விருப்பம் மற்றும் உரிமை சார்ந்ததாக இருந்தாலும், இது போன்ற வீடியோக்களை குழந்தை பார்த்தால் பாதிப்பு அதிகம் ஏற்படும். அதனால், ஆஸ்திரேலியா நாட்டில் 16 வயதுக்கு கீழ் உள்ள சிறுவர்கள் இணையதளத்தை பார்ப்பதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது. அது போன்ற தடையை மத்திய அரசும் கொண்டு வர வேண்டும். அதுவரை இந்த விவகாரம் குறித்து சிறுவர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையில் மத்திய, மாநில அரசுகளும், குழந்தைகள் உரிமை ஆணையங்களும் மேற்கொள்ள வேண்டும்'' இவ்வாறு நீதிபதிகள் கூறியுள்ளனர்.

**நன்றி: தினத்தந்தி 26.12.2025**

# 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 57/1992)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Educational Institutions (Prohibition of Collection of Capitations Fee) Act, 1992
## (Tamil Nadu Act No.57 of 1992)
(as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 1992ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

தமிழ்நாடு மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்வதற்காகக் கட்டாய நன்கொடை வசூலிக்கப்படுவதைத் தடை செய்வதற்கும் அது தொடர்பான பிறவற்றிற்கு வகை செய்வதற்குமான ஒரு சட்டம்.

கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காகக் கட்டாய நன்கொடை வசூலிக்கின்ற வழக்கம். இம்மாநிலத்தில் மிகவும் பரவலாக இருந்து வருவதாலும்,

இந்த விரும்பத்தகாத மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காகக் கட்டாய நன்கொடை வசூலிக்கின்ற வழக்கம். இம்மாநிலத்தில் மிகவும் பரவலாக இருந்து வருவதாலும், இந்த விரும்பத்தகாத பழக்கமானது, கல்வி கற்பித்தலை அதிக அளவில் வணிகமுறைப்படுத்துவதோடு அல்லாமல், கல்வித் தாங்களைக்ப பேணி வருவதற்கு உகந்ததாக இல்லை என்பதாலும்

கட்டாய நன்கொடை வசூலிக்கப்படுவதைத் தடை செய்வதன் மூலமாகவும், அது தொடர்பான பிறவற்றிற்கு வகை செய்வதன் மூலமாகவும், பொது நலன் கருதி இந்த விரும்பத்தகாத பழக்கத்தை உறுதியாகத் தடுத்து நிறுத்துவது தேவையானதாக உள்ளதெனக் கருதப்படுவதாலும்,

இந்தியக் குடியரசின் நாற்பத்து மூன்றாம் ஆண்டின் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:** இந்தச் சட்டம் 1992ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 20ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்:** இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி.

(a) ‘‘கட்டாய நன்கொடை’’ என்பது, எந்தப் பெயரால் வழங்கப்படுவதாயினும், பிரிவு 4இன்படி வகுத்துரைக்கப்பட்டுள்ள கட்டணத்திற்கும் மேற்பட்டு, நேரடியாகவோ மறைமுகமாகவோ செலுத்தப்படும் அல்லது வசூலிக்கப்படும் தொகை எதுவும் எனப் பொருள்படும்.

(b) கல்வி நிலையம் என்பது, எந்த பெயரால் வழங்கப்படுவதாயினும், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் செய்யப்பட்ட சட்டம் எதன்படியேனும் நிறுவப்பட்டுள்ள பல்கலைக்கழகம் எதனாலும் வழங்கப்படும் (சட்டம், மருத்துவம் அல்லது பொறியியல் பட்டம் அல்லது பட்டயம் உள்ளிட்ட) ஒரு பட்டப்படிப்பிற்கோ பட்டயப்படிப்பிற்கோ வழிவகுக்கின்ற கல்விக் கற்பிக்கின்ற நடவடிக்கையை நடத்தி வருகின்ற, நபர் எவராலுமோ அல்லது தனியார் அமைப்பு, உள்ளாட்சி அதிகார அமைப்பு, பொறுப்பாட்சியமைப்பு அல்லது பல்கலைக்கழகம் எதனாலுமோ நிருவகிக்கப்பட்டு வருகின்ற கல்வி நிலையம் எதுவும் என்றும் மற்றும் அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறிப்பிடப்படும்

(மைய அரசினாலோ என்பது நாடாளுமன்றத்தினால் செய்யப்பட்ட சட்டம் எதன்படியேனும் நிறுவப்பட்ட கல்வி நிலையம் அல்லாத பிற) கல்வி நிலையம் எதுவும் அல்லது கல்வி நிலையங்களின் வகை எதுவும் அல்லது வகைகள் எவையும் எனப் பொருள்படும்.

(c) “அரசு” என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(d) “நிருவாகம்” என்பது எந்தப் பெயரால் வழங்கப்பட்டாலும், கல்வி நிலையமொன்றின் அலுவல்களை நிருவகித்து வருவதற்கான நிலையமொன்றின் அலுவல்களை நிருவகித்து வருவதற்கான அல்லது ஆட்சி செய்து வருவதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிருவாகக் குழுவையோ, நபர் எவரையோ அல்லது நபர்கள் அடங்கிய குழுமம் எதனையோ அல்லது குழு எதனையோ அல்லது பிற ஆட்சிக் குழுமம் எதனையோ உள்ளடக்கும்.

**வரம்புரை**: ஆனால், எந்தப் பெயரால் வழங்கப்பட்டாலும், அற மற்றும் சமய நிறுவனங்கள் மற்றும் நிலைக்கொடைகள், தொடர்பாகவும் மற்றும் வக்ஃபுகள் தொடர்பாகவும் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியேனும் அமைக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட பொறுப்பாட்சியர் குழுமம் அல்லது வக்ஃபுகள் வாரியத்தின் ஆட்சிக் குழுமமானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(e) சிறுபான்மையினர் கல்வி நிலையம் என்பது, சமய அடிப்படையிலாயினும் அல்லது மொழி அடிப்படையிலாயினும் அரசமைப்புச் சட்டத்தின் 30ஆம் அமைப்பு விதியின் (1)ஆம் கூறின்படி நிறுவி நிருவகித்து வருவதற்கு உரிமை பெற்றுள்ள சிறுபான்மையர் எவராலேனும் தங்களது விருப்பத் தெரிவின்படி நிறுவப்பட்டு நிருவகித்து வரப்படுகின்ற ஒரு கல்வி நிலையம் எனப் பொருள்படும்.

**3. கட்டாய நன்கொடை வசூலிப்பதற்கான தடை**: அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதிலுமோ, அல்லத நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும்

(a) ஏதேனும் கல்வி நிலையம் ஒன்றின் நிருவாகத்தை தம் பொறுப்பில் கொண்டுள்ள அல்லது அதற்குப் பொறுப்பான நபர் எவராலேனும் அல்லது

(b) தமக்காகவோ அல்லது அத்தகைய கல்வி நிலையம் எதனின் சார்பாகவோ அல்லது ஏதேனும் கல்வி நிலையம் ஒன்றின் நிருவாகம் சார்பாகவோ பிற நபர் எவராலேனும்,

**4. கட்டணம் முதலியவற்றை முறைப்படுத்துதல்**: (1) அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், மாணவர்களின் வகை எதையும் பொறுத்தோ அல்லது வகைகள் அனைத்தையும் பொறுத்தோ அல்லது வகைகள் எதனாலேனும் அல்லது அத்தகைய கல்வி நிலையங்களின் வகை எதனாலேனும் அல்லது வகைகள் எவற்றாலேனும் பெற்றுக் கொள்ளப்படக் கூடிய அல்லது வசூலிக்கப்படக் கூடிய கற்பிப்புக் கட்டணத்தை அல்லது பிற கட்டணம் அல்லது வைப்பீடு எதனையும், அரசு, அறிவிக்கையின் மூலமாக முறைப்படுத்தலாம்.

**வரம்புரை**: ஆனால் இந்த உட்பிரிவின்படி அறிவிக்கை ஒன்றைப் பிறப்பிப்பதற்கு முன்பு, அதில் அரசினால் குறிப்பிடப்படும் கால அளவிற்குள் பெற்றுக் கொள்ளப்படக் கூடிய ஆட்சேபனை அல்லது ஆலோசனை எதுவும் அரசினால் பரிசீலிக்கப்படும் எனக் குறிப்பிட்டு, அவ்வறிக்கையின் வரைவானது, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(2) கல்வி நிலையம் எதுவும் உட்பிரிவு (1)இன்படி அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேற்பட்டு கட்டணம் எதையும் பெற்றுக் கொள்ளவோ, வசூலிக்கவோ அல்லது வைப்பீட்டை ஏற்கவோ கூடாது.

(2-A) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மருத்துவம் அல்லது பொறியியல் பட்டம் ஒன்றினைப் பெற்றிட வழிவகுக்கக் கூடிய கல்வியைப் புகட்டுகின்ற கல்வி நிறுவனமானது, அரசால் அமைத்து உருவாக்கப்பட்ட கட்டண நிர்ணக் குழுவால்

நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்குக் கூடுதலான கட்டணம் எதையும் பெறுதலோ அல்லது வசூலித்தலோ கூடாது.

விளக்கம் : இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக கட்டண நிர்ணயக் குழு என்பது,இசுலாமியக் கல்விக் கழகம் மற்றவை – எதிரிடை – கர்நாடக அரசு மற்றும் பிறர் (2003 (6)() 697) என்ற வழக்கில் உச்சநீதிமன்றத்தின் பணிப்புரையைப் பின்பற்றுவதற்காக அமைக்கப்பட்ட குழு எனப் பொருள்படும்.

(3) ஒவ்வொரு கல்வி நிலையமும், தன்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது வசூலிக்கப்பட்ட கட்டணம் அல்லது வைப்பீட்டிற்காக, அதிகார முறை பற்றுச் சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

**5. கணக்குகளை முறைப்படுத்துதல்:** அரசு, வகுத்துரைக்கப்படும் முறையில் கல்வி நிலையங்களால் கணக்குகள் பேணி வரப்படுவதை முறைப்படுத்தலாம்.

**6. விவர அறிக்கைகள் அனுப்பி வைத்தல்** : அரசு அந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றி வருவதற்காக வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும் விவர அறிக்கைகளையோ விவர உரைகளையோ அனுப்பி வைக்குமாறு கல்வி நிலையங்களைக் கோரலாம்.

**7. தண்டனைகள்** : (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளையோ அதன்படிச் செய்யப்பட்ட விதிகளையோ மீறுகிற எவர் ஒருவரும், குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதன்பேரில், மூன்றாண்டுகளுக்குக் காலத்திற்குச் சிறைத் தண்டனையும், ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத் தண்டமும் (அபராதமும்) விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

**வரம்புரை**: ஆனால், நீதிமன்றம், மூன்றாண்டுகளுக்குக் குறைவான ஒரு காலத்திற்குச் சிறைத் தண்டனையை விதிப்பதானால், அதற்கான போதிய மற்றும் தனிக் காரணங்களை தீர்ப்புரையில் குறிப்பிட்டு, அவ்வாறு செய்யலாம்.

(2) பிரிவு 3இன்படி அல்லது பிரிவு 4இன்படியான குற்றச் செயல் ஒன்றிற்காக குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும்போது அப்பிரிவின்படி குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்ற அக்கல்வி நிலையம் அல்லது அந்த நபர்.

(a) பிரிவு 3இன்படி அல்லது பிரிவு 3ஐ மீறி கட்டாய நன்கொடை வசூலிக்கப்பட்டிருந்தால் அந்தக் கட்டாய நன்கொடையை

(b) பிரிவு 4இன்படி செலுத்தப்படத்தக்க கட்டணத்திற்கும் மேற்பட்டு, கட்டணம் அல்லது வைப்பீடு பெறப்பட்டிருந்தால் அல்லது வசூலிக்கப்பட்டிருந்தால் அத்தகைய கூடுதல் தொகையை. உரிய நபரிடம் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

**8. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள்** : (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் ஏதேனும் ஒன்றிற்கு எதிரான அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி எதற்கும் எதிரான குற்றச் செயல் ஒன்று நிறுமம் ஒன்றால் செய்யப்பட்டிருக்கின்றபோது, அக்குற்றச்செயல் செய்யப்பட்ட காலத்தில் அந்நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொருட்டு, அந்நிறுமத்தைத் தம் பொறுப்பில் கொண்டிருந்தவரும் அதற்குப் பொறுப்பாயிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும் மற்றும் அந்த நிறுமமும் கூட அக்குற்றச்செயலைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படியே தண்டிக்கப்படுவதற்கு உள்ளாகுதலும் வேண்டும்.

**வரம்புரை**: ஆனால், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரையும் அக்குற்றச்செயலானது தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டிருக்கின்றது என்றோ அல்லது அக்குற்றச் செயல் செய்யப்படுவதைத் தடுப்பதற்கான உரிய முயற்சி அனைத்தையும் தாம் மேற்கொண்டார் என்றோ அவர் மெய்ப்பிப்பாராயின் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) உட்பிரிவு (1) இல் என்ன அடங்கியிருந்தபோதிலும், அத்தகைய குற்றச்செயல் ஏதேனும்

நிறுமம் ஒன்றால் செய்யப்பட்டிருந்து அக்குற்றச்செயலானது அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரொருவரின் இசைவுடனோ மறைமுக ஆதரவுடனோ செய்யப்பட்டிருக்கின்றது அல்லது அவருடைய அசட்டையினால் ஏற்பட்டதென சாட்டத்தக்கதாக இருக்கின்றது என மெய்ப்பிக்கப்படும்போது, அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அக்குற்றச் செயலைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு, அதன்படியே மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு அவரும் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாகுதலும் வேண்டும்.

விளக்கம் இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக

(a) நிறுமம் என்பது, கூட்டமைப்பு எதுவும் எனப் பொருள்படுவதோடு, பொறுப்பாட்சி அமைப்பொன்றை, நிறுவகமொன்றை, சங்கமொன்றை அல்லது பிற தனி நபர்களின் கழகத்தையும் உள்ளடக்கும் மற்றும்.

(b) நிஇயக்குநர் என்பது

(i) நிறுவனம் ஒன்றைப் பொறுத்த அளவில், அந்நிறுவகத்தின் கூட்டாளி ஒருவர் என்றும்.

(ii) சங்கம் ஒன்றையோ, பொறுப்பாட்சி அமைப்பு ஒன்றையோ அல்லது பிற தனி நபர்களின் கழகத்தையோ பொறுத்த அளவில், அச்சங்கம், பொறுப்பாட்சி அமைப்பு அல்லது பிற கழகத்தின் விதிகளின்படி, அச்சங்கம் பொறுப்பாட்சி அமைப்பு அல்லது பிற கழகத்தின் அலுவல்கள் எந்த நபரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபர் என்றும்,

பொருள்படும்

**9. நுழைவதற்கும் சோதனையிடுவதற்குமான அதிகாரம்** : (1) இதன் பொருட்டு, அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும், கல்வி நிலையம் ஏதொன்றின் இயல்பான வேலைநேரத்தின்போது எந்தச் சமயத்திலும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளோ அதன்படி செய்யப்பட்டுள்ள விதிகளோ மீறப்படுகின்றன அல்லது மீறப்பட்டிருக்கின்றன என்று அவர் நம்புவதற்கு காரணம் பெற்றிருந்தால், அத்தகைய கல்வி நிலையத்தில் அல்லது அதன் வளாகம் எதிலும் அல்லது அந்தக் கல்வி நிலையத்தின் நிர்வாகத்திற்குச் சொந்தமான வளாகம் எதிலும் நுழைந்து, அக்கல்வி நிலையத்திற்குச் சொந்தமான அல்லது அந்நிருவாகத்தின் பதிவுரு, கணக்குகள், பதிவேடு அல்லது பிற ஆவணம் எதனையும், அத்தகைய பதிவுரு கணக்குகள், பதிவேடு அல்லது பிற ஆவணம் எதனையும், அத்தகைய பதிவுரு, கணக்குகள், பதிவேடு அல்லது பிற ஆவணம் எந்த அளவிற்கு அக்கல்வி நிலையத்தோடு தொடர்புடையதாக இருக்கிறதோ அந்த அளவிற்குச் சோதனையிட்டு, அவ்வாறு மீறப்படுகிறதா அல்லது மீறப்பட்டிருக்கின்றதா என்பதைக் கண்டறிகின்ற நோக்கத்திற்காக, அத்தகைய பதிவுரு, கணக்குகள், பதிவேடு அல்லது பிற ஆவணம் எதனையும் கைப்பற்றலாம்.

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியன்று இருந்து வருகின்ற கல்வி நிலையம் ஏதொன்றின் நிதிகளை அல்லது வள ஆதாரங்களை அல்லது பிற சொத்துடைமைகளை உரியவாறும், பயனுள்ளவாறும் பயன்படுத்திக் கொள்வதை உறுதிச் செய்யும் பொருட்டு, உட்பிரிவு (1)இன் வகைமுறைகளை செயல்படுத்துவதற்கும், அத்தகைய கல்வி நிலையத்தின் ஆகியவற்றைக் கண்டறிவதற்கும், அவ்வாறு கண்டறிந்ததற்குப் பின்பு, தான் பொருத்தமெனக் கருதுகிற பணிப்புரைகளை அந்நிருவாத்திற்குப் பிறப்பிப்பதற்கும் அரசு தகுதியுடையதாகும்.

(3) சோதனையிடுதல் மற்றும் கைப்பற்றுதல் தொடர்பான, 1973ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறை தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் 2/1974) வகைமுறைகள், கூடுமான

அளவிற்கு, உட்பிரிவு (1)இன்படி செய்யப்படும் சோதனையிடுதலுக்கும் கைப்பற்றுதலுக்கும் பொருந்தும்.

**10. சிறுபான்மையினர் கல்வி நிலையங்களுக்கு இந்தச் சட்டத்தின் பொருந்துகை**: இந்தச் சட்டத்திலோ அதன்படி செய்யப்பட்ட விதிகளிலோ அடங்கியுள்ள எதுவும், அரசமைப்பின் 30ஆம் அமைப்பு விதியின்படி உறுதியளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு அவை எந்த அளவிற்கு ஒவ்வாதவையாக உள்ளனவோ அந்த அளவிற்கு சிறுபான்மையினர் கல்வி நிலையம் எதற்கும் பொருந்துதல் கூடாது.

**11. குற்றச் செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்**: நீதிமன்றம் எதுவும், அரசின் அல்லது இதன் பொருட்டு அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் ஒப்புதல் இல்லாமல், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

**12. இச்சட்டம், பிற சட்டங்களுக்கு மேலோங்கி இருத்தல்**: இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும், அவற்றிற்கு முரணான ஏதேனும் அடங்கியிருந்தபோதிலும், செயல் விளைவு பெற்றதாக இருத்தல் வேண்டும்.

**13. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு:** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின்படி நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்ய கருதப்படும் செயல் எதற்காகவும், அரசு எதிராகவோ அல்லது இந்தச் சட்டத்தினால் நேரடியாகவோ அல்லது அதனையொட்டியோ அதிகாரங்களைச் செலுத்துவதற்கு அல்லது அலுவல்களைப் புரிந்து வருவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர், அதிகார அமைப்பு அல்லது நபர் எவருக்கும் எதிராகவோ உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

**14. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**: (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்னர் கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும். மேலும் அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ, அதனையடுத்து வருகின்ற கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர், அப்பேரவையானது அத்தகைய விதி எதிலும் மாறுதல் எதையேனும் செய்யுமானால் அல்லது அப்பேரவையானது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என முடிவு செய்யுமானால், அந்த விதியானது, அதன் பின்பு, அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப நடைமுறைக்கே வராதுபோதல் வேண்டும். எனினும், அவ்வாறு மாற்றிமைத்தது அல்லது நடைமுறைக்கே வராதுபோகச் செய்யப்பட்டுள்ள செயல் எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**15. நீக்கமும் காப்பும்**: (1) 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1992) இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்படுகின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்திலுள்ள நேரிணையான வகைமுறைகளின்படியே செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

# 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையிலான சேர்க்கைச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 34/2020)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Admission to Undergraduate Courses in Medicine, Dentistry, Indian Medicine and Homeopathy on preferential basis to students of Government Schools Act, 2020

## (Tamil Nadu Act No.34 of 2020)

(as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2020ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

அரசு பள்ளிகளில் பயின்ற மற்றும் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தகுதியான மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியில் இளங்கலைப் படிப்புகளுக்கான சேர்க்கையில் முன்னுரிமை வழங்குவதற்கான ஒரு சட்டம்.

1956ஆம் ஆண்டு இந்திய மருத்துவக் குழுமச் சட்டம் (மையச் சட்டம் 102/1956) நாடு முழுவதும் இளங்கலை அளவிலான அனைத்து மருத்துவக் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வினை நடத்த ஆணையிடுகிறது என்பதாலும்.

அனைத்து மருத்துவக் கல்வி நிறுவனங்களின் எம்.பி.பி.எஸ். படிப்புக்கான சேர்க்கையானது, பொது நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே இருந்திட வேண்டும் என்பதாலும் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தகுதித் தேர்வில் பெறும் குறைந்த மதிப்பெண்களால் எம்.பி.பி.எஸ். படிப்பின் சேர்க்கையில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான இடங்களையே அடைந்துள்ளனர் என்பதாலும்;

நீதியரசர் பி.கலையரசன் (ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி) தலைமையின்கீழ் மூத்த அலுவலர்கள் அடங்கிய ஆணையம் ஒன்று, எம்.பி.பி.எஸ். படிப்பின் சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்களின் குறைவான எண்ணிக்கைக்கான காரணங்களை மதிப்பீடு செய்வதற்காகவும் மற்றும் பகுத்தாய்வு செய்வதற்காகவும் மற்றும் அரசுக்குத் தீர்வு நடவடிக்கைகளை அறிவுறுத்துவதற்காகவும் அமைக்கப்பட்டது என்பதாலும்.

சாதி, பெற்றோரின் தொழில், பெற்றோரின் கல்வி, பெற்றோரின் வருமானம், பாலினம் போன்ற சமூகப் பொருளாதார காரணிகளால் உருவாக்கப்பட்ட அறிவாற்றலின் இடைவெளியைக் கருத்தில் கொண்டு மேற்கூறப்பட்ட ஆணையமானது. தனிப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவர்கள், தனியார் பள்ளி மாணவர்களை ஒப்பிடுகையில் குறைபாடான நிலையிலுள்ளனர் என முடிவு செய்தது மற்றும் இதனால், மாநில அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் மேல்நிலைப்

படிப்பு வரையில் படித்து மற்றும் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தகுதியான மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எம்.பி.பி.எஸ். படிப்புக்கான சேர்க்கையில் பத்து விழுக்காடு இடங்கள் ஒதுக்கி வைக்க முடியும் என பரிந்துரை செய்தது என்பதாலும்.

மேற்கூறப்பட்ட ஆணையமானது, தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வினைத் தகுதிக்கான அளவுகோலாக வகுத்துரைத்துள்ள அனைத்துப் படிப்புகளுக்கும் மேற்சொன்ன ஒதுக்கீடானது நீட்டிக்க முடியும் எனவும் பரிந்துரை செய்துள்ளது என்பதாலும்

அரசமைப்பின் 14 மற்றும் 15ஆம் அமைப்பு விதிகளைப் புரிந்து கொள்ளத்தக்க வேறுபாட்டின் மீது நியாயமான வகைபாட்டினை அனுமதித்து மற்றும் அதன் மூலம் சமமற்றவர்களுக்கு வேறுபட்ட நடத்துமுறையை அனுமதிக்கிறது என்பதாலும்,

அரசானது, கூறப்பட்ட ஆணையத்தின் பரிந்துரைகளைக் கவனமாகக் கருத்தில் கொண்ட பின்பு, மாநில அரசுப் பள்ளிகளின் மேற்கூறப்பட்ட தேர்வில் தகுதியடைந்துள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு தகுதித் தேர்வாக வகுத்துரைக்கப்பட்ட எம்.பி.பி.எஸ். படிப்பு மற்றும் பிற மருத்துவப் படிப்புகளின் சேர்க்கையில் எழரை விழுக்காடு இடங்களை ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளது என்பதாலும்.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்**: இந்தச் சட்டம் 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையிலான சேர்க்கைச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறிப்பிடப்படும் தேதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்**: இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி.

(a) அரசு என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(b) அரசு இடங்கள் என்பது.

(i) அனைத்திந்திய ஒதுக்கீட்டிற்காக ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர, அரசுக் கல்லூரிகளில் உள்ள எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., பி.எஸ்.எம்.எஸ்., பி.ஏ.எம்.எஸ்., பி.யூ.எம்.எஸ் மற்றும் பி.எச்.எம்.எஸ். படிப்புகளில் அனைத்து இடங்கள் மற்றும்

(ii) சிறுபான்மையினர் அல்லாத கல்வி நிறுவனங்களில் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., பி.எஸ்.எம்.எஸ்., பி.ஏ.எம்.எஸ்., பி.யூ.எம்.எஸ்., பி.எச்.எம்.எஸ்., படிப்புகளில் 65 விழுக்காடு இடங்கள் மற்றும் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களில் 50 விழுக்காடு இடங்கள் அல்லது அத்தகைய நிறுவனங்கள் மற்றும் அரசிற்கு இடையேயான கருத்தொற்றுமைக்கு இணங்கிய வகையிலான இடங்கள் எனப் பொருள்படும்.

(iii) அரசுப் பள்ளிகள் என்பது, அரசுப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகள் வனத் துறைப் பள்ளிகள் மற்றும் அரசுத் துறைகளினால் நிர்வகிக்கப்படும் பிற பள்ளிகள் எனப் பொருள்படும் மற்றும் அவற்றை உள்ளடக்கும்.

(d) அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் என்பது. ஓர் அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் மேல்நிலைப் பள்ளிப் படிப்பு வரை பயின்ற குழந்தைகள் மற்றும் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தகுதியானவர்கள் எனப் பொருள்படும்.

**விளக்கம்**: இந்தப் பொருள்வரையறையின் நோக்கத்திற்காக 2009ஆம் ஆண்டு குழந்தை களுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி

உரிமைச் சட்டத்தின் (மையச் சட்டம் 35/2009) பிரிவு 12 உட்பிரிவு (1) கூறு (சி)இன்படி ஒரு குறிப்பிட்ட வகையிலான பள்ளி அல்லது ஓர் உதவி பெறாத பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை பயின்றி நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைபாடுடைய பிரிவினைச் சார்ந்த குழந்தைகள் மற்றும் அரசுப் பள்ளியில் மேனிலைப் படிப்பு வரை மீதமுள்ள அனைத்து வகுப்புகளையும் பயின்ற மற்றும் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தகுதி பெற்றவர்கள் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(e) சிறுபான்மையினர் கல்வி நிறுவனம் என்பது வகுத்துரைக்கப்படும் அத்தகைய வரையறைகளுக்குட்பட்டு, அரசால் அறிவிக்கப்பட்ட அல்லது ஏற்பு பெற்ற ஒரு கல்வி நிறுவனம் எனப் பொருள்படும்.

(f) எம்.பி.பி.எஸ்., பிடி.எஸ்., பி.எஸ்.எம்.எஸ்., பி.ஏ.எம்.எஸ்., மற்றும் பி.எச்.எம்.எஸ்., படிப்புகள் என்பது, மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளங்கலை பட்டம், சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளங்கலை பட்டம், ஆயுர்வேத மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளங்கலைப் பட்டம், யுனானி மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளங்கலை பட்டம் மற்றும் ஓமியோபதி மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளங்கலை பட்டம் ஆகியவற்றின் முதலாம் ஆண்டு எனப் பொருள்படும்.

(g) தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு என்பது. முறையே எம்.பி.பி.எஸ்., மற்றும் பி.எஸ்.எம்.எஸ், பி.ஏ.எம்.எஸ்., பி.யூ.எம்.எஸ் மற்றும் பி.எச்.எம்.எஸ் ஆகிய படிப்புகளுக்கான சேர்க்கைக்காக, 1956ஆம் ஆண்டு இந்திய மருத்துவக் குழுமச் சட்டம் (மையச் சட்டம் 102 1956), 1948ஆம் ஆண்டு பல் மருத்துவச் சட்டம், (மையச் சட்டம் ïஜங/1948) 1986ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மைய குழும (இந்திய மருத்துவத்தில் கல்வியின் குறைந்தபட்ச தரங்கள்) ஒழுங்கு விதிகள் மற்றும் 1983ஆம் ஆண்டு ஓமியோபதி (பட்டப் படிப்பு) ஒழுங்கு விதிகள் ஆகியவற்றின் கீழ் பதவி அமர்த்தப்பட்ட அதிகார அமைப்பினால் நடத்தப்படும் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு எனப் பொருள்படும்.

(h) தனியார் பள்ளி என்பது, அரசுப் பள்ளி அல்லாத ஒரு பள்ளி எனப் பொருள்படும்.

**3. முன்னுரிமை அடிப்படையிலான சேர்க்கை**: அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் மற்றும் பிரிவு (5)க்கு உட்பட்டு, அரசு இடங்களின் ஏழரை விழுக்காடானது, முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

**4. பாதிக்கப்படாத பிற இடங்களுக்காகப் போட்டியிடும் உரிமை**: அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள், தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுடன் இணைந்து, முன்னுரிமை அடிப்படையிலான ஒதுக்கீடுபெற்றவர்களைத் தவிர, பிற அரசு இடங்களுக்காகப் போட்டியிட உரிமையுடையவராகுதல் வேண்டும்.

**5. விண்ணப்பிப்பதற்கான இட ஒதுக்கீடு**: பிரிவு 3இன் கீழ் முன்னுரிமை அடிப்படையிலான அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் சேர்க்கையானது, நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி இட ஒதுக்கீட்டினைப் பின்பற்றிச் செய்யப்படுதல் வேண்டும்.

**6. முன்னுரிமை இடங்களை நிரப்புதல்**: பிரிவு 3இல் அடங்கியுள்ள எது எவ்வாற்றிருப்பினும், முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கான சேர்க்கைக்காக, அரசு பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கையானது போதுமானதாக இல்லாத இடத்தில், அத்தகைய நிரப்பப்படாத இடங்கள், தனியார் பள்ளிகளில் படித்த மாணவர்களைக் கொண்டு நிரப்பப்படுதல் வேண்டும்.

**7. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**: (1) அரசு, அறிவிக்கையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் ஏதேனும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வரும் என்று

சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று செயலாற்றலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தால் அன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்டக் கூட்டத் தொடர் அல்லது அந்தக் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஏதொன்றிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமானால் அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை செய்யப்படுதல் ஆகாதுஅல்லது பிறப்பிக்கப்படுதல் ஆகாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**8. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்**: இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதற்கும் செயல்வடிவம் கொடுப்பதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் ஆணை ஒன்றினை வெளியிடுவதன் மூலமாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதென்று அல்லது உகந்ததென்று தனக்குத் தோன்றக் கூடிய இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

**வரம்புரை:** அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்ததற்குப் பின்பு செய்யப்படுதல் கூடாது.

**9. பணிப்புரைகள் வழங்குவதற்கான அதிகாரம்**: அரசு, அவ்வப்போது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக, அது உகந்ததென்று கருதும் அத்தகைய பணிப்புரைகளைப் பிறப்பிக்கலாம்.

நன்றி: தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை

## ஆண்டுக்கு இருமுறை வழக்குரைஞர், கவுன்சில் தேர்வு இறுதிப் பருவ சட்ட மாணவர்களும் எழுதலாம் இறுதிப் பருவ சட்ட மாணவர்களும் எழுதலாம்

‘அகில இந்திய வழக்குரைஞர் கவுன்சில் (ஏஜபிஇ) தேர்வு ஆண்டுக்கு இருமுறை நடத்தப் படுகிறது. இத்தேர்வில் இறுதிப் பருவ சட்ட (எல்எல்பி) மாணவர்களும் பங்கேற்கலாம்’ என்று உச்சநீதிமன்றத்தில் இந்திய வழக்குரைஞர் சங்கம் (பிசிஐ) தரப்பில் ஜனவரி 20இல் தெரிவிக்கப்பட்டது. சட்டப் படிப்பை (எல்எல்பி) முடிக்கும் மாணவர்கள் வழக்குரைஞராக பணியாற்ற வழக்குரைஞர் கவுன்சிலில் (பார் கவுன்சில்) பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்ய, பிசிஐ சார்பில் நடத்தப்படும் ஏஜபிஇ தேர்வில் தகுதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த ஏஜபிஇ தேர்வில் பங்கேற்க எல்எல்பி இறுதிப் பருவ மாணவர் களையும் அனுமதிக்க உத்தரவிடக் கோரி கடந்த 2024ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை 2024ஆம் ஆண்டு செப்டம்பர் 20ஆம் தேதி விசாரித்த உச்சநீதிமன்றம், ஏஇபிஇ தேர்வில் எல்எல்பி இறுதிப் பருவ மாணவர்களையும் அனுமதிக்க இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. எல்எல்பி முடிக்கும் மாணவர்கள் ஏஇபிஇ தேர்வுக்காக ஓராண்டு காத்திருப்பதை அனுமதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் அப்போது குறிப்பிட்டது. இந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள், விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் ஜனவரி 20 மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது பிசிஐ தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ஏஜபிஇ தேர்வு ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படுகிறது. இத்தேர்வில், எல்எல்பி இறுதிப் பருவ மாணவர்களும் பங்கேற்கலாம். அதற்கேற்ப ‘பிசிஐ விதிகள் 2026-ஐ பிசிஐ வகுத்துள்ளது’ என்றார்.

**நன்றி: தினமணி 22.01.2026**



THINK AHEAD. STAY AHEAD.
Bharath
UNIVERSITY
30
YEARS OF EXCELLENCE
RATING
AA+
பாரத் பல்கலைக்கழகம்
B.TECH
AERONAUTICAL ENGINEERING
AUTOMOBILE ENGINEERING
BIO-PROCESS ENGINEERING
BIO-INFORMATICS
BIO-MEDICAL ENGINEERING
CHEMICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
COMPUTER SOFTWARE ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
ELECTRONICS AND CONTROL ENGINEERING
ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
ELECTRONICS AND TELECOM ENGINEERING
FOOD PROCESS ENGINEERING
GENETICS ENGINEERING
INDUSTRIAL BIO-TECHNOLOGY
INFORMATION TECHNOLOGY
INSTRUMENTATION AND CONTROL ENGG.
MECHANICAL ENGINEERING
MECHATRONICS
NANO TECHNOLOGY
PRODUCTION TECHNOLOGY
M.TECH
[For Program details, please visit: www.bharathuniv.ac.in ]
EVENING PROGRAMME : B.TECH & M.TECH
MECHANICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME
Eligibility : Diploma / B.Sc.
M.S. BY RESEARCH AND Ph.D.
All Disciplines Full time and Part time
INTEGRATED PROGRAMME
B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years
MBA
[ Full time and Part time ]
MCA
HOTEL MANAGEMENT & CATERING
Courses : Diploma, B.Sc., & MBA
B.ARCH Eligibility : As per Council of Architecture norms
PLACEMENT 100%
1st among the participants from 125 Countries in International competition on Robotics
Job Placements : 100% with the highest salary package of ₹10 L. P.A.
Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP, Etc.,
Internationally acclaimed curriculum in tune with global trends.
Scholarships worth ₹12.00 crores to the meritorius students
27 Centers of excellence to promote research and industry aided / driven projects
SCHOLARSHIP (TUITION FEES GRANT) ■ 100%-State Toppers of all Boards ■ 50%-School toppers, participated in National Level Sports Competition / Event ■ 30%-Students having participated in State Level Sports Competition / Event ■ 35%-Students securing 90% above Marks in the Board examinations ■ 25%- "SARVA SIKSHA" Scheme I Scheduled Caste / Scheduled Tribe candidate I Parent being an Ex-servicemen I Physically Handicapped candidate I First Graduate candidate
HOW TO APPLY: Application forms can be obtained: In person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/-. Eligibility : As per UGC/AICTE norms.
BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. Ph 044-22290247
Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. Ph 044-42115251 / 91-98410 64199
Apply online : www.bharathuniv.ac.in
ADMISSION HELPLINE
1800-419-1441
Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity
BY REGISTRAR

Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of February 2026
SATTAKADIR - Tamil Law Journal /Monthly February 2026 / Publication First Week of Every month.
Registration of News Papers for India, Reg. No. 62767/92
Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026




வணக்கம் தமிழ்நாடு நிகழ்ச்சியில் கயானா நாட்டு முன்னாள் பிரதம அமைச்சர் மாண்புமிகு டாக்டர் மோசஸ் வீராசாமி நாகமுத்து அவர்களுக்கு உலகத் தமிழர் பொருளாதார கழக தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் மற்றும் வி.ஜி.பி. குழும தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் ஆகியோர் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்கள்.




வணக்கம் தமிழ்நாடு நிகழ்ச்சியில் இலங்கை அமைச்சர் திரு.பிரதீப் சுந்தரலிங்கம் அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் உலகத் தமிழர் பொருளாதார கழக தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் ஆகியோர் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்கள்.



அயலக தமிழர் தினம் விழாவில் மலேசிய பேராளர்களுடன் மலேசிய அமைச்சர் திரு.குலசேகரன் அவர்கள், உலகத் தமிழர் பொருளாதார கழகத்தின் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் அவர்கள்.



இலங்கை தலைநகர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உலகத் தமிழர் பொருளாதார கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத், இலங்கை துணை தூதர் டாக்டர் கணேசநாதன் கேஸ்தீஸ்வரன், இலங்கை மேற்கு மாகாண முன்னாள் ஆளுநர் திரு. செந்தில் தொண்டமான், நியூயார்க் தொழிலதிபர் திரு. ஜான் ஜோசப் மற்றும் நண்பர்கள்.



பத்ம பூஷன் விருது பெற்ற டாக்டர் பழனிசாமி அவர்களுக்கு சட்டக்கதிர் ஆசிரியர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நீதிபதி சிவசுப்பிரமணியம் (ஓய்வு), சென்னை உயர்நீதிமன்றம் கலந்து கொண்டார்.




வணக்கம் தமிழ்நாடு நிகழ்ச்சியில் கயானா முன்னாள் பிரதம அமைச்சர் திரு.மோசஸ் வீராசாமி நாகமுத்து, மொரிஷியஸ் அமைச்சர் திரு.ஹம்பிராஜன் நரசிங்கன் அவர்கள், உலக சாதனையாளர் விருது பெற்றவர்கள் மற்றும் பிரமுகர்கள்

On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Editor : Dr. V.R.S. Sampath**